[illegible]

[illegible]

1875

O,892 M.. MR
M75
116625

1183
3-75

உ

சிவமயம்.

# மார்க்கண்டேயர்

திவ்வியசரித்திரமாகிய

# நாடகாலங்காரம்

இஃது

கும்பகோணத்திலிருக்கும் மண்ஞ்சேரி

**நரசிம்மையரவர்களால்**

தஞ்சாவூரிலுள்ள பலபிரதிகளைக்கொண்டாராய்ந்து

சங்கீத சாஸ்திரமுறைமைப்படி

சிங்கார-வீர-பய-கருணை-ஆச்ய-அற்புதமென்கிற

ஷட்ரஸோபேதமாய்-இடப்பொருள்

ஏவல் கருத் திசைந்தகாலநிர்ணயப்படி

இராகதாளங்களமைத்து

**ஸ்ரீ-வீரசாமிநாயுடு**

மருமகரான

**வா-வரதராஜுலுநாயுடு**

அவர்களது

சற்குணநிதியச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

யுவஹு — ஆடிமீ ௳







சிவமயம்.

# மார்க்கண்டேயமகாமுனிவரது

திவ்வியசரித்திரமாகிய

# நாடகாலங்காரம்.

காப்பு—விநாயகர்துதி.

விருத்தம்-இராகம்-நாட்டை.

சீரானதிருக்கடவூரமிர்தலிங்கநாதருசெயலைவாழ்த்தி
பேரானசெந்தமிழாலேமார்க்கண்டமகாமுனிவர்பெருமைகூற
[illegible]ராதவினையெனையுந்தீர்க்குமபிராமிமுதற்செல்வனான
[illegible]ரானைமாமுகத்தோன்கருணைமிகுகமலபதங்காப்பதாமே

அமிர்தலிங்கர்துதி

புவனமதில்மிருகண்டமாமுனிவர்தவத்துதித்தப்புவிதனிலே
தவமிகுத்தமருவதியுடன்வரத்திற்சேர்மார்க்கண்டன்றனைமைகூற
குவலயத்திலுள்ளவெவர்க்குந்துதிக்கைதகொடுத்தருளியானைக்குளாயகற்றும்
வெளமிகுமமிர்தலிங்கருகிணம்போற்றரணைமெய்க்காப்புதானே.

சுப்பிரமணியர் துதி.

திங்கள்கதிர்குலவுந்திருக்கடையூரமூர்த்தலிங்கர்திருததாள்போற்றி
பங்கயத்தைதரிகர்வதனமார்க்கண்டன்பூசைசெய்தபழமைபாட
மங்களஞ்சேர்தினைப்புனத்தில்மகிழ்ந்திருந்தகுறவள்ளிமணவாளன்றன்
துங்கமிகுபதத்தினையானவுனிதனிலெந்நாளுந்துதிசெய்வேனே

கலைமகள் துதி.

அருகுபுனற்கொன்றைவில்வமாலையணிசடையூராதிகள்போற்றிப்
பெருமையுடன்பூசைசெய்தமார்க்கண்டன்றனைவெகுண்டுபிடிக்கவந்த
கருமையினன்றனையிட்டுகாலாலன்றுதைத்தபெருங்காட்சிகூற
மருமலர்வெண்டாமரையிலுதித்தவெள்ளைமேனிகலைவாணிகாப்பாம்

அறிஞர்வணக்கம்.

ஒப்பிலாமுனிமார்க்கண்டன் உணர்வுடன்பூசைசெய்து
தப்பிலாகமனைவென்றதகைசைமையாஞ்சரிதைதன்னை
செப்பமாய்பெரியோர்கேட்குஞ்சிறந்தநாடகமாயச்சொன்னேன்
இப்புவிதன்னிலுள்ளோரிதன்பிழைபொறுத்திடுவீரே

விநாயகர்வருகிற-விருத்தம்.

சுந்தரமுனிமார்க்கண்டன் சோதியினடிவணங்கி
வந்தனஞ்செய்யயீசன் மறலியையுதைத்தகாதை
முந்தவேபாடியாட மூஷிகந்தன்னிலேறும்
அந்தரிதவத்துதித்த ஐங்கரன்வருகின்றாரே

தரு-இராகம்-மத்தியமாவதி-ஆதிதாளம்

பல்லவி.

ஆதிதேவருந்தோணினார் -ஆகுவிலேறி- ஆதிதேவருந்தோணினார்

அநுபல்லவி.

பாதிமதியுங்கொன்றை நீதியுடனேயணியும்
பசுபதிஉமையின்ற கஜமுகவடிவுள
பகவனையனுதினம் பரவியேதுதிசெய (ஆதி)

சரணங்கள்.

மார்பில்பூண நூலிலங்க-தங்கமினமுத்த
வைசிரப்பதக்கம் துலங்க-மார்பிற்றரிக்கும்
ஆரமோகனமாலை யஸ்தகடகம்பூண்டு
அந்திமதாகவே விந்தைநடம்புரி
தந்திமிதிமிதிமி தரிகிடதோமென (ஆதி)



ஆதியில்வேதன் பூசித்துஆயிரத்தெட்டு
அண்டபிண்டமும்படைத்து வினைதநதெல்லாம்
பேரமுறுமலே பெறும்வரந்தருமீசன்
பித்தர்தனத்தி ஒதிக்கருள்தந்திட
சித்தமிரக்கியே ததிமிதிமிதிமியென (ஆதி)

தந்திவதனமும் மைந்துகரந்தனிலே
தரிக்குமங்குச மணிக்குவிந்தையதான
தொந்திவயிறுதுலங்க தோகைவல்லபையுடன்
தொந்திமிதரிகிட தொங்கிடகிடதக
தோந்தரிகிடதக தோந்திமிதிமியென (ஆதி)

கட்டியக்காரன்வருகிற-விருத்தம்.

தட்டிச்சல்லடமுந்தொப்பைதட்டியும்பிரப்பங்கோலுஞ்
சட்டமாயிருக்கிக்கட்டிச் சற்சனரெவலின்மெய்க்க
சிட்டராமிருகண்டேயர் சீருள்ளவாசல்காக்கும்
கட்டியக்காரன்வந்து களிப்புடன்தோணினானே

தரு-இராகம்-மத்தியமாவதி-ஆதிதாளம்

பல்லவி

கட்டியக்காரன்வந்தான்-ஒய்யாரமாக
கட்டியக்காரன்வந்தான்

அநுபல்லவி

கட்டியக்காரன்வந்தான் கைதனில்பிரம்புகொண்டு
மட்டில்லாப்புகழ்படைத்து வாழுமிருகண்டர்வாசல் (கட்டி)

சரணங்கள்.

கண்டவர்நடுக்கிடவே கைதனில்வெள்ளித்தடியும்
மட்டில்லாப்புகழ்படைத்து வாழுமிருகண்டர்வாசல் (கட்)

கள்ளைப்படிக்குவாசல் காப்பேனென்றுதீர்க்கமாக
சட்டமுடனேயிருந்து சாமிபராக்கென்று (கட்)

சிறந்தவெண்ணீரணிந்து சிவாகமத்தைப்புகழ்ந்து
மறையோதுமிருகண்டேய மாமுனிவர்வாசல்காக்கும் (கட்)

பராதாசாரியனுக்கும்-கட்டியக்காரனுக்கும்-ஆகிய-வசனம்

கட்டியக்காரன்.

நாலுவேதமும் ஆறுசாஸ்திரமும் பதினெண்புராணமும்இருபத்தெட்டாகமமும்முப்பத்திரண்டுதருமமும் அறுபத்துநாலுகலைஞானமும்

தொன்னூற்றாறு தத்துவமும் மறைவிக்ஞான முதலானசகலசாஸ்திரமும் வழங்கிவருகிற தபோதனராகிய மிருகண்டேயமகாமுனிவர் ருஷ்டயஆச்சிரமென்பதறியாமல்-தர்-புர்-யென்ன-தர்-குர்-யென்ன-கணை-கணையென்ன-ஜணை ஜணையென்ன-டக்கு-டிக்கு-கண்ணடப்பு-டிப்பென்ன-லொடபிடாயென்ன-கட-பிடாயென்ன-படமடமாவென்ன - என்னவோய் தடபிடல் பண்ணுறீங்களே நீங்களெல்லாரும் யெங்கேயிருந்து வந்தீங்கோ நீங்கள்யாரவோய்-ரொம்பக்கண்காட்சியா வழுந்துறீங்கோ.

(பரதாசாரியன்)நாங்களெல்லோரும் வித்வாம்ஸாள்வோய்

(கட்டி)சிறகில்லாமல்யெத்தனையோ சிலை ஆரம்பப்பிங்கோ.

(பரதா) என்னவோய்மனுஷர்களுள்யாருக்காவதுசிறகிருக்குமா

(கட்டி)பின்னேயென்னவோய் அம்சங்கள்வந்திருக்கிறோமென்று சொன்னீர்களேவோய்

(பரதா)என்னடா ஸவாசதோஷமோ காங்கள்பாடகாளப்பா

(கட்டி) உங்கள்முகறக்கட்டை இந்தவாசலில் காட்டாதிங்கோ என்னையாவதா காமாந்தகாரத்திலே அகப்பட்டுக்கொண்டு கரைகடக்கவழியில்லாமல் தத்தளிக்கு கண்ணே பெண்ணே காமன்கணையே கருணையங்கடலேயென்று கொண்டாடுகிறகாமுகர்களிருக்கிறபெரியபட்டணத்துக்குப்போனால் உங்களுடையகோறிக்கையங்கேசெல்லும் இங்கேயென்னகாரியம்போம்போவோய்.

(பரதர்) என்னடாயப்பா கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோலே பேசுகிறாய்

(கட்டி) சீ,சீ,போங்கள்போங்கள் திருநீற்றுப்பூசைப்பார், பட்டிமாட்டுக்குச்சூடுபோட்டதுபோலே கழுத்திலே ருத்திராட்சத்தைப்பார் ஆனையின்கழுத்தடியில் அரிவுகயிர்கட்டினதுபோலேகழுத்திலே தாவடம் கருத்திலே அவகடம் இந்த ஆச்சிரமத்துக்குள்ளேவா உங்களுக்குத் தகாதுபோங்கோபோங்கோ.

(பரதா) பொருமையெங்காளும் புகழ்சேர்க்கும் எங்கள்மே லிவ்வளவு கோபம்வந்தால் எப்படிப்பொறுப்போமப்பா,

(கட்டி)பாஷாண்டத்தனம் பண்ணுகிறவர்களுக்குத் ஆர்க்ஞானசிரோமணிகளிருக்கிறவிடத்திலேஅதுவலென்ன. கொல்லன் உலைக்களாயிலேகொசுமாய்க்குமா.

(பரதர்)என்னடா இதுதாறு அடாபடுபாவி நாங்கள் சங்கீதம் பாடப்பட்டகவீசுவரான்வோய்

(கட்டி) தட்டுக்கெட்ட குட்டிச்சுவர்களாஇருக்கு இவ்வளவுதுனருபடியென்னநீங்போய் துரைதேகானபோய் கொளுப்போட்டுவருகிறேனென்



இதிர்கள் அதோதென்னமரம் பலாமரம்மாமரம்கொய்யாமரம் முதலான இன்னமனேகமர மிருக்குது வனத்திலே யிருக்கிற புட்பச்செடிகளை தும்சம்பண்ணுமல் கனிகாய்கிழங்குகளைதோண்டி அதிகமாய்சேதப்படுத்தாமல்வேண்டியமட்டும்சாப்பிட்டுப்போட்டு கனிசலத்தைதாகத்துக்குச்சாப்பிட்டுப்பிட்டு நீங்களிருக்கிற கிஷ்கிந்தாபுரத்துக்கு இப்போதேபோய்விடுங்கள் நீங்கள் வாலில்லாக்குரங்களோ.

(பரதர்) என்னடாயிந்தமரியாதை தப்பாவிந்தாலோமென்னென்னமோயென்னிப்பேசுகிறாய் நாங்கள்சிவபத்தியான கதைகளங்கீர்த்தனங்கள் பாடப்பட்டபாகவதசிரோமணிகளடா அப்பா

(கட்டி. சிவசிவாசிவசிவா அபசாரம்அபசாரம் சமஸ்தாபராதத்தையும் பொறுத்து மன்னியுங்கள் சிவனடியார்களே ஆருடையகோபம்பொறுத்தாலும்சிவனடியார் கோபம்பொறுக்கப்படாது இவ்வளவுபடர்ந்தவர்த்திவேபுகைதுழையாதகுகைகளைத்தேடி எங்கேவந்தீர்கள்

(பரதர் இந்தஆச்சிரமத்திலே சிவபக்தர்களுக்கு மிகுந்தஉபசாரம் நடக்கிறதென்று கேழ்விப்பட்டுவந்தோம் மகாபிரபு.

(கட்டி.) இவ்வளவுதூரம் பிரயாசைப்பட்டுவந்தீர்கள் பரதசாஸ்திரத்திலே பரதம் அனுமத்பாரதம் நாரதபாரதம் இராவணபாரதம் அகஸ்தியபாரதம்-பிரமபாரதம்-இந்தவகையிலே நீங்களெந்தக்குப் பாண்டித்தியமுண்டு

(கட்டி.)வித்வச்சிரோமணியே எந்தவிஷயத்திலும் கொஞ்சம்கொஞ்சம் கூடியமாத்திரம் மதித்திருப்போம்.

(கட்டி)நீங்களறிந்ததாளங்களிலே யென்னென்னதாளங்களுண்டு

(பர) தாட்டை-நவரோஜ-பைரவிஆனந்தபைரவிஇதுமாதிரிதெரியும்

(கட்டி. தாளங்களிலே எத்தனை அதுதெரியும்

(பர்த ஆதிதாளம்-அடதாளம்-ஜம்பைதாளம்-திரிபுடைதாளம் - ருபகதாளம்-ஏகதாளம்-மட்டதாளம் இதுகள்தான் தெரியும்

(கட்டி)இவ்வளவுதானா கேட்டுமாராகங்களில்லையாதுவிலையே

(பரதர் நீர்கற்றதைச்சொல்லும்பார்ப்போம்

(கட்டி.) நீர்யார் நாகம்தெரியுமா .

(பரதர் கொள்ளைத்தின்றுகுளவிட்டால் நீரு பூருயென்று தாக்கொடிக்கும் எப்பமகாவித்துவானாயிருக்கிறாய் நீர்பாருக்குமா இப்படிகேட்பது;

(கட்டி) அமா ஆமா அதான் புடிச்சுக்கோ புடிச்சுக்கோ

பாரதர், இன்னமென்னடா அப்பா

கட்டி, கோவிலுகளிலே சுவாமிகள் புறப்பாடாகும்போது முன்னே முன்னே கொண்டுவாரார்களே அந்தராகந்தெரியுமா

பாரதர், என்னடா அப்பா ரொம்ப அபுருபமாயிருக்குது தாங்கள் பார்த்த துமில்லெகேட்ட துமில்லெ இராகத்துக்குருவுண்டா ஆகாரதியுண்டா சுவாமிபுறப்படும்போது முன்னே முன்னே நடக்கிறவதுயென்னடா அப்பா அதிசயமாயிருக்குது

கட்டி, சாமிகள்புறப்படும் முன்னே முன்னே யென்னவருகிறவழக்கம்சொல்லுங்கோபார்க்கலாம்

பாரதர், சுவாமிபுறப்படும்போது நிசான்கள் ஆலவட்டமகாதோரணங்கள் சின்னமேளம் பெரியமேளம்சாமரம் சுருட்டி இதுகள்தான்வரும்

கட்டி, அதான் அதான் கடைசியிலேசொன்னியே அந்தராகந்தான் புடிச்சுக்கோ புடிச்சுக்கோ

பாரதர், இந்திராகத்தை எத்தனை நாளில் சிட்சைபண்ணிக்கொண்டீர்

கட்டி, என்டா அப்பா ஒருமாமாங்கம்பன்னிரண்டுவருஷகாலம் இராத்திரிப்பகல் அகோராத்மாச்சுது

பாரதர், நல்லது இதுதானுயின்னமுண்டா.

கட்டி, சத்திரஞ் சாலைகளுக்குவிசாரணைகர்த்தாவாய் வைக்கிறார்களே அந்தராகந்தெரியுமா

பாரதர், என்னடாப்பா வாசாமகோசரமா யிருக்குது இதுக்கெத்தனை காலம்கார்த்தா யாரிடத்திலே சிட்சையப்பா

கட்டி, என்னவோய் நம்மைகற்றறிமோர்ழையாக்குறீங்கோ விதவாம்சாளெல்லாம் தாங்கள்தான் லோகத்திலே பெரியவுங்கோர்நமக்குளதிரில்லைபென்று எண்ணி ஒருவரையொருவர்பழிக்கிறவழக்கத்தான் ஆகிலும் நம்மிடத்தில்லை உங்கள் சைகைக் காட்டீங்கோ ஐயா.

பாரதர், ஆனால் இந்தகேள்விகேட்டஇராகம் எந்தபாதத்திலே யிருக்குது எங்களுக்குதெரியச்சொல்லும் கட்டியக்காரா



(கட்டி) ஓய் நல்லயூகமாய்க்கேளுங்கள் இதுஆகாத்யபாதத்திலே ஆதியந்தமற்றகாண்டத்தில் துராசார பிரகரணத்திலே கிஷ்கண்டகாபிரமாணத்திலே கிழ்வாய்லெக்க அத்தியாயத்திலே தான் இருக்கும் வோய்.

(பாரதர்) ஆகா நன்றாயிருக்குது இப்பேர்ப்பட்ட கிரந்தங்கள் எங்களுக்கு தவசுபண்ணினாலும் அகப்படுகிறது அபுருபந்தான் நீர்கேட்டது தகமாசுராகமாய் தோணப்படுது.

(கட்டி) நல்லது நீங்கள் இங்கேதானே யிருங்கள் நான்மிருகண்டேயமகாமுனிவருடைய சமயந்தபார்த்துவந்து உங்களை அழைத்துக்கொண்டுபோய் தெரிசனம்பண்ணி வைக்கிறேன்.

(பாரதர்) அப்படியே ஆகட்டும்போய் வாரும்பிள்ளாய்-

கட்டியக்காரன்சொல்-பொதுவிருத்தம்-

சுத்தமெய்ஞ்ஞானருப சோதியினுணர்ச்சியாலே
சித்தமுந்தெளிவுண்டாகி சின்மயானந்தன்பூசை
நித்தமுமியற்றிமெத்த நேமமாய்வணங்கிப்போற்றும்
உத்தமமிருகண்டேயர் உசிதமாய்சபையில்வாரார்.

வசனம்.

மெய்ஞ்ஞான விளக்கத்தின் உணர்ச்சியாலே சித்தத்தில் தெளிந்து பரமசிவனை நித்தமும்பணிந்து நேமநிஷ்டைதப்பாமல் போற்றப்பட்ட உத்தம மகாமுனிவரான மிருகண்டேயர் வருகிறவிதங்காண்க.

தரு-இ-ம-சவுராஷ்டகம்-அடதாளம்.

கண்ணிகள்.

கட்டியமாவுரியும் கையிற்றண்டுகமண்டலமும்
மட்டில்லாத்தவங்கள்செய்யு மாமுனிவரும் தோணினார்

செஞ்சடைப்பஞ்சாட்சரமும் தயானமுடனேதரித்து
மிஞ்சவேதங்கள்செய்ய மிருகண்டேயரும் தோணினார்

எண்ணில்லாதசிஷர்சூழ யேகமனதாய்நடந்து
கண்ணில்கண்டேயர்துதிக்க மிருகண்டமுனிவர் தோணினார்

கையினிற்செபமாலையும் கனத்தவேதபுஸ்தகமும்
மெய்யினில்விபூதிபூசும் மிருகண்டேயர் தோணினார்

பாதந்தனில்பாதக்குறடும் பாங்குடனே தான்தரித்து
வேதசாஸ்திரம்முழங்கிக்கொண்டு வேதியரும் தோணினார்

மிருகண்டேயர்-கட்டியக்காரனுக்குச்சொல்-விருத்தம்.

சொன்மொழி தவறிடாத சுகுணகட்டியக்காராகேள்
நன்மனத்துடனேசென்று நன்மருத்வதியாளென்னும்
சின்மயரநந்தன்மெச்சும் சேயிழையாளையிப்போ
தொன்மையாஞ்சபைக்கழைத்து துரிதினில்வருகுவாயே.

வசனம்.

அகோ வாரும்பிள்ளாய் கட்டியக்காரா தேவ சேவர்களும் மெச்சத்தக்க கற்பின்மிகுந்த எனது பாரியாளான மருத்வதியை சபைக்கழைத்துக்கொண்டு வாரும்பிள்ளாய்.

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

கட்டியக்காரன்-மருத்வதிக்குச்சொல்-விருத்தம்.

மெய்ப்பொருவிழியாளான மருத்வதித்தாயேகேளாய்
செப்பருந்தவத்தோர்மெய்க்கும் சீருள்ளமிருகண்டேயர்
ஒப்பருஞ்சபையைநோக்கி யுளமதில்மகிழ்ச்சியுற்று
இப்பவேவரச்சொல்லென்று யியல்புடனுரைத்திட்டாரே.

வசனம்.

அகோவாருமம்மாதாயே உமது பிராணநாயகரான மிருகண்டேய முனிவரானவர் அதிக உச்சாகத்தோடு அருந்தவத்தோர்கள் நிறைந்திருக்கிற சபைக்கு அழைத்துக்கொண்டு அதிசீக்கிரமாய் வரச்சொனனார் எனதுபட்சமுள்ளதாயே.

மருத்வதிசொல்-வசனம்.

ஆனாலப்படியே வருகிறேன் கட்டியனே.

கட்டியக்காரன்சொல்-பொதுவிருத்தம்.

செஞ்சிலைமாரன்கெஞ்சி சேவடிதன்னைப்போற்ற
கொஞ்சியமயிலினங்கள் கோதைமுன்னட்டமாட
தஞ்சினையுண்டகண்டனுனைதேவனையுள்நாடி
மஞ்சினைப்பழித்தகூந்தல் மருத்வதிவருகின்றாளே.

வசனம்.

அகோகேளும் புண்ணியவான்களே மன்மதன் கெஞ்சமயிலினங்கள் கொஞ்ச நஞ்சுண்டசர்வரைத் தியானித்துக்கொண்டு நன்மனதோடு மகாபதிவிருதா சிரோன்மணியான மருத்வதி வருகிறவிதங்காண்க.

தரு-இ-ம்-நாட்டை-திரிபுடை.

பல்லவி.

மாதுவந்தாள்-மருத்வதி-மாதுவந்தாள்.



அநுபல்லவி.

மாதுவந்தாளே மங்கைக்கரசென்ன
மாமுனிவரும் கூடவே
சோதிமுதல்தொழும் அரனைநாடியே
தோகையாள்தவஞ் செய்யவே அம்மன் (மாது)

சரணங்கள்,

முத்துச்சுட்டியும் ரத்நத்தொங்கலும்
கொத்துமோகன மாலையசையவே
சித்திடைதனில பொற்சரிகைச்சேலை
சிறந்தலலொளி விலசயவே அம்மன் (மாது)

தண்டைச்சிலம்புடன் கொலுசுவண்டையமும்
தாளிலேதிகழ்ந்த திசைகள்பாடவே
கொண்டைச்சொருகினில் ரத்தினக்குப்பியும்
கொத்துமுத்துச்சர மிசையவே அம்மன் (மாது)

அஞ்செழுத்தினி லாடுப்பொருள்தனக்
கடுமையாமருந் தவத்தோர்களிக்கவே
நெஞ்சமெனுங்கருங் கல்லையுருக்கியே
நிறைந்தமாதவம் பெருக்கியே அம்மன் (மாது)

மருத்வதிவருகிற-விருத்தம்.

மேனகையரம்பையென்ன மெல்லியிந்திராணியென்ன
கானமயிலுமென்ன கருங்குயிலன்னமென்ன
மீனினைப்பழிக்குங்கண்ணாள் மிருகண்டர்பாரிதானும்
வானுலகோர்களேபோற்ற வாகுடன்வருகின்றாளே.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தளேமருத்வதி வனத்தினிலன்னமென்ன.

அநுபல்லவி.

செந்தாமரைபொற்பதச் சிலம்புகலகலென்ன(வந்தாளே)

சரணங்கள்,

மதனும்ரதியுமென்ன வாசவன்சகியென்ன
இதமாய்மிருகண்டேயர் இனிதாய்க்கூடிய அம்மன்(வந்தாளே)

மேகலாபரணஞ்சூட்டியமேல்வளை ஒட்டியாணம்பூட்டி
பாகுசேர்மொழியாளீசர் பதம்நாடியே அம்மன்(வந்தாளே)

கொஞ்சுகிளியன்னமென்ன கோதையர்க்கரசென்ன
பஞ்சினுமெல்லடியாள் கணவன்பாதம் நாடியே அம்மன்(வந்தாளே)

மருத்வதி-மிருகண்டேயருக்குச்சொல்-விருத்தம்.

தர்மமறைபுராணமென்னுஞ் சாற்றிய விதங்களெல்லாம்
விதிவழியதிந்தேயோதும் வேதியாசரணமையா
பதிதனிலிருந்தயென்னைப் பாங்குடனமுக்கத்தாது
அதிதுரிசாய்விடுத்த அகத்தியமுனைதடிடோ.

வசனம்.

அகோவாரும் என்பிராணநாயகரே நாலுவேதங்களும் ஆறுசாஸ்திரங்களும் பதினெண்புராணங்களும் சொல்லப்பட்ட முறைமைதவறாமல் ஆராய்ந்தறிந்து தெளிந்த உமதுபாதத்துக்குச்சரணமையா இப்படியாது ஆச்ரமத்திலேயிருந்த என்னை அதிசதுரிதமாய்த் தூதுவிடுச்சொன்னதற்கு ஏற்பிய காரணமேதோ அதனைதிருவுளமகிழ்ந்துரைக்க வேண்டுமையாசுவாமி.

மிருகண்டேயர்-மருத்வதிக்குச்சொல்-விருத்தம்.

அன்னமேசொல்லக்கேளாய் அன்புடன்தேவலோகம்
மன்னவர்பதிக்குயானும் வாகுடனேகிவாரேன்
தன்னவர்தவத்தோர்தேவர் தரணியோரெவர்வந்தாலும்
உன்னதப்பதங்கள்போற்றி உபசத்தனுப்புவாயே.

வசனம்.

அகோவாரும்பெண்ணே என்பிராண நாயகியான மருத்வதிமாதே நான் தேவேந்திரமகாராசன் சபைக்குப்போய் வருகிறேன்யாராவது அதிதேசி பரதேசி தவசிகள்தேவர்கள்யாரவந்தாலும் அவர்களையழைத்துவந்து அர்க்கியபாத்யாதி சோடசஉபசாரம்பண்ணி யனுப்பும்பெண்ணே.

மருத்வதிசொல்-தரு-இ-ம்-உசேனி-அடதாளம்.

கண்ணிகள்.

என்னவென்றும்மைப்பிரிந் திருப்பேன்முனிநாதா-சுவாமி
எப்படிநானிருப்பேன் இல்லனந்தனிலேநாதா-முனிநாதா

மிருகண்டர்-தரு.

கன்னல்மொழியேமின்னரசேயெந்தன்பெண்ணேநீகேளாய்-மனங்
கலங்கிடவேண்டாம்குலங்களுக்கீனம் கண்ணே-பெண்ணே

மருத்வதி-தரு.

வர்னவர்சபைநாடியெந்தன் முனிநாதா-போய்
வாறேனென்றென்னுடன் நீருரைசெய்தீர்நாதா-முனிநாதா

மிருகண்டர்-தரு.

கானகத்திலதனித்திருக்கவெந்தன் பெண்ணே-கேளாய்மனங்
கலங்கிடவேண்டாம்சடுதியில்வாறேன் பெண்ணே-அடிகண்ணே



மிருகண்டேயர்-மருத்வதிக்குச்சொல்-விருத்தம்.

அரிவையேசொல்லக்கேளாய் அமரர்சபைதன்னிலிப்போ
தெரிவைநீவரவென்னுந் தெய்வலோகம்போய்வாறேன்
பரிவுடன்சென்றுயானும் பாங்குடன்வருகுமட்டும்
கருணையாய்வந்தபேர்க்குக்கனியமுதளித்திட்டாயே.

வசனம்.

அகோ வாரும்பெண்ணே மருத்வதீ பெண்பிறவியானதினாலேதேவர்சபைக்குவருவது கிரமமல்ல ஆகையினாலே இவ்விடத்தில் யாராவது அருந்தவசிகள்வந்தால் அவர்களுக்குக் கனிகாய் கிழங்குகள் அன்னபானங்கள்கொடுத்து ஆதரித்துக்கொண்டு அவர்களாலேசொல்லப்பட்ட புண்ணியகதைகளைக் கேட்டுக்கொண்டு தைரியமாயிரு நானதிசீக்கிரத்தில் வந்து விடுகிறேன்பெண்ணே மருத்வதி.

மருத்வதி-மிருகண்டேயருக்குச்சொல்-விருத்தம்.

ஐயனேமுனியேயெந்தன் உள்ளபிராணநாதா
வெய்யினில்சந்திரனல் மேனியுமுருகிடாதா
பையவேயுபசரித்துப் பணிவிடையாவுஞ்செய்ய
தையலாள்கூடவந்தால் தரணியிற்புகழுண்டாமே.

வசனம்.

அகோவாரும் என் பிராணநாயகரே நீர்நடக்கிறவழிகளிலேவேர்த்துவிடாய்த்து களைத்தவேளையில் உபசரித்துக்கொண்டு நானும் கூடவே வருகிறேன் உம்மைவிட்டுப்பிரிந்து ஒருநிமிஷப்போதாவது இருக்கமாட்டேன் என்பிராணநாயகரே.

கட்டியக்காரன்-வசனம்.

அடேயப்பா காக்கையைக்கண்டால் பயந்திருப்பாள் கழுகுக் கென்றால் துணிந்திருப்பாளாம் பார்த்தீர்களா ஐயா பாசாங்கு பண்ணுகிறதைப்பாருங்களேன்.

மிருகண்டேயர்சொல்-தரு-இ-ம்-கமாசு-ஆதிதாளம்.

கண்ணிகள்.

தெய்வலோகம்போய்வாறேனென் சின்னதசலங்காதேபெண்ணே
தையலர்க்கரசிமின் தந்திரவிடையென்கண்ணே (தெய்வ)

மருத்வதி-தரு.

எப்படியும்மைநான்பிரிந் திருப்பேனேயென்பிராணநாதா
செப்பியமொழியைக்கேட்டு சிந்தைதவாடுதேயென்நாதா (எப்ப)
போகமனம்வருகுமோயென்பிராணநாதனே யென்சுவாமி - நல்ல
ஆகமபுராணவேதமறிந்திடுவீரே எந்தன்நாதா (எப்ப)

மிருகண்டர்-தரு.

பஞ்சணைமெல்லடிநோக பாலவட்டப்பாயேபெண்ணே
சஞ்சலப்படாதேபோக தயவுசெய்வாய்துரிதம்

கூடிப்பிரிவாருமுண்டோ கோதையர்மனங்கலங்க
ஆடியேதேகமடிமைக்கு தையனேநானென்னசெய்வேன்

மிருகண்டேயர்-மருத்வதிக்குச்சொல்-விருத்தம்.

சரணமென்றடிவணங்கும் தையலேசொல்லக்கேளாய்
வர்ணமாமகுட பங்களமாடமாளிகையுங்கள்,
தரணியிற்பெரியோர்களெல்லாம்பருமசேதிரங்களுண்டு
ஆரணிடமெங்கும்வேர்க்கெல்லாம் அதிபசாரங்களுண்டாய்.

வசனம்.

அகோவீரும் பெண்ணே மருத்வதி நாம்போகிற மார்க்கங்களிலே அநேகவிதமாடமாளிகை, கூடகோபுரம் ஆரண்யமோன் அன்னசத்திரங்கள் மிகுதியா யிருப்பதால் உபசாரத்துக்கு யாதொரு குறைவுமில்லை நீ இவ்விடத்தில் தானேயிருந்து அருமை அப்பியாசங்களாய் வந்தவர்களை ஆதரித்துக்கொண்டு சுகமாய்வாழ்ந்திரும் பெண்ணே.

மருத்வதி-மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

சதுர்முகன்சபைக்குநீர்போய்சந்நிதியில்வருவீரோதன்
வதுவைகொண்டநாள்முதல்நான்பிரிந்ததில்லை
பதுமைசொல்கதையைப்போலபாவைநான்தனியானேன்
புதுமலர்குழலியர்க்குப்புனிதனே சரணஞ்சுவாமி.

வசனம்.

அகோவாரும் என் அன்புள்ள பிராணநாயகரே பிரம சபைக்குப் போய் அதிசீக்கிரத்திலே … உங்குமாலையிட்ட நாள்முதல்இதுவரையிலும் இணைபிரிந்ததேயில்லை … பதுமை கதையிலே சொல்லுகிற கலையைப்பிரிந்தமானைப்போலேயும் … பெரியருடன் கதைபோலே செய்யாமல் அதிசீக்கிரத்தில் வாரும்கொஞ்சமாலையச்சூடிய என்னருகில் சேரும்.

மிருகண்டேயர்-வசனம், ஆ, ஆ, அப்படியே அப்படியே.

கட்டியக்காரன்-விருத்தம்.

மங்கையின்மனதைத்தேற்றி மார்பில்ருத்ராட்சம்பூண்டு
செங்கையில்வேதநூலும் சிறக்கவேதண்டுங்கொண்டு
பொங்கமாமிருகண்டேயர் புனிதர்தன்சபையைநோக்கி
சங்கராசிவனேயென்று தவமுனிவருகின்றாரே.

வசனம்.

அகோகேளும் புண்ணியவான்களே இந்தப்பிரகாரமாய் விசனப்படுகிற தன்னுடைய பாரியாளைத்தேற்றி வேதபுஸ்தகமும் தண்டு கமண்டலமும் கையிற்கொண்டு தேவசபையைநோக்கி மிருகண்டேயமகாமுனிவர் நடக்கிறவிதங்காண்க.



தரு-இம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

வேதமுனிநடந்தாரே விண்ணோர்சபைக்கு (வேதமுனி)

அநுபல்லவி.

மாதர்கட்கரசியாம் மருத்வதிமாதினைவைத்து
ஓதுஞ்செபமுமறந்து உயர்ந்தபதம்அடுத்து (வேத)

சரணங்கள்.

சிரசில்மகுட மிலங்க-சிங்காரமாக
செபமாலைகையில் ஜாலிக்க
விரைவில்நடந்துநேச வேதமுனிவர்பேச
பரவியதென்றலும்வீச பரமானந்தவுல்லாச (வேத)

மெய்யில் நீறணிந்து-ஒளிசிறந்த
வெளியெங்கணும் திகழ்ந்து
கையில்கமண்டலமும் சித்திரமயில்தொப்பையும்
வையகம்புகழவும் மனதுமகிழவும் (வேத)

செங்காவியுடுத்துங் கடந்து-சிவந்தபல்லை
செலுபோலடையும் கட்டி
பொங்கமுடனேயோடிப் புண்ணியசபைநாடி
சங்கராபரணம்பாடிச் சதுர்முகன்பதிதேடி (வேத)

கட்டியக்காரன்-விருத்தம்.

வாசவன்பதியைநாடி மாமுனிசென்றபின்பு
நேசமாய்வனத்திலாழும் சேரிழையிருவர்தாமும்
ஆசையாய்மருத்வதிப்பெண் அடைந்தஉல்லாசமாதில்
மாசில்லாதவத்தோர்போலே மகிழ்ச்சியாய்வருகின்றாரே.

வசனம்.

அகோகேளும் பக்திசிரோமணிகளே இந்தப்பிரகாரமாய்த் தேவலோகயாத்திரையாநாடி மிருகண்டேயமகாமுனிவர் போனபின் வனசரிகளான தேவகன்னியர் மிகுந்த மனோவுல்லாசத்தோடு யாதொரு கவலையில்லாத மருத்வதியம்மாளிருக்கிற ஆச்சிரமத்தை நாடிவருகிற விதங்காண்க.

தரு-இம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாரேரிஷிகன்னியர் - உல்லாசமாகவந்தாரேரிஷிகன்னியர்.

அநுபல்லவி.

செந்திருவைநிகரொன்ன செம்பொற்பணிகள்மின்ன
விந்தைரதியிவரென்ன மெல்லியர்களன்ன (வந்)

சரணங்கள்.

நாகரத்னச்சுட்டியாட-காதிலணிந்த நவரத்னத்தோடுமாட
வாகுவச்சிரக்கொப்புமிட்டு மாமதிகதிரும்தொட்டு
தோகைமுத்துரவிக்கையிட்டு சுத்தசசடைபின்னலிட்டு (வந்)

சித்திடைதனிலணிந்தநல்லசரிகைச் சேலையிடையில்நெகிழ்ந்து
முத்துமாலையணிந்து குச்சுமாலைக்கச்சணிந்து
வெத்தமயில்போலநடந்து பதினிமீதில்மகிழ்ந்து (வந்)

செம்பொன்வளைக்கரம்வீசிசிங்காரமாக சித்திரமொழிகள்பேசி
சம்பிரமவைபோகத் தையலர்ஒய்யலாக
மின்பரசவுருவாக எந்நிறையினேதிராக (வந்)

—(*)—

மருத்வதிதேவகன்னியர்க்குச்சொல்- விருத்தம்.

செந்திருவடியேபோற்றி தேன்மொழிமாதேபோற்றி
கந்தனையீன்றாய்போற்றி கருணையங்கடலேபோற்றி
எந்தனைநாடிநீங்க ளிவ்வனந்தனனிலேதான்
வந்தகாரியங்கள்தன்னை வாகுடனுரைசெய்வீரே.

வசனம்.

அகோவாரும்சரணஞ்சரணமம்மா தபேரலட்சுமியோ பார்வதியோ சரஸ்வதியோ கருணவதியோ நீங்களார் எங்கேவந்தீர்கள் வந்தகாரியத்தை இன்னதென்று சொல்லவேணுமம்மா.

மருத்வதி-தரு-இ-ம-காம்போதி- ஆதிதாளம்.

கண்ணிகள்.

எங்கிருந்துயெங்கேவந்தீ ரம்மம்மாரே-நீங்கள்
எனக்கறியச்சொல்லவேணும் தாயமாரே

தேவகன்னிகள்-தரு.

மங்கைமருத்துதியாரே சொல்லக்கேளாய்-பெண்ணே
வனத்திலநாடிவந்தோம்நாங்கள் பெண்ணரசே

மருத்வதி-தரு.

வனத்தைநாடிவந்தநீங்க ளாரம்மா-தாயே
வானவர்பதியோநீங்கள் சொல்லுவீர்தாயே

தேவகன்னிகள்-தரு.

வானவர்மறைமுனிவர் வந்துவணங்கும்-உமையாள்
மலரடியைப்பூசைசெய்யும் பெண்கள்நாங்களே



மருத்வதி-தரு.

மலரடியைப்பூசைசெய்யும் பெண்களானால்-இந்த
வையகத்தில்வந்தசேதி சொல்லுவீர்தாயே

தேவகன்னியர்கள்சொல்-விருத்தம்.

வந்தகாரியங்கள்கேட்ட மருத்வதிமாதேகேளாய்
உந்தன்செந்தவத்தினாலே உளமகிழ்ந்திவடம்வந்தோம்
சிந்தையில்மிகமகிழ்ந்து சிறுபசிபுசிப்பளித்து
விந்தைசேர்வுலகுக்கெம்மை விரைவினிலனுப்புவாயே.

வசனம்.

அகோவாரும்பெண்ணே மருத்வதிமாதே உன்னுடைய ஸ்ரீ வபுண்ணியவசத்தினாலே சந்தோஷித்துநாங்கள் இவிடத்திற்குவந்தோம்இப்போது மெத்தப்பசியால் இளைப்பாயிருக்கிறது எங்களுடைய பசிதாகத்தைத்தீர்த்து எங்களைதேவலோகத்துக்கனுப்பும்மம்மதாயே.

மருத்வதி-விருத்தம்.

கன்னியரிருவர்நீங்கள் களிப்புடனெழுந்துவாரீர்
பன்னியபஞ்சபட்ச பாடலான்னங்களுண்டு
உன்னிதமாய்த்தாம்பூல முளமகிழ்ந்தருந்துவீர்கள்
கன்னியர்பசியையாற்றத் தகவுடனடைந்தீரே.

வசனம்.

அகோவாருந்தேவகன்னிமார்களே மகாசந்தோஷமா யெழுந்திருந்துவாருங்கள் பஞ்சபட்ச பரமான்னமும் பாகமாயிருக்குது உண்டு தாம்பூலகரணங்கள் பண்ணிக்கொண்டு கன்னியர்களே உங்கள்பசியை ஆற்றிக்கொண்டு தேவருலகத்துக்குப்போய் வாருங்கள் கன்னியர்களே.

தேவகன்னியர்-விருத்தம்.

வணங்கிடமாதேமெத்த மாதவஞ்செய்யும்பெண்ணே
குணங்களாலுயர்ந்தமின்னே கொழுனநாரெங்கேசென்றார்
மணந்திகழ்ந்துனக்குண்டான மக்களுமெங்கேபோனார்
இணங்கியிவ்வண்மையெல்லா மெங்களுக்குரைத்திடுமே.

வசனம்.

அகோவாரும்பெண்ணே மருத்வதிஉன்னைப்போலே அருந்ததியுத்திற்சிறந்தோர் மகாஅருமையாக்கும் நீமகாகுணசாலியானவள் உன்னுடைய பிராணநாயகரெங்கே போயிருக்கிறார் உன்குழந்தைகளெங்கே யிருக்கிறார்கள் இந்தவிவரங்களைச்சொல்லிவாரும்பெண்ணே மருத்வதி.

மருத்வதி-கன்னியருக்குச்சொல்-விருத்தம்.

மெள்ளவேயிங்குவந்து விளஞ்சியபெண்கள்கேளீர்
வள்ளலார்பிர்மதேவர் மாசபைக்கேகிஞர்காண்
கள்ளமில்புதல்வரில்லை கடவுளாருளிதாகும்
உள்ளதுசொன்னேனிப்போ உண்டருள்கூறவீரோ;

வசனம்.

அசோவாரும்பெண்களா நீங்கள்யென்னுடைய யோகட்சேமத்தைவிசாரித்தீர்கள் சொல்லுகிறதற்கு மிகுந்த நாச்சிக்கையிருக்குது ஆகிலும் கேளுங்கள் எனதுபத்தாவானவர் பிர்மசபைக்கிப்போயிருக்கிறார் எனக்குகுழந்தைகள் இதுவரையிலும் கடவுளினுடைய கிருபையில்லாம லிருக்குதுயதார்த்தஞ்சொன்னேன் நீங்களிருவரும்தயவுசெய்து உங்களுடைய பசிதீரசாப்பிட்டுப்போட்டு தாம்பூலந்தரித்துக்கொள்ளுங்கள் பெண்களே.

கன்னியர்கள்சொல்-தரு-இ-ம்-பிலஹரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

பிள்ளையில்லாவீட்டில் புசிப்பதுபாவம்
பெண்கள்நாங்களிருவர் புசிக்கத்தவமழியும்) பிள்ளை

மருத்வதி-தரு,

பெண்கள்புசியாவிட்டால் பேதைமனந்தேறுமோ
அங்கமெல்லாமுருகி அனல்மெழுகாகுதிப்போ

தேவகன்னிகள்-தரு.

அனலாயுருகுதென்று ஆருடன்சொல்லுகிறாய்
தினமும்பங்கப்படுவோம் தெரிவையேஅழுதுண்டால்

மருத்வதி-தரு,

பங்கப்படுவோது பாலோடன்னம்புசித்தால்
திங்கள்கங்கைசூடுவோர் திருவுளத்துக்கொப்பாகும்

தேவகன்னிகள்-தரு.

அன்னம்புசிப்பாயென்று அடிக்கடிசொல்லுகிறாய்
வீண்க்கிளிமொழியேவேண்டாம் நாங்கள்போய்வாறோம்

தேவகன்னியர் போனபின்பு-மருத்துவதி புலம்பும்

விருத்தம்.

அந்தமுள்ளயிளம்பருவ நிலைமைதாண்டி.
அப்பாலேமுதுவய தாமானகாலம்



கந்தமலர்கொய்யவந்தமாதவென்னை
கனதாபமென்றன்னங்கேட்டகாலம்
மைந்தரில்லாவீட்டிலன்னமுண்ணேனென்று
மங்கையர்களேகிடவிங்கமர்ந்தகாலம்
இந்திரசபைமுனிநாதனேகுங்காலம்
இவ்வனத்தில்நானிருந்துயேங்குங்காலம்
வந்துரிஷிகன்னிபதியென்றகாலம்
மனைவியிலென்முன்னமனம்வருந்தாக்காலம்
நிந்தனையாயெனக்குச்சுதனில்லையென்று
நிஷ்டூரம்பேசியவர்நீங்குங்காலம்
அந்தரத்தில்நானொருபெண்வாடுங்காலம்
அயனரியுமரனுமிவ்வாறறியாக்காலம்
தொந்தமுள்ளவிக்காலப்பிழைகளாலே
துன்பமுற்றுவாடுவனோதோகைநானே.

இதுவுமது-

ஐங்கரன்குகனையீன்று அரவினையாரம்பூண்டு
கங்கையைச்சென்னிவைத்து கபாலமுஞ்சூலமேந்தி
மங்கையையிடத்தில்வைத்து மகிழ்விடைதன்னிலேறும்
சங்கரதயியேயனிப்போ தயங்குதல்தகமைதானோ;

மருத்வதி- புலம்பல்.

தரு-இராகம்- முகாரி-ஏகதாளம்.

கண்ணிகள்.

சங்கராகங்காதரா-சிவசிவ சாம்பசதாசிவனே-வந்த
மங்கையர்சொற்கேட்டு-எந்தன் அங்கமுருகுதையோ

வேதமொழிதவறி-பஞ்ச பாதகருடன்கூடி-பொல்லாத்
தீதுக்குள்ளாக்கியென்னை-வந்ததொரு மாதர்களேசவுமே

என்னசெய்வேனையோ-சிவனே ஏதுசெய்வேனையோ-தேவ
கன்னிமார்கள்வந்து-நிந்தித்து கடிதினிலேகினரே

பிள்ளையில்லாருடனே-முகம் பார்த்துபேசுதல்பாதமென்று-வந்த
வள்ளலார்சொற்கேட்டு-எந்தனல்ல உள்ளமுருகுதையோ

தண்டகாவனந்தேடி-யிரு கண்டருடன்கூடி-நான்
தெண்டனிட்டுக்கொண்டாடவிடையேறும்-தேவனே அருள்புரிவாய்.

இதுவும்-மருத்வதி-விருத்தம்.

மெய்யவர்வாழ்வேபோற்றி மேலவர்க்கருளேபோற்றி
பையரவணிந்தாய்போற்றி பார்வதிபாகாபோற்றி
வையகத்தோர்கட்கெல்லாம் வாழிசவளிப்பாய்போற்றி
செய்யநின்மலர்த்தாளேந்துஞ் செல்வனையருளுவாயே.

தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சிவசிவாயான்பூர்வத்தில் செய்தமாதவமேதோ
செல்வனில்லாப்பாவி ஆனேனே
தவநெறியைமறந்து தர்மநீதியிழந்து
சாஸ்திரமுறையைப் பழித்தேனோ
எத்தனையோமாதவம் பெற்றிருந்தாலுமென்ன
எதிரேவருமோ கபிலரசம்
புத்திரமித்திரிருந்து நித்யகர்மங்கள்செய்வோர்க்கு
புகழுமோட்சமென்றாரோ மாதர்
மைந்தரில்லாதவர்க்கு வருகுமோசொர்க்கமென்று
மகிழ்ந்துகன்னியர் சொன்னநீதி
நிந்தனைசெய்தவனோ பிச்சையிடேன்போவென்று
நீதியில்லாதுரைசெய் தேனோ
பிள்ளையில்லாமனையில் புசிப்பதுபாவமென்று
பெண்களுரைத்துப்போனா ளையோ
வள்ளலுக்கென்னகுற்றம் மன்தாரச்செய்திலை
மாதர்நிந்தனைக்குடன் பட்டேன்
அன்னைபிதாக்களைநான் அனியாயமென்சொன்னேனோ
அரிவையரென்னை பழித்தாரோ
பண்ணியபாவமேதோ பாலனற்றவளானேன்
பாமரிருப்பதை யறியேனே
தீர்த்தயாத்திரைசெய்தால் சென்மசாபல்யமென்று
தெரிவையருரைத்துப் போனாரே
ஆர்த்தி அரனையல்லந்த அந்திவண்ணன் பொற்பாதம்
அன்றேவணங்காமற் போனேனே
இன்னமும்வரக்காணேன் இதயமகிழ்க்கணவன்
இத்தன்மையைச்சொல்லுவ தெப்போ



வன்னிசரத்திலேற்றும் மாதேவர்தம்மைநோக்கி
வனத்தில்தவம்புரிவ தெப்போ

---

கட்டியக்காரன்-வசனம்.

இவ்விதமாய் தனக்குப் புத்திரனில்லாத கவலையினாலே பரிதாபப்படுகிற மருத்வதி மாதின்முன்னே மதுரைநாட்டின் குறத்திவருகிறவிதங்காண்க.

விருத்தார்த்தம்-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பொன்னிலகுமதுரைமீனாட்சி சுந்தரேசருட்புகழும்நாட்டில்
மின்னிலகுவகனவெழிற்றிலமுடன் ஸ்தனங்கள்விம்மிமேவக்காதில்
மின்னிலகுகொந்தளநல்லோலைபளீரென்றிலகத்தேருமுதன்ன
வன்னமயில்குறவஞ்சிமாத்திரைகோல் கூடையுடன்வருகின்றாளே.

(கெத்து) வந்தாள் சிங்காரகுறவஞ்சி-மிகவொயிலாய்-வந்தாள்.

தந்திநடையின்மிஞ்ச தாளிற்சிலம்புகொஞ்ச
விந்தைநடனமஞ்ச விளங்குமன்மதன்கெஞ்ச
சுந்தரமிருந்தநற் சுகந்தமலர்மிகவ
வசித்தகுழையிலி விருந்துவண்டுகளுஞ்ச
அந்தமிகுந்தசுப்ந்தனில்வந்தவர்
சிந்தைநினைந்ததறிந்துபகர்ந்திடும்
கதிரொளிமதிமுகநிதிபெறுமதிசுக
வதிதுரிதநடையரம்பதுரமென்மொழியினள்.

தந்திமிதரிகிடசெம்தரி தாகிட்கிடதகதிரிகிடதொங்கிட
தரிகுகுதரிகுகுதரிகுகுசெம்தரிதரிகிடதிங்கணத்தோமென (வந்த

குறத்தி-வாசல்வளப்பஞ்சொல்-விருத்தம்.

கங்கைமாநதியணைத்த கருணைசேர்சுந்தரேசர்
பொங்கமாய்வாழும்நாட்டிற் பூவையாமனதறிந்து
தங்கியகுறிகள்சொல்ல தக்கநற்குறத்திமாது
வங்கணமிகுத்துவந்து வாசலின்வளஞ்சொல்வாளே

வாசல்வளஞ்சொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

கண்ணிகள்

வாசலிதுவாசலிது அம்மே வன்மைமிகுவாசலிது
வாசவரும்தேசிகரும் அம்மே மகிழ்ந்துவரும்வாசலிது
நேசசுந்தரேசர்நிதம் அம்மே நினைந்துவரும்வாசலிது
ஆசையுடன்விண்ணவர்கள் அம்மே அருள்மிகுந்தவாசலிது

அங்கயற்கண்வல்லபையும் அம்மே அருள்கொடுக்கும்வாசலிது
திங்களுடன்செங்கதிரும் குழச் செழிக்கவந்தவாசலிது
தினைப்புனத்தில்வள்ளிகந்தன் அம்மே சேர்ந்திருக்கும்வாசலிது
அனந்தஅபிராமியுட னம்மே கலந்திருக்கும்வாசலிது
சொன்னநவமணித்தாள மம்மே சொரிந்திருக்கும்வாசலிது
தன்னயமாயஷ்லட்சுமியு மம்மே நடமாடும்வாசலிது

மருத்வதி-குறத்திக்குச்சொல்-விருத்தம்.

மாசிலாமணிபுறக்கும் மாவிலைநீதில்வைத்த
யோசனையாகவெங்கள் வுசிதவாசலின்வளப்பம்
நேசித்துநீயுரைத்தாய் நேரிழையாளேயெங்கள்
தேசிகர்புகழுஞ்சாதித் திறமையையுரைசெய்வாயே.

வசனம்.

அகோவாரும் என் வாசல்வளப்பஞ்சொல்லிவந்த பெண்ணே மெத்தயோசனையோடு எங்களுசிதமான வாசலின்வளப்பஞ் சொல்லி வந்ததுகண்டு மகாசந்தோஷமாச்சுது ஆகிலும் உன்னுடைய குலாசாரத் தர்மங்களைச்சொல்லி வாரும் மாதுசிரோன்மணியே.

தரு-இ-ம்-சௌராஷ்டகம்-அடதாளம்.

பல்லவி.

எங்கள்சாதிகுறச் சாதியம்மே-சாதிக்
கெல்லாமுயர்குலமென் குலமம்மே

அநுபல்லவி.

கங்கையில்வேளூர் செங்கைவேலவர்வாழும்
மங்களஞ்சீலாருள் தங்கும்பாண்டிநன்னாட்டில்(எங்கள்)

வசனம்.

அர அம்மே நாங்கள் ஆனைக்கரி பூனைக்கரி ஆக்கித்தின்கிற சாயம்மே நாங்க சாரைப்பாம்படிச்சு திங்கிற சாரியம்மே நாங்கஅரையே எங்கசாரி மெத்தசுத்தமுள்ள சாரியம்மே.

சரணங்கள்.

மாட்டுக்குறவரைப்போல் காட்டுக்கிழங்குதிக்கமாட்டோம் வண்டு
நக்கிப்பார்த்தபூவையெச்சிலென்று கூந்தலிற்சூட்டோம்
பூட்டகமாயெங்கள்குலவித்தை யொருவர்க்குங்காட்டோம்வெள்ளி
பொன்னையொருபொட்டாயெண்ணிமேனிபிற் சூட்டோம்கையைக்



காட்டச்சொல்லிரோரை பார்த்துக்குறிகளெல்லாம்
கருத்தில்நினைத்தபடி யுரைத்து - சிங்கி

வசனம்.

எங்கள் சாரியிலே நாட்டுக்குறவரைப்போலே காட்டுக்கிழங்கு திங்கமாட்டோம் வண்டுநக்கிப்பார்த்தப் பூக்களைஎச்சிலென்றுகொண்டையில் முடியோம் எங்கள் மர்மத்தை எவர்களுக்குஞ் சொல்லோம் வெல்லிபொன்னு நெத்தினங்கள் மெத்த ஒசந்ததாயெண்ணி உடமை பண்ணிபூட்டமாட்டோம் கையைக்காட்டச்சொல்லி கனதமரியாரியோரு குறிசொல்லுவோம் ஊரொங்கும் சுத்துவோம்தொம்பைநொந்துவோம் ஆரையும் எத்துவோம் அரம்மே எங்கசாரி மெத்தமருவாரியான சாரியடியம்மே அரம்மே இன்னங்கோரி அம்மே கோரி.

தரு.

மாருமுலையையெட்டிப்பிடித்தபோதிலுங்குற்ற மில்லை-சங்கு
மணியைமாமன்ச்சான் தீண்டும்போதுவருங்கல்லை

பாருலாவியநீதிநெறியாய்க்காப்போம் தினைக்கொல்லை
பற்றுதாலியெனக்கட்டிக்கொள்வோம் புலிப்பல்லை
ஒவ்வொருகுறவனை எழெட்டுக்குறத்தியாய்
உனக்கெனக்கென் றேடியணைந்து

ஓடுவோம் விட்டே நாடுவோம் பாடல்
மூடுவோம் லீலை கூடுவோம் (எங்கள்)

வசனம்.

அரியம்மே குச்சுமுலையை கொச்சோனா யுரிச்சு கொஞ்சநாருங்குச் சமில்லையாமே மச்சான் சங்குமணியைத்தொட்டா வந்திருஞ் சங்காற்றம் அரையம்மே எங்களுக்கு காடிகாப்பதுதான்சாரிப்பியப் புரியம்மே.

(கட்டிய) பொறு பொறு என்ன சொன்னே

(குறத்தி) அரையே காட்டையே காரு

(கட்டிய) என்னகாடு சுடு காடா

(குறத்தி) அரையே ஒப்பிரிச்சி அரையே யெங்கசாரி திரிபுங்காக்கிற சாரிசாரியையே ஆ அரொன்னரையே ரையாண்டிபன்னிரே.

(கட்டிய) தினைக்கொல்லை காக்கிற குடியானச்சாதியா.

(குறத்தி) ஆம்மாயே ஆம்மாயே அரா அராபுரிச்சக்கோபுரிச்சக்கோ அரையே யெங்கசாரி ஒருக்கத்திலேயாயே புரிப்பல்லைத்தாலிக்கட்டிக் கிருவழுறையே.

(கட்டிய) ஆ ஆ ஆ, புலிப்பல்லிலே தாலிபண்ணிக் கட்டிக்கொள்ளுவீர்களா.

(குறத்தி) ஆம்மாயே அப்புரிதே அரையே ஆமக்கம்மேலே ஆசைகொண்டு ஒரு கொறவனை நாறு கொறத்தியாய் ஒக்குபேக்கென்று ஓடி ஆடி அணைவோய்மாயே ஊரெல்லாந்திரிவோமாயே ஊட்டு பறலைஆடி கொயுந்தனைக்கட்டி தயுவிஉறுமத்திலேயே கூடிறுவழுறையே.

(கட்டிய) என்னடி பகல்வேளையிலேயே அப்படிசெய்யலாமா.

(குறத்தி) ஆ, அரொன்னாயே அரையே எங்கசாரி னெம்ப அரங்கிவாளப்பட்ட சாரியாயே.

தரு.

குறத்திகுளிகுளிக்க குறவன்காயந்திடப — துண்டு-மச்சான்
கொழுந்தனுடன்படுப்போம்புருஷனுக நினைத்துக்கொண்டு
மறுத்தொருசாதிக்கும்பெண்கொடோ மென்பதைக்கண்டு
வளவுப்பெண்களைசப்ர மன்பர்கொள்வாருளங்கொண்டு
கறிக்குப்பூனையானை கண்டங்களிச்சிப்பேசும்
கானகந்தன்னிலரும் காய்கனிகிழங்குகள்
கெல்லுவோம் பாட்டை மெல்லுவோம் எங்கும்
செல்லுவோம் பாட்டை சொல்லுவோம் (எங்கள்)

மருத்வதிசொல்-விருத்தம்.

பலவகைக்குறிகள்சொல்லி பண்புடனுரைப்பேனென்றே
மலைவளர்குறக்குலத்து வஞ்சியேசொல்லக்கேளாய்
நிலையதாய்மனதிலொன்று நினைத்தனைதனையாய்ந்து
நலமுடனெந்தனுக்கு நங்கையேநவிலுவாயே.

வசனம்.

அடிவாடியம்மே குறப்பெண்ணே நீ நல்லகுறிகள்சொல்லுவேனென்றது சரிதான் ஆனால் நானொருநினைவுகொண்டிருக்கிறேன் அதை யின்னதென்று ஆராய்ந்து சொல்லுவாயம்மா.

குறத்திதெய்வஸ்தாவம்-அகவல்.

அருள்பெறுஞான வமலனீன்ற
கருணைசேர்முகமதக் களற்றின்மாமுகனே



பெருகுநற்கண்ணே பிரியமாயுமையாள்
விரும்பிடுனுவலாய் விநாயகாசரணம்
பொதிகைமாமலைமேல் பொருந்துமாமுனிவன்
துதிசெயுங்கந்தனே ஞானகும்மாரா
திங்கள்மாமுகனே தேவர்கோன்மருகா
மங்கையாள்வள்ளி மணாளனேசரணம்
மதுரைமாநகரில் வாழுமீனாட்சி
துதிபெறுஞ்சுந்தரர் துணைபெறவமர்ந்த
மதுரைமாகாளியே மகிழுமோங்காரியே
நீதிபெறுந்துர்க்கையே நேசமாய்வேண்டினேன்
பதியினிலமர்ந்திடும் பதினெட்டாம்படியே
மதித்துவீற்றிருக்கும் மதுரைவீரையனே
சந்திவீரையனே சங்கிலிகறுப்பா
முந்தியேவந்திடும் முத்தால்ராவுத்தனே
கறுப்பண்ணசாமியே கழுகடியையனே
லாடசந்நியாசியே லாடமுனியையனே
தேடியேவந்திடும் செகமுனியையனே
அகத்தியடியோனே ஐயனாரப்பனே
சோதிகுருமுனியே சோலைமுத்தையனே
அஷ்டதிக்கினில்வாழ் அஷ்டமாங்காளியே
துஷ்டக்காட்டேரியே ஞானவளியே
வல்லிநாயகியே மண்டலத்தாயே
பில்லிகுனியங்களைபிறட்டுங்காட்டேறியே
பத்தியாயுந்தனைப் பணிந்துநான்போற்றினேன்
சத்தியாதரியே சல்லியநங்கையே
மாமுண்டியையனே மலையாளபகவதி
சாமுண்டித்தாயே சப்பாணிக்கறுப்பா
காத்தவராயா கதறியேவந்திடும்
தோத்திரஞ்செய்திட துரையேவந்திடும்
ஒட்டிச்சல்லியம் ஒன்பதுகம்பளம்
தொட்டிமலையாளம் இட்டமாகாளியே
இட்டமாய்வணங்கினேன் னென்குலதெய்வமே
மங்கைமருத்வதி மனதில்நினைத்தது
அங்கைபிற்கனிபோ லகமகிழ்ந்துரைப்பாய்
மரகதமணியோ வைரமோபொன்னோ

பச்சைமாணிக்கமோ பசுஞ்சந்திரமோ
வச்சிரப்பொற்சிலையோ மகிழுமுத்தாரமோ
ரத்தமோ திரமோ சித்திரப்பதுமையோ
கோகனகமோ கோதைமருத்வதியாள்
ஆகமதெனக்கு அறிந்திடவருள்வாய்

குறத்தி மருத்வதிக்குச்சொல்
தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.
கண்ணிகள்.

முத்திரைமோதிர மிட்டகையைக்காட்டாயம்மே-கடையம்
முன்கைமோதிர மிட்டகையைக்காட்டாயம்மே
சித்திரச்சூடக மிட்டகையைக்காட்டாயம்மே-உத்தனீ
செங்கைவளைதங்க ரேகையைக்காட்டாயம்மே
அஸ்தகடகம்புனைந்தகையைக் காட்டாயம்மே-பொன்னின்
அலங்காரநன்னெறி யிட்டகையைக்காட்டாயம்மே
நித்தமுந்தானதர்மஞ் செய்துவருமெங்களம்மே-நித்தமும்
நிமலர்துதித்திடும் நிறைந்தகையைக்காட்டாயம்மே

---

குறத்திசொல்-விருத்தம்

ஆசைவாய்க்குறிசொல்லென்ற அம்மையேகேளாயிப்போ
வாசவன்பதிக்குச்சென்ற மாமுனிவருவார்நீயும்
ஈசனாருளினாலே யிமையவர்முனிவர்மெய்க்க
மாசிலாவுன்வயிற்றில் மைந்தனும்பிறப்பானம்மே
குறத்திசொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்
கண்ணிகள்.

முத்திமுந்திவிநாயகனைத் தொழுவோமடியம்மே
முருகருக்குமூத்தவனைப் பணிவோமடியம்மே
சத்திவிநாயகனைத் துதிப்போமடியம்மே
சரஸ்வதியாள்பதமலரை சிந்தைசெய்வாயம்மே
வெள்ளிமலைவேலவனைப் பணிவோமடியம்மே
வள்ளிதெய்வானையென்றன் மருமகளாமம்மே
அம்மையேயுன்கணவன்மிரு கண்டமுனியம்மே
ஆனடியைத்துதித்திடப்போ யமர்ந்தாரடியம்மே
அருந்தவர்க்குச்சொர்க்கபத மாகுமடியம்மே
அவரவருடன்சொர்க்கலோகம் சேருவாயென்னம்மே



பின்னையில்லாக்கவலையிக் கொள்ளுமேயம்மே
இன்னமொழிமாதரசே கிடைக்கும்பிள்ளையம்மே
நன்னூமத்தபிள்ளையி னால்வயதாகும்
என்னுமபதினாறினவே யழிவுபர்வானம்மே
வசனம்.

அடிவாடியம்மே உன் பத்தாவாகியமிருகண்டமுனீசுரரானவர் தெய்வலோகம்போனவர் இதோவரப்போகிறார் ஈசுவரன் கிருபையினாலேநல்லபுத்திரனைப்பெறப்போகிறாய் நீயொன்றுக்கும்விசனப்படவேண்டாம் நான்வந்துவெகுநேரமாச்சுதுபோய்வருகிறேனம்மா

---

மருத்வதிசொல்-விருத்தம்

வானவர்சபைக்குப்போன மாமுனிவரவுங்காணேன்
தேனமர்காவிலிந்தத்தெரிவையின்மொழிகளெல்லாம்
நாவிப்போரிஷிக்குச்சொல்லி நாதனார்தம்மைநோக்கி
கானகந்தன்னிற்சென்று கமிந்தவம்புரிவதெப்போ
தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்
கண்ணிகள்.

என்னபாவஞ்செய்தேனோ நான்-இந்தவிதிக்கிவசமானே
முன்னமேமுப்புரமெரித்த-அந்த முக்கணருடகற்பனையோ
மன்னன்மிருகண்டேயர்-இன்னம் வராமலெங்குமயங்குவாரோ
கன்னல்மொழிமடவார்-வந்து-காதல்மிகுத்தெந்தனுக்குத்தன்னில்
அன்னம்புசியாமல்-தம-தாச்ரமத்துக்கேகினாலவோ
இவனேவிதிவசமோ-இந்த தீவினைக்காகவோபெண்பிறந்தேன்
அவனியிலெந்தனைப்போல்-பாவி ஆரிருப்பாரொந்தனுருயிரோ
பாவிபடுத்துயா-மிந்தப்-பாரினிலின்னமெவருக்குண்டோ
ஆவிதளருதையோ சுவாமி-ஆண்டவனேவந்துகாக்கொணாதோ

---

கட்டியக்காரன்வஞ்சி-விருத்தம்.

செந்தமமருத்வதி இந்தநெறியிலுற
அந்தமாமுனிவர் வந்தனர்தாமே
வசனம்.

இந்தப்பிரகாரமாய்தல் பத்தாவானமிருகண்டேயர்வரக்காணுமென்று மருத்வதியானவள் துயரப்பட்டுக்கொண்டுஇருக்கும்போது தேவலோகத்துக்கெழுந்தருளிய மிருகண்டேயமகா முனிவரானவர் தன்னுடைய ஆசிரமத்துக்கு வருகிறவிதங்காண்க.

தரு-இ-ம்-சௌராட்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மருத்வதிபுலம்பும்போது மாமுனிவந்தார்-அரகர

அநுபல்லவி.

திருத்தமாகவேநீறணிந்து தெண்டுகமண்டலங்கொண்டு
வருத்தமாகத்தானடந்து மாமுனிவந்தார்-அரகர (மருத்)

சரணங்கள்

ஐயோவென்றசத்தங்கேட்டு அலறியேநடைநடந்து
வையகத்துளோர்புகழும் மாமுனிவந்தார்-அரகர(மருத்)
கூவென்றசத்தங்கேட்டு கோலமுனிநாதரிப்போ
பூவைமருத்வதிவாழும் பொற்புளவாச்ரமம்நாடி-அரகர (மருத்)
தேவர்கள்பதியைவிட்டு செந்தாமரைப்பாதம்நோக
பாவமற்றமிருகண்டேயர் பரிவுடன்மனைக்குவந்தார்-அரகர()

மிருகண்டேயர் மருத்வதிக்குச்சொல்-விருத்தம்.

மதிநிகர்வதனத்தாளே மடந்தையேகேளாயிப்போ
அதிகமாய்மனதுநொந்து அழுதுளம்வாடிவானேன்
பதிதனில்வந்தபோதார் பாவைநீயநடந்ததென்ன
அதிசயமதனைநீயு மன்புடனுரைசெய்வாயே

வசனம்.

சந்திரனைப்போலே பிரகாசியாநின்றமுகாரவிந்தத்தை யுடையபெண்ணே உன்னுடையமனதுகிலேசித்துபுலம்புவானேன் நம்முடையஆசிரமத்திலே நான்தேவசபைக்குப்போனநாள்முதல் நடந்தவர்த்தமானங்களைச்சொல்லி வருவாய்பெண்ணேமருத்வதி.

தரு-இ-ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்

கண்ணிகள்

என்னசொல்வேன்முனிநாதா - நானேதுசொல்வேன்விதிவசத்தை
அன்னமேறும்நான்முகனார் அவரறிந்தவிதிவசத்தை
விண்ணவர்கள்தேவிமாரோ விமலருடதேவிமாரோ
மன்னவர்கள்தேவிமாரோ மாமுனிவர்தேவிமாரோ
கன்னியரிருவர்வந்து சஞ்சமலர்மாதுபோலே
பெண்ணாரேயெங்களுக்கு பெறும்பதிமெத்தவென்றார்.
அன்னமுடன்பால்பழங்கள் அன்புடனேயான்படைத்தேன்
உன்னைவென்றசம்மதித்து உன்மகனையழையுமென்றார்.

15



எந்தனுக்குமைந்தனில்லை என்றுரைத்தேன்முனிநாதா
செந்தவஞ்சிறந்தவர்க்குச் செல்வர்களிலாமற்போமோ
தர்மங்களைச்செய்தபேர்க்கு சந்ததியிலாமற்போமோ
குழந்தையில்லாரகம்புகுந்தால்கொடும்பாவியாவேனென்றார்
சமுவமைந்தரில்லாதோர்க்கு தவமதுசிறக்காதென்றார்
அரிவையரோயுன்னகத்தில் அமுதுகொள்ளப்பாவமென்றார்
பெருமையுடனிவ்வசனம் பேசலுற்றார்முனிநாதா

மருத்வதி.மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

பாலகனில்லையென்று பாவையர்பசியாறாமல்
கோலமாய்போனதாலே குவலயந்தன்னிலிப்போ
சீலமாயிருந்தசிந்தை சிதறியேதயங்குதையோ
ஆலமுண்டவனைநோக்கி யருந்தவமியற்றுவோமோ

தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

பல்லவி

மைந்தரில்லாப்பாவியாகினேம் அரகரசிவசிவசம்போ
மைந்தரில்லாப்பாவியாகினேம்

அநுபல்லவி

அந்த்யகாலம்வந்தபோது அருமைமதனையுடைகள்தனிலே
சொந்தமாகநாமிருவரும் சொர்க்கலோகஞ்சேரத்துய்ய(மை)

சரணங்கள்

அண்டர்தேவர் போற்றிடும்
அங்கமாகவே நின்றுபேற்றிடும்(மைந்த)
பண்டுபேழ்கியே பாவஞ்செய்தேனோ
பரமனடியைத் தூஷித்தேனோ (மைந்த)
ஏரிகுளங்களைத் தூர்த்தேனோ
எளியவர்கட் கிடர்செய்தேனோ (மைந்த)
வீரியங்களை பேசினேனோ
வேதியனைத் தூஷித்தேனோ(மைந்த)

வசனம்.

அகோவாரும் என்பிராணநாயகரே எத்தனைபாக்கிய மிருந்தபோதிலும் புத்ரபாக்கியமேபாக்கியம் புத்திரனில்லாத அன்னம்புழுவுக்குச்சமானமாம் நித்திரையிலும் புத்திரவிசாரமேதவிரவேறில்லை ஆனபடியினாலே ஈஸ்வரனைதியானித்து தவஞ்செய்வோம் வாரும் என்பிராணநாயகரே.

மிருகண்டேயர் மருத்வதிக்குச்சொல் விருத்தம்.

மாதர்கட்கரசியான மருத்வதிமயிலேகேளாய்
ஆதிசிவ்விளங்கவேதான் ஆருமையாமைந்தன்வேணும்
ஈதிருந்தாலுமென்ன என்குலம்பெருகவென்று
போதவேதவங்கள்செய்ய பூவையேபோவோம்வாராய்

வசனம்.

அகோவாரும்பெண்ணே மருத்வதிநான் தெய்வசபைக்குப் போனபோது முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளும் நிறைந்திருக்கிற சபையிலே நான்போய் உட்கார்ந்தவுடனே தேவேந்திரன்பார்த்து வேதவியாசரையழைத்து இவிடத்திலேவந்திருக்கப்பட்டபேர்களிலே புண்ணியபாவம் ஆருக்குண்டென்றுகேட்டார் அப்போது வேதவியாசர்சொல்லுவார் பூலோகத்திலேயிருந்துவந்த மிருகண்டமகாரிஷிக்குப் பிள்ளையில்லாதபடியினாலே அவருக்குசொர்க்கமில்லையென்றார் அப்போது தேவேந்திரன் அந்தவார்த்தைகேட்ட மாத்திரத்திலே அந்தப்பாவி நம்முடைய சபைக்குவரவொட்டாதேயுங்களென்றார் உடனேநான் ரகசியமாயெழுந்துவந்துவிட்டேன் அங்கேநடந்த விருத்தாந்தத்திற்கும் இங்கேநடந்திருக்கிற விவாத்துக்கும் சரியாயிருக்குது நம்முடையகுலகோத்திரம் விளங்கும்படியாக தவத்துக்குப்போய் வருவோம்வாரும்பெண்ணே மருத்வதி.

தரு-இ-ம-மத்தியமாவதி ஆதிதாளம்.

பல்லவி.

நடப்போம் தவசுக்கு- நடப்போம்.

அநுபல்லவி.

நடப்போம்தவசுக்கு நலமாய்நாமிருவரும்
விடையார்தனைநாடி விருப்பமாகவேகூடி (நடப்)

சரணங்கள்.

மங்கையோர்பாகனை மாதவர்பாதமேநோக்கி
சங்கராசிவனேயென்று சர்வகாலம்பூசித்து (நடப்)
விசும்புகழ்காசி விஸ்வநாதனைத்தேடி
நேசமுடன்பணிந்துநெஞ்சில்நினைத்துப்போற்றி (நடப்)
ஆலமுண்டகண்டர்த ளடியிணைதொழுதேத்தி
கோலவழகனை குமாரனைப்பெற்றிடப்போய் (நடப்)

மருத்வதி மிருகண்டேயருக்குச்சொல்- விருத்தம்.

இந்தநல்வனத்துக்கப்பால் விருக்குநற்காசிக்ஷேத்திரம்
வந்தனமனேகதூரம் வருத்தமாயிருக்குதிப்போ





எந்தனற்பதும்படாத மெங்கணுங்கொப்பளித்து
சந்ததம்நோகுதிப்போ சரணமென்பிராணநாதா

வசனம்.

அகோசரணஞ்சரணமையாசுவாமி நான்வெகுதூரம்நடந்துவந்தபடியினாலே அடியாளுடைய கால்களிரண்டும் நோகுது இப்போதுஒருஅடியாவது யெடுத்துவைக்க என்னால் முடியாதுசற்றுநேரம் இங்கேயிருந்து இளைப்பாறி களைதெளிந்து காசிபட்டணமிருக்கிறயிடத்தைத்தெரிந்து கொண்டு எழுந்தருளுவீர் தேவரீரும்கொஞ்சங்களையாற்றிக்கொள்ளும், என்பிராணநாயகரே.

மிருகண்டேயர் மருத்வதிக்குச்சொல்விருத்தம்.

மங்கையேகேளாயிந்த வனமதுதாண்டியப்பால்
துங்கமானதியுங்காணும் காசிநன்னகருந்தோணும்
நங்கையர்கூடிவாழும் நல்லரண்மனைகள்தோணும்
பங்கையப்பதத்திருளே பரிவுடனெழுந்துவாராய்

சிந்து-தரு-இ-ம-புன்னாகவராளி- ஏகதாளம்.

கண்ணிகள்.

இந்தவனந்தனிலே-தவம்-எந்நாளுந்தவஞ்செய்யமுனீசுரர்கள்
சந்திரப்பெண்களுடனே-நிறை-சோதிஜமதக்நிவசிஷ்டருடன்
கந்தமலர்க்குழலார்-கூடி-கானகந்தன்னிலேவாசிகளுமாய்
எந்தெந்தநாளுமிங்கே-அந்த-வந்திழையாருடன்சேர்ந்திருப்பார்
மாதுமருத்வதியே-காசி மாநகர்தோணுது பாரும்பெண்ணே
போதத்தவம்பெறலாம்-இந்தப்-புண்ணியகங்கையிற்கன்னியரே
இராஜன்பகீரதன்தான் விசுவநாதன்மலரடிபோற்றிசெய்து
தேசம்விளங்கவந்த-கங்கை-தென்கரைதோணுது மங்கையரே

மருத்வதிசொல் விருத்தம்

கந்தமிகுசந்தனநிறைந்தவனமோஅவர்களிப்புடனிருந்தவனமோ கொந்தளநிறைந்தவனமோமுல்லை மல்லிகைகுருந்துநிறைந்தவனமோ, செந்தவனசெண்பகநிறைந்தவனமோ கங்கைசேர்ந்தருவிபாயுமிவனமோ, அந்தமிகுசோலையுநிரந்தாமுஞ்சூழ்ந்துவருமிந்தவனமெந்தவனமோ.

வசனம்.

அகோவாருமென் பிராணநாயகா சரணம் சரணமையாசுவாமி உன்னிதமாகிய வாசனைபொருந்திய முல்லைமல்லிகை நிறைந்த இந்தவனத்தினுடைய மகிமையைஎனக்குச்சொல்லவேணுமையாஎனது பிராணநாயகரான மிருகண்டேயமகாமுனீஸ்வரரே.

### மிருகண்டேயர்சொல்.

ஏந்து-தரு இ-ம்-புன்னாகவராளி அடதாளம்.

கண்ணிகள்.

பன்னுங்கிளிமொழியே-இதோ:பாராய்காசிநகர்பார்தையிது
கன்னபுரிநோக்கி-மனக்களிப்புடனேகுறப்பாதையிது
இன்னமனாநாழி-நடந்திடிலெழிலுயர்மணக்குறைகளிர
மின்னேதெரியுமிப்போ-காசி விசுவநாதரிடசந்நதியும்
அண்டமதிள்நிலயும்-நல்ல-அன்னபூர்ணியம்மன்கோபுரமும்
தொண்டர்சூழ்ந்து துதிக்கும் வெகு-துய்யதிருவாசகப்பாக்களும்
பாராய்வினைதீர்த்த நாதர்பட்சம்வைத்தாளுவாருச்சிதமாய்
சிராணகாசிவந்தோநாம்-பெண்ணே-சிந்தையிலேயிசைநேர்திடாதே
இந்தஸ்தலந்தனிலே-சிவன் எல்லவர்க்கும்வினைதீர்த்தவர்தான்
மைந்தவமக்குண்டுகாண் உந்தன்-மனதினிலெண்ணமகிழ்ந்திடுவாய்

### கட்டியக்காரன்சொல்-பொதுவிருத்தம்.

பக்தியாய்ப்பிரமன்பாதம் பணிந்துநற்றவமியற்றும்
நித்தியநிமலனீதி நெறிமிகுமிருகண்டேயர்
சித்திரமானகங்கை நிறைந்தனற்கரைகடக்க
புத்தியாய்த்தோணியேற்றும் புகழுலம்பையர்வந்தாரே.

### தோணிக்காரர்வருகிறது

தரு-இ-ம்-சௌராஷ்டிகம் அடதாளம்.

கண்ணிகள்.

கந்தக்காம்புமென்று துப்பு கடைவாயிற்புளகடக்[illegible]
சுத்தமானமிருகண்டர்முன் தோணிக்காரர்தோணிஞரே
காதர்மீன்காண்மைதின்சாப் காசிம்பக்கிரிசாய்புடனே
ஆதரவாய்தோணிக்காராக் கடைவுடன்வந்துதோணிஞரே
அஸ்லேன்உஸ்லேன்அபயமென்று அல்லாகுத்தாஅலாவென்று
சுசகுவென்றுதுலுக்குப்பேசுந் கனாயார்வந்துதோணிஞரே
சையத்கான்முகம்மதுசுநனும் சருவிவத்தமசகுத்தானும்
துய்யமிருகண்டர்மின்னே தரிசினில்வந்துதோணிஞரே

### ஓடப்பாட்டு-இ-ம்-புன்னாகவராளி.

ஏலேலோ-ஏலேலோ-தத்தையாள்-ஏலேலோ-ஏலேலோ
ஆலமுண்டவாருள்பரவிய ஞாலமீதினில்கோலமிருமண்டாக் (ஏலேல
உத்திரநற்றேசந்தனில்-தத்தையாள் உயர்முனிதேவியர்கூடப்
புத்திரனைவேண்டித்தவம்-தத்தையாள் பூண்டிடவேபூமிதனில்



அந்தமாய்சந்திரவனமதுகடந்து அருள்தருமிந்திரவனமதுகடந்து
விந்தைபெறுதவந்தோருறை மேதவனங்கடந்து
வேங்கைபுலியொடுகரடி விளங்கும்வனங்கடந்து
தந்திமுகன்பதமலரை சிந்தையில்நினைந்து
தயவானகாசிநகர் தன்னருகில்வந்தார் (ஏலே)

### மிருகண்டேயர் மருத்வதிக்குச்சொல் விருத்தம்.

கன்னியேமனமகிழ்ந்து கனககோபுரங்கள்கண்டோம்
துன்னியபாவம்போக்குந் துகளறுங்கங்கைகண்டோம்
மின்னியவிதனில்மூழ்கி விசுவநாதனைச்சேவித்தால்
வன்னியின்மெழுகைப்போலவளர்ந்திடும்பாவம்போமே.

### வசனம்.

ஏகோவாரும்பெண்ணேமருத்வதி நாமிவ்வளவு தூரம்வந்துசிவ காசிவிஸ்வநாதருடைய பொன்னின்கோபுரத்தைக்கண்டோம் மகத் தாகியபாவவிமோசனமான கங்காதீர்த்தத்தையுங்கண்டோம்இந்தநதியிலேவேதவிதிப்பிரகாரம் ஸ்வானம்பண்ணினால் நல்லபுத்திரனைப்பெற்று வாழ்ந்திருக்கலாம்பெண்ணே அனலிலகப்பட்டமெழுகைப்போலே அடைந்தபாவந்தீர்ந்துபோகும்பெண்ணே.

### தரு-இ-ம்-நாகவராளி-ஏகதாளம்

கண்ணிகள்.

பாவைநாசங்கையிது பாவைநாமிருபேரும்
தேவனைப்பணிவோம்வாராய் தெரிவையேமிகமகிழ்ந்து
துங்கபத்தினிகோதாபுரி துய்யதிருக்கைவேணியிது
பங்கயபதத்தினளே பாவையேமகிழ்ந்துவாராய்
தேவர்கள்முனிவோரெல்லாந் தீர்த்தமாடுங்கங்கையிது
பாவையேயிதிலாடினுற் பாவமதுதான்தீருமே
முன்னுள்ளவினைகள்தீரும் மொய்குழலேதீர்த்தமாடாய்
உன்னுளமகிழ்ந்துவேதம் ஓதியேநதியிலாடாய்

### மருத்வதி மிருகண்டருக்குச்சொல்-விருத்தம்.

அன்புள்ளமணவியாளே அரிவையேசொல்லக்கேளாய்
இன்பமாயிவ்வனத்தி லிருவருமாகச்சென்று
துன்பறும்பசிக்காகாரம் துசனிலாக்கனிகாயுண்டு
தென்புடன்வெனுர்பாதந் தேடிநாம்துதிசெய்வோமே.

வசனம்.

அகோவாரும் பெண்ணே மருத்வதி இந்தவனத்திலே தானே நாமிருவருமிருந்து பசிக்கு கனிகாய் கிழங்குகளை பட்சித்துக்கொண்டு ஈஸ்வரனைக்குறித்து அரியதவம்புரிகுவோம் வாரும் பெண்ணே.

மருத்வதி மிருகண்டேயருக்குச்சொல்-விருத்தம்.

தவமதுபுரிவோமென்றீர் சாஸ்திரவிதங்களோதும்
தவமணியென்னவந்த நற்றவமுனியேகேளீர்
குவலயந்தன்னிலுள்ள குலவுமிவ்வனத்தியற்கை
அவசியமாகத்தானே அன்புடனுரைசெய்வீரே.

வசனம்.

அகோவாரும் முனிநாதரே இந்தவனத்திலேதானே தவஞ்செய்யலாமென்றீர் ஆனால் இந்தவனத்தின் மகிமையைத்தெரியப்படச்சொல்லவேணுமையா சுவாமி.

மிருகண்டேயர் மருத்வதிக்குச்சொல் விருத்தம்.

தந்தையேசொல்லக்கேளாய் தவத்தவர்மகிமைதன்னை
கந்தவர்துறவோர்வேந்தர் கருணையார்தேவர்மூவர் |
சித்தத்திற்களித்துயிங்கே செய்தநற்றவத்தால்வந்த
அத்தனார்விடையிலேறி அரும்வினை தீர்த்தாமே.

வசனம்.

அகோவாரும் பெண்ணே மருத்வதி இந்தவனத்தினுடைய மகாத்மியமெப்படியென்னில் தவசிகள் ராஜாக்கள் பிராமணாள் அருந்தவஞ்செய்யப் பரமேஸ்வரன் பார்வதிசமேதராய் ரிஷபவாகனமேறி வந்து காட்சிகொடுத்தவனமாகும் இவ்விடத்திலேயே நாமிருபேரும் தவஞ்செய்தால் அப்படியே நமக்கும் காட்சிகிடைக்கும் பெண்ணே மருத்வதி.

கட்டியக்காரன் சொல்-பொது விருத்தம்

இவ்விடம் நல்லதென்று யிருவருமன்புகூர்ந்து
ஒவ்வியஸ்தலங்களாலே உவர்வியைசேர்படுத்தி
திவ்விய ஜலந்தெளித்து சதுமுகாக்கினியுண்டாக்கி
திவ்விய மிருகண்டேயர் திறமுடன் தவஞ்செய்தாரே,

வசனம்.

அகோ கேளும் கியானவான்களே இந்தப்பிரகாரமாய் அநேகநதிகள் தாண்டி சோலைவனங்கடந்து காசிப்பட்டணத்துக் சருகாமையாய்



பஞ்சகுரோசனத்துக்குள்ளிட்டிருக்கிற திவ்வியமான புஷ்பவனத்தின் மத்தியின் ஓரிடத்திலே நிலத்தைமெழுகி பிரம்மாக்கினியைவளர்த்து தவஞ்செய்கிறவிதங்காண்க.

தரு-இராகம்-சங்கராபரணம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

பரப்பிரம்மசொரூபனே பவக்கடலொழித்திடும்- பாலகன்றருவாயே

அநுபல்லவி.

இரவும்பகலும்காசி • யீசாவுன்னிணையடி
யேற்றுவோம்போற்றுவோம் எக்காலமும்பூசிப்போம் . (பரப்)

சரணங்கள்.

உன்னையல்லாதெங்க ளாருயிர்த்துணையான
உத்தமராரையா
அன்னைபிதாகுரு தெய்வமும்யானென்ற
ஆதரவாய்வரும் போதச்சொரூபனே(பரப்)
நித்யகர்மமுறையான செயதப
நிஷ்டிதயாகங்களும்
அத்யந்தமுன்னடந் தாலல்லவோ உத்தன்
அருட்பெறலாமதனாலுளங் களித்திடும்(பரப்)
சன்னதிரவழியில்லை என்பதுசிவ
சங்காரவறியாயோ
பிள்ளைவரந்தந்து பேதையர்குறைதீர்ப்பீர்
பெருமானேயெங்கள் காலப்பிழையாவையும்பொறுப்பீர்(பரப்)

மிருகண்டேயர்சொல்-விருத்தம்.

மாசிலாமணியேபோற்றி மாதவர்க்கருளேபோற்றி
பாசிபோற்படருமாயப் பவக்கடலொழிப்பாய்போற்றி
எசிவாவுருவேபோற்றி எங்கணும்நிறைந்தாய்போற்றி
ஆதிகூர்காசிவாழும் அண்ணலேபொற்றிபோற்றி.



காசிவிசுவநாதர்.



கட்டியக்காரன்-விருத்தம்.

தவமதுபுரியும்போது தர்ப்பாசனம்புகூர்ந்து
உவமணிமாலைபூண்டு நந்திவாகனத்திலேறி
கவுரியையிடத்தில்வைத்து கானகந்தன்னில்வந்து
உவமையில்மிருகண்டேயர் உளமகிழ்சபையில்வந்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரந்தவஞ்செய்து தியானித்துக்கொண்டிருக்கிறமி ருகண்டேயர் சபைக்கு ஸ்ரீகாசிவிசுவநாதசுவாமிவருகிற திங்காண்க.

தரு-இம்-மோகனம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

சங்கரர்வந்தாரோ-ரிஷபமேறிச்-சங்கரர்வந்தாரோ.

அநுபல்லவி.

கங்கைச்சடையணிந்து கவுரிபாகம்புனைந்து
அங்கைமழுமானேந்தி அருள்பெறுமுனிவர்முன்

சரணங்கள்.

கவுரிமாலயன்வீசவே-நந்திதேவர் கட்டியவெழில்கூறவே
பவுரிசங்கீதம்பாடவே-தாதிகள் பரிவாயிசைகள்நாடவே
தவமிகுமாங்கைபூர் வசிநடமாடவே
சத்திமிதரிகிட ததிங்கணத்தோமென (சங்க)
வெள்ளிரூபமேறியே-தவத்திற் மீதிற்காணேமீதியே
பிள்ளைகலிதீர்க்கவேபுவிதனிற் பெருந்தவத்தோர்க்கேர்க்கவே
அள்ளிவிபூதிதந்து அஞ்சாதிருக்கவென்று
வள்ளல்மிருகண்டேயர் வாழும்சபையைநாடி (சங்க)
அங்கசாடிதொழவே-சுப்பிரமணியர் அரியகட்டியங்கூறவே
மங்கையர்கும்பமேந்தவே-வாணிமனம் மகிழ்ந்துமங்களம்பாடவே
பொங்கமாய்ப்பூமியா காசமும்புகழவே
புரந்தரன்முதல்தேவ ரெவர்களுந்திகழவே (சங்க)

---

விருத்தம்.

தேனுடனலர்ந்தகொன்றைத் திங்களும்புனலுஞ்சூடி
மானுடன்மழுவுமேந்தி மகிழ்விடைதன்னிலேறும்
கோனுடனவரும்வந்த கோலமதறிந்தெழுந்து
நானுனக்கடிமையென்று நன்முனிதுதித்திட்டாரே.

மிருகண்டேயர்சொல்-தரு இ-ம். பந்துவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

காசிவிசுவேசா நின்சரணம் கைலாசவாசா நின்சரணம்
மாசில்லாச்சுடரே நின்சரணம் மகிழ்விடையோனே நின்சரணம்
ஆலமுண்டவா நின்சரணம் அம்பிகைபாகா நின்சரணம்
கோலவழகா நின்சரணம் குருவடிவோனே நின்சரணம்
வேதசொரூபா நின்சரணம் விமலர்கட்கருளே நின்சரணம்
ஆதரவானாய் நின்சரணம் ஆதிமூலமே நின்சரணம்
அரகரசிவனே நின்சரணம் அரவணிமுதலே நின்சரணம்
புரகரவேதா நின்சரணம் புத்திரன்றருள்வாய் நின்சரணம்

தேவாரம்.

ஐயனேபோற்றிபோற்றி ஆதியாந்தேவாபோற்றி
மையவணிந்தாய்போற்றி பார்வதிபாகாபோற்றி
கையினில்மழுமானேந்துங் கருணையங்கடலேபோற்றி
மெய்யனேபோற்றிபோற்றி மேலவர்முதல்வாபோற்றி.

ஈஸ்வர்-மிருகண்டேயருக்குச்சொல்-விருத்தம்.

அருந்தவமுனியேயிந்த வரிமையோடிவ்வனத்தில்
இருந்துமேன்மையோடிங் கிருவருநமை நினைந்து
பெருந்தவஞ்செய்வதேது பெறும்வரமதுதானேது
இருந்தவேயெமக்குரைத்தால் இறமுடன்கிருபைசெய்வேனே.

வசனம்.

அகோவாரும் மிருகண்டமகாமுனிவரே உமது பத்தினியோடு இந்தவனத்தில்வந்து நம்மைநினைந்து தவசுபண்ணவேண்டியதேது உங்களுக்கு வேண்டியவரந்தானேது எனக்குதெரிவித்தால் அந்தப்படியே இருவருள் புரியலாகும் முனீஸ்வரரே.

மிருகண்டேயர்சொல்-விருத்தம்.

வள்ளலேபோற்றிபோற்றி மதியணிசடையாய்போற்றி
உள்ளமேமகிழ்ந்துவந்த உமையவள்பாகாபோற்றி
கள்ளமில்லா நல்லெண்ணங் கங்கையுங்கலந்திறக்க
தெள்ளமுதருளுமீசா இடமுள்ளபங்கனையருள்வீர்.

வசனம்.

அகோ சரணஞ்சரணமையா சுவாமி சந்திரசேகரா அகமகிழ்ந்து ரிஷபவாகனரூடராய் அம்பிகைசமேதராய் அனுக்கிரகிக்கவந்த என்னுடையனே எங்களந்தியகாலத்திலே கதிசேர்க்கும்படியான எள்ளுத்



தண்ணீரிறைக்க இயல்பானதெள்ளிற் றேவாமிர்தம் தந்தருளும் என்னையனே ஆரோக்கியரூட காத்ரமுள்ள ஒருபுத்திரனைத்தந்து மோட்சசாம்ராச்சியத்திற்குவரிவையாக்கிக்கொள்ளவேணுமையாசுவாமி

சுவாமிசொல் விருத்தம்

முற்பிறப்பிலேநேர்மை முழுமனத்துடனினைத்து
செப்பியகவஞ்செய்யாமல் சேயிழைக்கருத்துக்காக
ஒப்பியேவந்தாயிப்போ வுயர்வரமுனக்களித்தால்
தப்பிதமாகுமந்தத் தனையனுநாள்தங்கானே.

வசனம்.

அகோவாரும் மிருகண்டரிஷியே ஜன்மாந்தரங்களிலே நம்மை நினைத்து ஒருவில்வதளமாவது பூசிக்காமல் உமதுபாரியினுடைய அல்லலுக்காக இப்போதுவந்து அரியதவம்புரிந்தாய் உங்களுக்கு புத்திரவரங்கொடுத்தால் குறைவுவரும் அந்தக்குழந்தையும் தீர்க்காயுசுடனே பூமியில்வாழ்ந்திடாதே நானென்னசெய்வேன் முனிநாதா.

மிருகண்டேயர்சொல் விருத்தம்.

எத்தனைபிழையானாலும் ஏழையான்செய்ததெல்லாம்
மெத்தவுமனம்பொறுத்து மேதினியோர்கள்மெய்க்க
பத்தரட்சகனேவுந்தன் பதம்பணிந்திறைஞ்சுநல்ல
சித்தமதுறுதியான செல்வனையருளுவீரே.

வசனம்,

சரணஞ்சரணமையா சதாசிவமூர்த்தியே நாங்கள்மனதறிந்தும் அறியாமலும்எத்தனை பிழைசெய்தபோதிலும் அத்தனையும்மனம்பொறுத்திருந்த பூமியிலேயுள்ள சகலரும் உம்மைநம்பி பத்திபண்ணும்படிக்கு பரதரட்சகரான உம்முடைய பாதாரவிந்தத்தைப்பூசிக்கும் மனதையுடைய நல்லவுறுதியுள்ளவனான ஒருபுத்திரனை யருளிச்செய்யவேணுமையா.

சுவாமிசொல்-விருத்தம்.

புத்தியீனனுமாம்மெத்தப் பொய்யனுக்கள்வனாகி
பித்தனுவயது நூறில் பெரும்வரந்தரவோவல்லால்
மெய்த்தவனுயிரெட்டில் மேலவர்பதம்சேர்வோனாய்
உத்தமாதரவோவுந்த னுளகத்துள்ளுரைசெய்வாயே.

வசனம்.

அகோவாரும் மிருகண்டமகாமுனியே அறிவில்லாதவனாயு அசத்தியனாயுந் திருடனாயும் பித்துக்கொண்டவனாயும் இருக்கிற பிள்ளையை நூறுவயதிலேதரவோ அப்படிக்கில்லாமல் அரியதவத்தையுடையவனாய் பதினாறுவயதிருந்து உடனே எங்களுடைய தேவலோகத்

துக்கவருப்பவனைப் பிள்ளைவேணுமோ உத்தரனுள்ளத்திலுள்ள சிரமத்துச்சொல்லும் மஹாரிஷியே.

மிருகண்டேயர்சொல்-விருத்தம்.

ஊனமுஞ்செவிடும்பேடும் உள்ளவனானாலும்
ஆனதோர்க்குமயில்லை அவனியில்வந்திட்டிடின்
ஞானவானாகநாளும் ஞாலத்தில்வாழ்வோனாக
ஈனமில்லாமல்தாரும் என்குலம்விளங்கத்தானே.

வசனம்.

கேளுமையா ஜெகதீசா கூன் குருடு செவிடு நொண்டிசப்பாணிபோய் ஊவருது இப்பேர்ப்பட்ட குணத்தையுடைய பிள்ளைகள் பிறந்தாலும் பிரயோசனமில்லை ஞானவானாய் பேரும் பிரதிஷ்டையுமுள்ளவனாய்ப் பதினாறு வயதானபோதிலும் ஒரு குழந்தையைக் கொடுத்துரட்சிக்கவேணுமையாசுவாமி.

சதாசிவர் சிவகணங்களுக்குச்சொல்-விருத்தம்.

கன்னுதலென்னும்ருத்ர கணங்களிலொருவர்வாரீர்
நன்னுமாமுனிவர்தேவி நற்றவக்கவதரித்து
பன்னுமவ்வயதிரெட்டும் பரிவுடன்சென்றகாலை
துன்னுநற்பதவிசேரத் துரிதினிலென்சொல்வீரோ.

வசனம்.

அகோவாரும் சிவகணங்களா உங்கள் ஒருவன்போய்மிருகண்டமகாமுனியினுடைய பத்தினியினது வயிற்றில் கெற்பமாயுதித்துப திறுவயதளவும் பூலோகத்திலேயிருந்து மிகுந்த தபோதனனாய் நம்முடைய பதவிக்குவந்துவிடும் சிவகணமே.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

இந்தநன்னெறியுணர்ந்து எழின்மிகுமுனியைநோக்கி
உத்தநற்றவத்துக்காக உலகினில்பதினாறுண்டில் ன்
செந்தவந்துயர்த்தோருயோர் செல்வனைத்தந்தேன்கைக்கோ
டந்தமாம்நீங்கள்வாழும் ஆச்ரமமடைகுவீரோ.

வசனம்.

பரமேசுரரானவர் இந்தப்பிரகாரமாய் சிவகணங்களுக்குச்சொல்லிமிருகண்டேய மகாமுனியைப்பார்த்து உம்முடைய தவத்தினுக்குமெய்த்து பூலோகத்திலே பதினாறுவயதளவும் சீவித்துநல்லதவத்தில்மிகுந்தவனாய் எங்களுக்கு வருபவனாயொருதிவ்வியகுமாரனைத்தந்தேன் ஆகையால்உன்னுடைய பத்தினிசமேதனாய் ஆச்ரமத்துக்கெழுந்தருளென்று விடைகொடுத்தனுப்பி சிவனும்தமது கைலைக்குச்சென்றார் மிருகண்டேயரும் தமதுஆசரமஞ் சேர்ந்தபின்புமருத்வதி சொல்லுவதெப்படியென்றால்.



மருத்வதிசொல்-விருத்தம்

மாமுனிக்கரசேபோற்றி மாதவப்பொருளேபோற்றி
நேமமாயானைவேண்டி நெடுந்தவஞ்செய்தீரிப்போ
காமனையெரித்தஈசன் கருணையாய்த்தந்ததென்ன
க்ஷேமமாமிகவுண்டாக சீக்கிரம்அருள்செய்வீரோ

வசனம்.

அகோவாரும் முனிநாதரோசரணஞ்சரணமையாசுவாமிஇப்போது மிகுந்ததவமியற்றி காமாரியான ஈஸ்வரனிடத்திலே நமக்கு க்ஷேமமுண்டாகும்படியாய் வாங்கிக்கொண்டுவந்த வரமென்னமோஅதை அதிசீக்கிரத்தில் சொல்லியருளவேணுமையா மகாமுனிவரே.

இருவரும்சொல்-தரு-இராகம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

மருத்துவதி - தரு.

வரமதுநமக்கென்ன வாங்கினீர்முனிநாதா
அரனமக்களித்தது அடியாளுக்கருளுவீர்

மிருகண்டேயர்-தரு.

அருள்செய்தார்பாலக னரனமக்கொட்டில்
செருக்குள்ளஞானச் சிரோமணியே

மருத்வதி-தரு.

சதிபேசுதனமக்கு தந்தார்விமலனும்
நிசமாய்நூறுவயது நீர்கொள்ளொணாதோ

மிருகண்டேயர்-தரு.

ஒன்றுநன்றாக்கிறு யுதவியுறப்நற்றவம்
பண்ணுதவர்க்கு பலிப்பதென்மயிலே

மருத்வதி-தரு.

மயிலைப்போல்மகனுக்கு வனத்தில்தவமிருந்து
ஒயிலாகவரம்பெற்ற துமக்குத்தான்சரியோ

மிருகண்டேயர்-தரு.

சரியானசெவிடுமை தருகின்றதைத்தடுத்து
பரிவுள்ளோனுயொரு பாலன்போதாதோ

விருத்தம்.

ஈசனாருளினாலே இருவ்ரும்வழிநடந்து
நேசவாச்ரமத்திற்சென்று நிமலர்தன்னுடனேகூடி

ஆசையானுளங்களித்து அனங்கன்றனைமணிதன்னி
பாசமார்சேயமுற்று பரிவுடன்வருகின்றனே

தரு-இராகம் மத்தியமாவதி-அடதாளம்

பல்லவி.

கெர்ப்பமாகிவந்தாளே மருத்வதிமாது (கெர்ப்)

அநுபல்லவி.

கெர்ப்பமாகிவந்தாளே கீர்த்திசேர்மருத்வதியாள்
செப்புமுலைநுனிகறுத்து செங்கமலமுகம்வெளுத்து (கெர்)

சரணங்கள்.

கொண்டமூன்றுதிங்களுஞ் சென்று-கெர்ப்பந்தரித்த
கோலமனைத்துமனங் கொண்டு
கண்டத்திலுள்ளோர்மகிழ்ந்து கன்னியரெல்லாம்புகழ்ந்து
கொண்டையில்மலரணிந்து கூசிக்கூசியேநடந்து (கெர்)
வண்டுமொய்க்குங்குழல் சிலிர்த்து மலையொத்த
வாள்விழிஇரண்டு வெளித்து
பண்டுமுன்னிடைகனத்து பரிவுடன்வயிர்பொறுத்து
சண்டமதனைத் தடித்து சங்கரனைத்தும்பித்து (கெர்)
மெய்யுஞ்சொர்ணச்சாயை யெனவே-பச்சைநரம்பு
மேனியிற்றா நீலமென்னவே
பையபையநடந்து பாங்கிமாருடனேயிலாய்
வையலெல்லாமகிழ தத்தையைப்போலேநடந்து (கெர்)

மருத்வதிசொல்-விருத்தம்.

ஐயனேசிவனேநீரன் றளித்தநல்வரத்தினாலே
தையலென்வயிற்றிற்கெர்ப்பந் தரித்திடசந்தோஷித்தேன்
வையகத்தோர்நகைக்க வளருமெய்யெங்கும்நோகச்
செய்யவேமிகபயந்தேன் சிவசிவாதுயர்தீர்ப்பாயே

தரு-இராகம்-பைரவி-ஏகதாளம்.

கண்ணிகள்.

சிவசிவாநீர் துணை செய்யவேணும்
செட்டிப்பெண்ணுக்குத்துணை செய்ததுபோலே
தவநலத்தினில்தந்த வரம்போலே
தர்க்காத்துஎன்னைரட் சித்தருள்வீர்
புவிதனிலேயொரு பெண்ணாய்ப்பிறந்தநான்
புத்திரவேதனைசற்றும் பொறுக்குதில்லை



ஆனேநாங்களுன்னைநாடி அதிகதவமிருந்தோம்
தரணியிதில்நானீந்தத் தவிதாயப்படுவேனோ
நகைத்துமுப்புரமெரித்த நாயகனேநலமாள்வனே
நகைத்துக்கழுத்தினையறுத்தால்நாதனேநானென்னசெய்வேன்

கட்டியக்காரன்சொல்-பொதுவிருத்தம்.

"பெருத்தநல்வயிறுங்கண்ணும் பீளையுங்கோட்டுவாயும்
கரித்துணியிடையிற்கட்டி கையினில்சேலுங்கொண்டு
விரித்தநற்றலையினோடே மெல்லியாள்முன்னதாக
மருத்துவமாதுதானும் மகிழ்ச்சியாய்த்தோணினாளே

(வசனம்) இந்தப்பிரகாரம் பிரசவவேதனைபடுகிறமருத்வதியின்முன்னே மருத்துவக்கிழவி வருகிறகோலங்காண்க.

மருத்துவக்கிழவிவருகிற-தரு-இ-ம்-துசாவந்தி-அடதாளம்

கண்ணிகள்.

ஓட்டகம்போலேமுதுகுகூனி ஒருகையிலேதடியுங்கொண்டு
மட்டற்றதவமருத்வதிமுன்னே மருத்துவச்சியுந்தோணினாள்
நாறும்போலேமுலைகளாட நரைத்ததலையும்விரித்துக்கொண்டு
வாழிதன்னைவிரலிலணிந்து மருத்துவச்சியுந்தோணினாள்

கிழவிகளைப்போலேபேசுதல்-வசனம்.

கலங்கிடக்குது கழுவாமலே, கலநெல்லுகிடக்குது குத்தாமலே, மொறங்கிடக்கு மெழுகாமே, முத்தங்கிடக்குது கூட்டாமே, சாக்கடைகிடக்குது கழுகாமலே, சாணிகிடக்குது தட்டாமே, ஆலடி வேம்பே அரசடியொதுக்கே, ஒதியம்பட்டையே-உன்னையார்! சேத்தப்போறார், வாய்க்கியங்கரையிலே - வரப்பிலே-தோப்பிலே-ஏரிக்கரையிலே உச்சியிலே-உருமத்திலே, அந்திசந்திவேளையிலே - ஆரையும் மயக்கிறதுபோலே, மயக்குறியோ, தண்ணிக்குடத்தை யிறக்குப் போட்டு குலுக்கிறதுபோலே குலுக்கிறையோசி, ஓ, ஓ, ஓடு, ஓடு, மூளி.

மருத்துக்கிழவியைக்கண்டு-மருத்வதிசொல்லும்

தெங்குறடைசிலப்பதியம்.

வசனம்

ஆவிதான்சோருது அடிவயிறுளையுது
அன்னமேயென்செய்வேன் அருமைமாதே ஆ-ஆ-ஆ-அம்மா
தாவியேபாலனுந்தலைகிறுகிறுக்குது
தையலேயென்செய்வேன்சகிகள்மாரே ஆ-ஆ-ஆ-அம்மா

மேவியகோரமோவிண்ணவர்சாபமோ
மெய்யலாமுளையுதே மெல்லியார்காள் ஆ, ஆ, ஆ-அம்மா
கூவியபாலனுக்குடல்தனைச்சுருட்டுது
குக்குதுவலிக்குது கோதைமாரே ஆ, ஆ, ஆ-அம்ம
தந்தைதாயாங்கள்முன் செய்தவமுமிதுவோ
மைந்தன்வரவதிலேயான்மயங்கமுறையே
விந்தையாயெனைமுனிவிரும்பிசேர
வந்தவேளையோ அறிகிலேன்வனிதைமாரே

தரு-இராகம்-சங்கராபரணம்-அடதாளம்

கண்ணிகள்.

என்னசெய்வேன்எதுசெய்வேன் ஈசனே-இப்போ
என்னிடுப்புநொருகுதையோ ஈசனே
பின்னியவயருளையுதையோ ஈசனே-எந்தன்
புத்திதடுமாறுதையோ ஈசனே
கண்ணிரண்டுசொருகுதையோ ஈசனே-இரு
காதழண்டுசோருதையோ ஈசனே
மயக்கமாய்வருகுதையோ ஈசனே-கெர்ப்ப
மார்பிலேதிப்புனுதையோ ஈசனே
சகிக்கமுடியாதையோ ஈசனே-நாளீ
சுவாமியென்னசெய்வேனினி ஈசனே

சிசபத்தியம்.

மாதேயென்னடிமெத்த வயிறுநொந்துளையுது
ஆதரவாயெந்தன் அருகில்வாடி
பாங்கியேநீயெந்தன் பரிதாபம்பாரடி
ஏங்கித்தவிக்கிறே னென்னசெய்வேன்
வார்த்தைக்குத்தான்பிள்ளை வயிற்றுக்குயேமனும்
வையகத்தோர்க்குள்ள வாழ்வுமிதுதான்
நீதியில்லாமலே நிஷ்டூரம்பேசுகிறீர்
பாதகர்நீங்களிப்பார்படவும்
நானதைக்கண்டுமகிழ்வேனோநங்கைமாரே
பிரமதேவனுமிப்படிபேதையாகப்
பாரில்பிறந்திடவருத்தத்தோர்பாவமேதோ
சிவசிவாயினிபொறுத்திடேனென்னசெய்வேன்



தரு-இராகம்-பந்துவராளி ஜம்பைதாளம்

கண்ணிகள்.

என்னசெய்குவேனீஸ்வரனே ஏதுசெய்குவேனீஸ்வரனே
அம்மம்மாரேயென்னசெய்வேன் அடிவயறுநோகுதம்மா
ஆயிரந்தேள்கொண்டினாப்போல் அங்கமெல்லாநோகுதையோ
பாம்புவந்துதீண்டினாப்போல் பக்கமெல்லாநோகுதையோ
தாதிமார்கள்யாவர்களும் தாங்களென்னருகில்வாரீர்
சகிமார்கள்யாவர்களுஞ் சார்பில்வந்திருக்கொணாதோ
வாருங்கடிதாதிமார்கள் வன்னமுலைமாதர்காள்
பாங்கிமாரேயென்னசெய்வேன் பழுவெலும்புநோகுதையோ
பூவையாய்ப்பிறந்ததினால் போதுமையாபிரம்மதேவா
என்தலைவிதிப்படியோ எழுதினவன்கற்பனையோ
செங்கமலத்தாதிகளா சீக்கிரமாய்வாருங்கடி
கட்டியென்னைப்பிடிக்கவொருகாரிழையாள்வாரவொண்ணாதோ
சேர்த்தென்னைப்பிடிக்கவொருசேயிழையாள்வாரவொண்ணாதோ

தாதிமார்சொல்-விருத்தம்

இந்தநல்வனத்தின்மீதிலிருந்துநீபுலம்புகின்றாய்
மைந்தனைப்பெறுவாய்நீயும் மனதினிற்கவலைவேண்டாம்
சிந்தையிலையமென்ன சிவனதுக்கிருபையுண்டு
உந்தனுக்கருகிருக்கும் உயர்துணையாமேபாராய்

(வசனம்) அகோவாருமம்மா மருத்வதிமாதே இந்தசிங்காரவனத்திலேயிருந்து மெத்தவும்நொந்து புலம்புகிறாய் உனக்கு யாதொரு குறைவில்லை கோடிசூரியப்பிரகாசமாய் நவமன்மதாகிருதியாய் தீரத்தரமும் தபோநிஷ்டனுமாய் ஒருகுமாரனைப்பெற்று வளர்த்திசீராட்டுவாய் உன்மனதுக்குச் சந்தோஷமாயிருப்பாய் சந்தேகமில்லை ஈஸ்வரனுடைய கிருபையுமுண்டு உனதுபக்கத்திலே நாங்கள்யாவரும் கூடிக்குலாவிக்கொண்டிருக்கிறோம்பயப்படாதேயம்மாமருத்வதி.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்

மாதமோர்பத்துசென்று மைந்தனைப்பெறுவதற்கு
வேதனையாகநொந்து விமலருக்கபயமென்று
தாதிமாருடனேகூடி தவித்தவள்வயிற்றில்கெர்ப்பம்
வாதனைப்படமாட்டாமல் மருத்வதிபுலம்புவாளே

தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்

பல்லவி.

அம்மம்மா என்ன செய்வேன் அடியம்மம்மா

அநுபல்லவி.

அம்மம்மா யென் — னடிவயருளைய துவிம்முது
அரையிடைமேல்மூச் — செறியுது (அம்ம)

சரணங்கள்:

சகிப்போமோ அடிமானே
சகிப்போமோ அடி — தையலேயிப்போது
நருக்குவலியாகவே — உருக்குதேஎன் திரேகம் (அம்ம)
மயக்கமாய்வருகுது வயிறுநொந்துளையுது
சயக்கப்போகுதில்லை — சாமிக்குச்சொல்லுங்கடி
தரிக்கப்போமே அடி — தையலேயிப்போது (அம்ம)
நருக்குவலியாகவே உருக்குதேஎன் திரேகம்
இடுப்புகள் கடுக்குது — இருதடை நோகுது
இருக்கவும்போகுதில்லை — இருடிக்குறையுங்கடி (அம்ம)

விருத்தம்.

செய்யவள் வயிற்றில் வந்து சிறந்ததற்கருவுமாகி
ஐயதோர்களைமெய்ஞ்ஞானத் தோங்கியப்பயிறுமாகி
பொய்யெனுங்களையெடுத்து பொற்புதவளர்ந்தசாலி
வையகத்தவிற்றிங்கார வனத்திடைப்பிறந்தடம்மா

தரு-இ-ம்-மத்தியமாவதி-அட்டதாளம்

பல்லவி

மைந்தர்பிறந்தாரே-முனிவர்க்குமைந்தர்பிறந்தாரே

அநுபல்லவி.

மைந்தர்பிறந்தாரே — மருத்வதிவயற்றில்
சந்த்ரமுகந்தபாலன் — தோகைபுத்திரசோபந்திர (மைந்)

சரணங்கள்.

வேதமிருகண்டமுனி — விரும்பித்தவசுபண்ண
மாதவத்தினாலே-இந்த — வையகத்திலில் நல்ல (மைந்த)
சந்ததியில்லாமலே முனி தவசுசெய்தபலத்தினாலே
வந்துதித்தார் புவிமெச்சும் மாமறைகளோதிடவே (மைந்த)

—— ❀ ——



கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

வேதியர்தமக்குநல்ல விளைதானம் விளங்கச்செய்த
ஓதிலா கசதானங்கள் சிறப்புடனளித்துநல்ல
மாதவத்தோர்கட்கெல்லாம் மகிழ்வுடன்தனியளித்து
போதசர்க்கரைவழங்கிப் புகழ்ந்துதாலாட்டினாரே

(வசனம்) இந்தப்பிரகாரமாகக் குழந்தைபிறந்து பத்துநாளுமானபின்பு புண்ணியாக வாசம்பண்ணி சாதகரணம் நாமகரணங்கள் முதலானதும் பண்ணியான பின்பு சுமங்கலிகள்கூடி தொட்டிலிட்டுத் தாலாட்டுகிற விதக்காட்சி......

தாலாட்டு-தரு இ-ம்-புன்னாகவராளி அடதாளம்.

கண்ணிகள்.

சீரானவேதகுலம் — செழிக்கவந்ததிரவியமே
பேரானநல்லமுதே — பெருமானேகண்வளரீர்
சிலரெங்கள்நற்றவத்தில் — செல்வனேவந்துதித்த
கோலமுனிமிருகண்டர் — குலக்கொழுந்தேகண்வளரீர்
இல்லைநீடிந்துகொடிவதங்கி — இல்லையென்றுபோகாமல்
மலைமாதம்போற்றரித்த — மைந்தனேகண்வளரீர்
அஞ்செழுத்துமாய்ந்து — அரனடியைப்பூசைசெய்து
வஞ்சத்துயர்தீர்க்கும் — மைந்தனேகண்வளரீர்

இதுவுமது-விருத்தம்.

சித்தணையுறுநாட்டத்து சென்றநாளுதயந்தன்னில்
மைந்தனுக்கினியநாமம் மார்க்கண்டனெனவகுத்து
இந்தநன்னாமத்தாலே எவர்களுமழைப்பிரென்று
விந்தையாய்த்தொட்டிலிட்டு விரைவில்தாலாட்டுவாரே

தரு-இ-ம்-எதுகுலகாம்போதி திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

ஆராரோராரிரரோ — ஆரிரரோ ஆரரோ—ஆராரோ
சீரானமிருகண்டேயர் — தவத்துதித்தசெல்வனே
ஆரியமாமுனிவர்துயர்தீர்க்க — ஐயனேகண்வளரீர்
பேருடையோர்வந்துதித்த — பெருமானேகண்வளரீர்—ஆரா
தாமரையிலைநீர்போலிருப்பேரும் — தயங்கிடும்வேளையிலே
மாமறையோதவென்று — நான்பெற்றமைந்தனேகண்வளரீர்—ஆரா
அச்சில்லாத்தோடிபோல்இருப்பேரும் அசைந்தாடும்வேளையிலே
உச்சிதமாகவந்தநான்பெற்ற — உத்தமாகண்வளரீர்—ஆரா

பக்கமடைத்துகுழந்தைஒன்றில்லை என்றெண்ணிவாடாமல்
பாக்கியமதுபோலநான்பெற்ற பாலனேகண்வளரீர்—ஆரா

விருத்தம்

பாலனல்வயதோரைந்தில் பாங்குடன்பள்ளியோதி
சாலவேநாலுவேத சாஸ்திரமாறுங்கற்று
கோலமாய்நீறணிந்து குருவருள்படைத்துநல்ல
சீலமார்க்கண்டனுன செல்வனுஞ்சபைக்குவந்தான்.

(வசனம்) இந்தப்பிரகாரமாய்க் குழந்தைக்குவயது ஐந்துநிறைந்தபோது யோகாப்பியாசம்பண்ணி நாலுவேதமும் ஆறுசாஸ்திரங்கள் முதலானதுங்கற்று விபூதிருத்திராட்சாபரணாலங்கிருதனாகிசீலனாய் ஐந்துவயதின்குழந்தைவடிவாய்சபைக்குவருகிறவிதங் காண்க.

மார்க்கண்டன்வருகிறது.

தரு இராகம்-மோகனம். திரிபுடைதாளம்.

பல்லவி.

வாலிபன்வந்தானே மார்க்கண்டனென்னும் வாலிபன்

அநுபல்லவி.

வாலிபன்வந்தானே வையகந்தன்னிலே
சாலவேநால்வேத சாஸ்திரமாறுங்கற்று—வாலி

சரணங்கள்.

ஒன்றிரண்டுவயதில்பள்ளியோதி ஓரைந்துமுன்னிவிட்டு
தண்டைச்சதங்கையிட்டுகரந்தனிலே தங்கக்கடையமிட்டு
கண்டசரங்களிட்டுக் கனகப்பொற்பணியிட்டு
வண்டாடும்விழிதன்னில் மையிட்டுஒயிலாக-வாலி
சந்தியானமத்தியானமும்செபதபஸ்தானமவுபாசனமும்
சொந்தவயதோரைந்தில்சிவ பூசைதுலங்கியநேமங்களும்
இந்தவிதிமுறை யெல்லாமிகக்கற்ற
சந்தோஷமாகவே தாயின்மனம்பூரிக்க-வாலி
நெற்றியில்நீறணிந்து குருவருள்நேமத்துப்பணிந்து
கர்த்தனையந்திசந்திஉச்சி மூன்றுகாலமும்தானினைந்து
புத்தியுட்பத்தியும் மெத்தவுடையவராய்
சத்திரிஷிகள்கண்டு சந்தோஷமாகவே-வாலி

மார்க்கண்டேயர் - மிருகண்டேயருக்குச் - சொல் - விருத்தம்

மறைகளுக்குணாகள்சொல்லும் மாதவமுனியேபோற்றி
கலைகண்டிசாஸ்திரமோதுங் காரணகுருவேபோற்றி



வரையெனும்புராண நூல்கள் வகையதுதெரிந்தாய்போற்றி
தாரணியிலென்னையின்றதந்தையேதாயேபோற்றி.

வசனம்.

அருமையாகிய ஆறுசாஸ்திரம் நாலுவேதங்களின் பொருளுக்கும்தவப்பெருமானே போற்றிநன்னூற்கலிலுள்ள விதிகள்யாவையுங்காகண்டுதெரியச்சொல்லப்பட்ட குருநாதனேபோற்றி மலைபோன்றதுனேகஆகமங்களையறிந்துரைக்கும் ஐயனேபோற்றிபூவுலகத்திலே என்னைப்பெற்றதந்தையேதாயேபோற்றி.

மிருகண்டர்-சொல்-விருத்தம்.

ஆன்றிருவருளால்வந்த அன்புள்ளசுதனேகேளாய்
சிரமுளஆசீர்வாதம் தேவர்கள்முனிவர்மெய்க்க
கருணையால்வாழ்ந்திருப்பாய் கடவுள்தன்னருளினாலே.
மருமலர்வாசத்தேர்டு மகுத்துவம்பெற்றுவாழ்வாய்.

வசனம்.

ஆகோவாராய்மகனே மார்க்கண்டாதேவர்கள் முனிவர்கள்ஆசிர்வாதத்தினாலே நீ என்னுஞ்சிரஞ்சீவியாகயிருப்பாய் எழுந்திரும்பாமகனேமார்க்கண்டா.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

இப்படியிருக்கும்நாளில் இருடியாமிருகண்டேயர்
மைப்படிவிழியாளானமருத்வதிமயிலாளோடும்
அப்பனிசடையோன்றந்த ஆயிசுமாச்சுதென்று
ஒப்பிலாமகனைநோக்கி யுருகுவார்கருகுவாரே.

வசனம்.

இவ்விதமாயிருக்கிறநாளில் மிருகண்டேயமகாமுனிவரும்மருத்வதியும் சிவன்றந்தவயதில்ஐந்துமாயிற்றென்று உவமையற்றமகனை நோக்கி விதனப்படுவதுகாண்க.

---

மருத்வதி-புலம்பல்-தரு-இராகம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

கண்ணிகள்.

சந்ததியின்பாசத்தாலே தவமதுநானிருந்து
மைந்தன்மீதிலாசையாலே வயிற்றிலிடங்கொடுத்தேனோ
போதவேதவங்கள்செய்து புத்திரனைப்பெற்றேனோ
வேதமுனிவர்நகைக்க விதித்தாயோபிரம்மதேவா
சைவநெறிதான்தழைக்க சங்கரனார்தந்தகோவே

வையகத்தில்மார்க்கண்டனே மறலிவந்தாலென்னசெய்வேன்
பாலகனில்லாதபேர்க்கு பரலோகமில்லையென்றார்
மாலயனுறைசபையில் மாமுனிவர்தானுரைத்தார்
சேல்விழியின்மாதர்வந்து செல்வர்குறையென்றதாலே
ஆலகாலமுண்டவீச ராஜேர்பாதம்போற்றிசெய்து
இலமுள்ளதவமிருந்து சிவனடியைப்போற்றிசெய்தேன்
மாலயனுந்தேடிக்காணா மகாதேவர்தேடிவந்து
பாலகாவுனக்களித்த பதினாறினிலேந்துமாச்சே
காலனும்வந்திடுவானே கண்மணியேயென்னசெய்வேன்
கோமானேநாமென்னசெய்வோம் குமரனேநாமென்னசெய்வோம்
எமனுக்கோநான்வளர்த்தேன் என்மகனேஎன்னசெய்வேன்

மார்க்கண்டன்சொல். விருத்தம்.

தந்தையேதாயேநீங்கள் தயங்கியேமனதுநொந்து
விந்தையாயுள்ளம்நைந்து வேற்றுருவாவதேது
சந்திரமுகங்களெல்லாம் சோர்ந்திடுங்கருமமேது
எந்தனுக்கறியயிப்போ யின்னதென்றியம்புவீரோ.

வசனம்.

அகோவாருங்கள்என்தாய்தந்தைமார்களே எப்போதும் சூரிய உதையத்திலே யிருக்கிற அலர்ந்த செந்தாமரைப்புட்பம்போலேயிராநின்றதங்களிருவருடைய முகாரவிந்தமானது அடியேனைக்கண்டபோதெல்லாம் சந்திரனைக்கண்ட கஞ்சமலர்ப்போலே வாடிவதங்கியிருக்கவேண்டியகாரணமென்ன நானேதாவது குற்றங்குறைகள்செய்திருந்தால் அடியேனுக்கு தெரியப்படச்சொல்லுங்கள் என்னைப்பெற்றோர்களே.

மருத்வதி. புலம்பல்-தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

ஐயோவுந்தனைப்பிறந்திருக்கவும் அயனார்செய்விதியோ
அரசன்சதியோஇதுசதியோநல்லகதியோபாலகா
ஐயனே ஐயனே ஐயனே அகிலமகனே
வையகந்தனில்மகனையிழந்து வாழவும்போமோ
பொறுதுவாமோ இதுதாமோ-மகனே
வாடுதே வாடுதே வாடுதே எந்தனுளமும்மகனே
பாவியெமன்வந் துன்னைப்பிடித்தால்
பந்துமேயுடலம்எந்தனுடலம் அன்டபடலம்மகனே
பாலகா-பாலகா. பாலகா அறிகிலேனேமகனே



மேவித்தவஞ்செய்துன்னைபெற்றதும்வீணாகப்போச்சே
வெகுபேர்க்குவசையாச்சே மகனே
வித்தகா வித்தகா வித்தகா விதிதானே மகனே
பாரிலுந்தனைப்பெற்றதுமேகொடும்
பாவியானேனேஇனிநானென்னசெய்வேன் மகனே
பாவமோபாவமோ பாவமோ என்னசெய்வேன்மகனே
ஆருமில்லாமலலைந்திடப்போமோ அருமைக்கண்மணியே
நவமணியேஇனிதனியே மகனே
அப்பனே அப்பனே அப்பனே அறிகிலேனேமகனே
காலன்வந்துன்னைக்கட்டியிழுத்தால் கண்டுற்பார்ப்பேனோ
சகிப்பேனோ கதிதானோ கதிதானோ மகனே
காலமோ காலமோ காலமோ அறிகிலேனே மகனே
ஆலமுண்டவரளித்தவயதுஆச்சுதே
அவமே முனஞ்செய்பவமேஇதுதவமே மகனே
அஞ்சுதே அஞ்சுதே அஞ்சுதே என்னசெய்வேன்மகனே

ஆகவல்.

என்னென்றுசொல்வேன் என்னிடமகனே
மன்னனும்யானும் மகிழ்ச்சியிதாக
திரிபுரமெரித்த திங்கள்தற்சடையோன்
அருமையாயளித்தவென்னைப்பனேகேளாய்
தந்தையும்யானுஞ்சகிருடன்வாழ்ந்து
சுந்தரமாகச்சுகமுற்றிருக்க
எந்தனைமனையிலிருத்தியேமுனிவர்
இந்திரன்சபைதனக்கேகியபோது
காட்சிகோசரமங்காத்திருந்தவெம்முன்
சாட்சியதாகச்சபையர்களிருந்தார்
வந்துமேயந்தன் வரிசையாய்க்கண்டு
அந்தமாய்த்தன்னீ ரன்புடன்கேட்க
அன்னமும்நீரும் அருந்துவிரென்று
கன்னிமார்தங்கள் சுமனைப்பணிந்தேன்
அன்னவரிருவரும் அரிசுவம்பயுந்தன்
மன்னவுமாங்கே மகவெனக்கேயென்றார்
திங்கள்செஞ்சடையோன் திருவருட்துறையால்

எங்கட்குப்பாலகனில்லையென்றுரைத்தேன்
மாமுனியிந்திரன் மாசபைக்கேகிய
நேமமதெல்லாம் நெறிநாடுரைத்தேன்
இந்திரன்மொழியவ் விருவருங்கேட்டு
சிந்தனையுற்று சிவசிவாவென்று
உள்ளமுங்கலங்கி யுருகியென்முன்னே
பிள்ளையில்லாதபெரும்பாவிசையில்
நீருந்திடுதல் நிறைகுறைவென்று
ஆரமாய்நின்று ஆற்றியேயென்னை
மைந்தரில்லாத மாபாவிதன்னை
எந்நாளாகிலும் இயலுடன்காண்பது
நிந்தையென்றுநேரிழையிருவரும்
எந்தனைநகைத்து யேசியபின்னர்
ஏந்திழைவாணும் ஏங்கியேவாடி
சாந்தியடைந்திடச் சமயமேதென்று
இறையவன்வருகைக்கெதிர்பார்த்திருந்தேன்
மறையவர்சபையில் மகிழ்ந்திடுமிந்திரன்
இன்புறமைந்தரில்லார்க்குமோட்சம்
அன்புடனுண்டோ அறைகுவீரென்ன
இந்தமொழியுன் றந்தையுங்கேட்டு
நொந்தவரேங்கி நோம்பினளென்முன்
அருமையதாக அருந்தவஞ்செய்யில்
பெருமையதாகப்பிள்ளையுண்டாவாய்
காசிமாநகர்க்கு கருத்துடன்சென்று
விசியகங்கையில் விதிபுடனாடி
சிவனையுள்ளிருத்தி செங்கரங்குவித்து
அவனியிலிருபரும் அருந்தவம்புரிந்தோம்
எங்களுள்ளன்புக் கிரங்கியேவனத்தில்
சங்கரனுமையவள் சமேதராய்வந்து
முப்புரமெரித்த மூர்த்தியுமெங்கள்
தப்பிதமெல்லாந்தகவாய்விலக்கி
பாலனேயுனக்குப்பதினாறுண்டென
ஞாலத்தோர்புகழ நலமுடன்றந்தார்
வாங்கிடேவரத்தை வையகம்புகழத்
தாங்கியேகர்ப்பம் தரித்துமேவயிற்றில்
திங்கள்நாற்பத்தும் சென்றபின்பிறகு



மங்களமாக மகிழ்ந்துனைப்பெற்றேன்
உந்தன்கைகளா லுகந்திடுமோட்சம்
சுந்தரமோட்ச சாம்பிராச்சியமடைய
வேண்டியேயாங்கள் விருப்பமாயிருக்க
ஆண்டிடும்வயதுபத் தாச்சுதேமகனே
துடிதுடித்திடுதே தோகையென்னுள்ளம்
அடிவணங்கிடினு மந்தகன்விடானே
காலனைக்கண்டால் கலங்குமேலோகம்
பாலனேயானும் பாரினிலோங்கதீ
கூத்தனும்வந்துனைக் கொண்டுபோவானே
பார்த்திடுவேனோ பாவியென்கண்ணால்
நேமமாய்நாங்கள் நெடுந்தவஞ்செய்தோம்
மாமுனியானும் மாபாவியானேன்
பிள்ளையைப்பெற்று பெரும்பாவியானேன்
கொள்ளைகொடுக்கவோ குமாரனைப்பெற்றேன்
முன்செய்ததவத்தின்முறையிதுவோதான்
என்னசெய்வேன்மகனே என்துகண்மணியே

தரு-இம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

மகனேநாங்களென்ன    செய்வோம்
வாசிவயதுசிறுபாலா    வுன்னையும்பொல்லாத
காலன்கையிலொப்பிக்க    பாலூட்டிவளர்த்தோமே
ஆறுமோமனந்தேறுமோ வாடாஒருமுத்தந்தாடாஉனதுநல்ல
பேருமிழந்தயிரு    பேரும்பிரிந்துநாங்கள்-மகனே
எத்தனைதவங்கள்செய்துநான்    பெற்றவயிறெனக்கு
பத்திபெரியுதடா    மகனே
சித்தமிரங்கிக்காலன்    பத்தியிழுக்கவந்தால்மகனே
தாவியேயென்மனம்    தாவிக்கூவியழுகஅவன்
மேவிப்பிடிக்க    வந்தால்
பாவியுந்தனையிழந்தாவி    வைத்திருப்பேனோ
மகனேநாங்களென்னசெய்வோம்

மருத்வதிசொல்-விருத்தம்.

மைந்தனேஅந்தநாளில் மட்டிலாத்தவங்கள்செய்து
உந்தனைப்பெறுவதற்கா யுயிர்க்கழுவிலிருந்தேன்

சிந்தைநைந்துருகிமெத்தச் செல்வனேயுன்னைப்பொல்லா
அந்தகன்றனக்கொப்பித்து அகமகிழ்ந்திருக்கலாமோ

தரு-இ-ம்-பைரவி-ஏகதாளம்.

கண்ணிகள்.

அந்தநாளில்மகனே தவமிருந்து ஈசர்
அடவிதனில்காட்சி தந்தபோது
மைந்தனேயாமுன்னை வேண்டினோம்-காலன்
வந்திடாமல்வரங் கேட்டிலோமே
பாலடைக்குப்பால் வார்த்தபோது-நாங்கள்
பாக்கியங்களிட்டுப் போட்டிலோமே
காலனோகண்ணில் கண்டபோதே-மனம்
கலங்கிடாதோஎந்தன் கண்மணியே
உன்னைநாங்கள்பெற்ற நாள்முதலாய்-மகனே
ஒருபொழுதும்விட்டுப் பிரிந்ததில்லை
என்னவென்றுமனந் துணிந்திருப்பேன்-மனம்
ஏங்கிடாதேயெந்தன் கண்மணியே
மன்னர்மைந்தாமகனே என்னசொல்வேன்-எங்கள்
வயிறுபற்றியெ எரியுதடா

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்.

என்னுடைதாயேகேளிர் இத்தனை துயரம்வேண்டாம்
பின்னையோர்ஜெனனமாகப் பிறந்திடமாட்டேன்கண்டீர்
என்னறிவாலேயீசன் எழிற்பதம்பூசைசெய்து
உன்னிதமானவுங்க ளுளமகிழ்ந்திடச்செய்வேனே.

வசனம்.

ஆகோவருமம்மா தாயே நீங்கள் இத்தனை துயரப்பட வேண்டிய காரணமென்ன தேவரீர்கள் பூசைசெய்த பரமேஸ்வரனை யானும் பூசைசெய்து இனிஇறப்பும் பிறப்புமற்றுப் போகும்படியான வரம் வாங்கிவந்து உங்களுடையபரிதாபந்திரும்படிக்குதவசெய்யப்போகிறேன் நீங்கள் உங்கள்மனச் சஞ்சலத்தை யொழியுங்களம்மா தாயே.

மருத்வதி-புலம்பல் இ-ம்-பிலகிரி-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேனினிக் கேதுசெய்வேனடா-என்மகனே
மூன்றுவிசாந்த வயதோனாந்திருக்குதேன்-மகனே
என்னசெய்வோமென்று ஏங்கவேண்டாமெந்தன் அன்னையாரே
ஈசோட்டுவெய்தீந்தபீசுசொங்கேபோனார் அன்னையாரே



காலன்றனைக்கண்டு கலங்கியழுவாயடா என்மகனே-என்ன
காரணங்காணவோ உருவெடுத்தாயெந்தன்-மகனே
சூலதரன்பாதந் துணையாகக்கொண்டுநான் அன்னையாரே-எம்மை
தூரத்திவிடுவேன்நீங்கள் துக்கப்படவேண்டாம்-அன்னையாரே
பாவியுன்னைசிறுபாலனென்றறிவானோ என்மகனே-அவன்
பாசசூலமெந்தன்பரிதாபம்பார்க்குமோ என்மகனே
தேவியங்காளன்திருவடிபார்க்கவே அன்னையாரே-எமனைத்
தீண்டவொட்டாமல் திருவருள்புரிகுவா-ரன்னையாரே

மருத்வதி-புலம்பல்-விருத்தம்.

இந்தவாறுஇயம்பியமைந்தன்முன்
நொந்தழுதுபுலம்பித்தவித்துளம்
நைந்துவாடிமயங்கித்தயங்கியே
வெந்துநைந்துவினாந்துபுலம்புவாள்.

தரு-இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஐயனேமார்க்கண்டா ஆராதுஎன்துயரம்
ஆருடன்சொல்லப்போறேன் என்மகனே
செய்யுஞ்சயிலவாழும்சிவனருளாப்படைத்து
சிந்தைமகிழ்ந்திருந்தோம் என்மகனே
வையகத்தோர்நகைக்க உந்தன்மேலெங்களுக்கு
வாஞ்சைகிடமாச்சுதடா என்மகனே
கையில்கிளிவளர்த்துப் பூனைக்கிரைகொடுத்த
கதையைப்போலாச்சுதடா என்மகனே
மெய்யென்றுநீதன்னை நம்பி மெத்தமனதிலெண்ணி
விளித்தேன்கனவாச்சுதே என்மகனே
பாலகர்வுந்தனுக்கு பரமசிவன்கொடுத்த
பதினாறுமாயிவிட்டால் என்மகனே
காலனார்தூதர்வந்துகட்டியிழுக்கவோ
கதறியழுவாயடா என்மகனே
என்றுமிருப்பாயென்று இருவருமகிழ்ச்சியாய்
எண்ணிமகிழப்போமோ என்மகனே
இன்றுன்கண்ணிறம்பொல்லாஎமனைக்கண்டுகலங்கி
ஏங்கயாம்மகிழ்வோமோ என்மகனே

மைந்தனே நீயே யெங்கள் பாவஞ்செய்த வயிற்றில்
வந்துபிறப்பதேனோ — என்மகனே
உந்தனையேமன் கையில் ஒப்பிக்கொடுத்தபின்பு
உயிர்வைத்திருக்கலாமோ — என்மகனே
எள்ளுநீருங்கலந்து எங்களிருவருக்கும்
இறைப்பாயென்றிருந்தோமே — என்மகனே
அள்ளியதஞ்சையுண்ட அண்ணலாரடிதேடி
ஆசையாய்த்தவஞ்செய்தோம் — என்மகனே

விருத்தம்.

நஞ்சணியுங்கண்டத்தான் சிவனருளாலுனைப்பெற்ற நாளாய் நாங்கள், கொஞ்சிமிகவளர்த்தெடுத்துக் கோதாட்டிப்பிள்ளையென்று குறித்தோமெங்கள், நெஞ்சகத்திலுனதுகையா லிருப்போர்க்குமோட்சமென்று நினைத்தோம்நாங்கள், வஞ்சமில்லாதவெங்கள்கெதி வளமதென்னமகனே நீவழுத்துவாயே.

வசனம்.

அடா வாடாமகனே மார்க்கண்டா எங்களிருவருக்கும் அந்தியகாலவேளையிலே எள்ளுந்தண்ணீருமிறைப்பாயென் றெண்ணியிருந்தோம் இப்போது எமன்வந்துபிடித்துக்கொண்டால், என்னசெய்யப்போகிறோம்மகனே மார்க்கண்டா.

மிருகண்டேயரும்-மருத்வதியும்-புலம்பல்.

தரு-இம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

என்னநான்செய்குவேன் — என்மகனே-மார்க்கண்டா
எமன்வரும்நாளாச்சே — என்மகனே
முன்னமீதறியாமல் — என்மகனே-முனிவர்
முழுமதியழிந்தாரோ — என்மகனே

மார்க்கண்டன்-தரு.

நாளாகுதென்றுசெய்யும் — நற்றவங்களொளித்தும்
நன்மைக்கடக்கலாமோ — தாய்தந்தையே
ஆளாய்ச்சிவசங்கர — னடியிணையைப்பூசித்து
அந்தகனைவிழ்த்துவேன் — தாய்தந்தையே

தாய்தந்தையர்-தரு.

கண்ணேயென்கண்மணியே கட்டிமுத்தேயென்மனம்
கலக்கமுற்றுவாடுதே — என்மகனே



தன்னருள்கூர்ந்தசிவன் தாளிணைபோற்றுமன்னாள்
தயக்கமுற்றிடயேனோ — என்மகனே

மார்க்கண்டன்-தரு.

தயக்கமுற்றுநல்லன்னம் தண்ணீரில்லாதுருகில்
தரிக்குமோ உங்கள்பிராணன் — தாய்தந்தையே
மயக்கமேனுங்களுக்கு மாதவனைப்பூசிப்போர்முன்
மறலிவருவதேது — தாய்தந்தையே

தாய்தந்தையர்-தரு.

ஏதென்றுரைக்கிறாய்நீ எங்கள்மனதிற்குறை
ஈசனறிவாரடா — என்மகனே
கூறென்றுமுனார்க்கிடா சுதனேயெங்கட்குத்திடம்
சொன்னதுபோதுமடா — என்மகனே

மார்க்கண்டன்-தரு.

போதும்போதுமென்றீர்போர் புலம்பித்தவிக்கிறீர்கள்
புவிதனைப்போற்றுவீர்காண் — தாய்தந்தையே
ஏதுமறியார்போலவேக்கமுற்றுங்கலக்கி
இதயங்குழையலாமோ — தாய்தந்தையே

தாய்தந்தையர்-தரு.

ஆமோவென்றெங்களைநீ ஆக்கடியஞ்செய்கிறாய்
அந்தகனுக்கேதுரைப்பாய் — என்மகனே
தாமோதரனாலுந்தலைவிதியைத்தவிக்க
தன்னுணர்வதுரைப்பாய் — என்மகனே

மார்க்கண்டன்-தரு.

தன்னுணர்வேதென்றிந்தகரையிற்றயங்கலாமோ
தலைவிதியாரறிவார் — தாய்தந்தையே
என்னுயிர்க்குயிரானஈசனறியாதுண்டோ
ஏனுங்கட்கிம்மயக்கம் — தாய்தந்தையே

தாய்தந்தையர்-தரு.

பெற்றமனம்பித்தந்தப்பிள்ளைமனங்கல்லென்று
பேசும்மொழிப்படிதோ — என்மகனே
சுந்தமனத்தோனேநீசொல்வதெல்லாமெங்கட்குச்
சூதாகத்தோணுதடா — என்மகனே

மார்க்கண்டன்-தரு.

ஆகாதெனக்குமெத்த அதிசயமாகுதந்த
அந்தகனெங்கிருப்பான் — தாய்தந்தையே

சாகாவரம்பெற்றிந்தசம்சாரபயமற்று
சந்தோஷமாயிருப்பேன் தாய்தந்தையே

மார்க்கண்டன்சொல்-விருத்தம்.

அருமையாய்த்தவமிருந்து அரனடிபூசைசெய்து
ஒருமையாய்ப்பயின்றெடுத்த உத்தமித்தாயேகேளும்
தருமனுக்கஞ்சிடாமல் தற்பரன்றனைப்பூசித்து
வரும்வினைக்கொடியறுத்து மனத்துயரகற்றுவேனே.

வசனம்.

அகோவாருங்களென்தாய்தந்தையாரே நீங்கள்எனக்காகவரம்பெற்ற வயதுபதினாறும் முடியுமுன்னமே இந்தஅண்டபிண்டசராசரங்களுக்கும் மூலகாரணப்பொருளாயிருக்கிற ஆதிபராபரவஸ்துவாகிய ஸ்ரீசதாசிவமூர்த்தியினது பாதாரவிந்தத்தைப்பூசித்து அந்தஎமதர்மராசனுடைய ஆக்ஞையைத் தவிர்த்துக்கொள்ளுவேன் நீங்கள்யாதொன்றுக்குங் கவலைப்பட வேண்டாம் தாய்தந்தையர்களே.

தாய்தந்தையர்-புலம்பல்.

தரு இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

கண்ணிகள்.

ஐயையோபாலா அருமையாய்வளர்த்தெடுத்தேன்சேலா
கையில்பாசங்கொண் டெமன்விரட்ட
கலங்கியழக்கண் டிருப்பேனோடா
கட்டிக்கனியேகாண்பேனோ திருமுகத்தையினியே
எட்டியுனையெமன் பிடித்தால்இருக்கேனினியே
மட்டிலாத்தவஞ்செய்துபெற்றமகனே அடடாசுதனே
பொன்னுனையுன்முகத்தைப்பாரா புவியிலிருக்கவோஐயையோபோரா
முன்னால்தவமிருந்து பெற்றோமே
முழுமோசமாகுதே அப்பாபொய்
அப்பாதுரையே அர்த்தமுள்ளயென்கல்விநிறையே
செப்பாமறையேசெல்வமே என்னசொல்வேன்குறையே
இப்புவியோர்களெந்தனைப்பழித்து இருந்துதவசுயின்றநிழந்து
ஒருமொழியாகிலும் வாய்திறந்துசொல்லே
உனக்குமுன்னேயென் னுயிர்போகச்செல்லே
வருவானேகாலனிதோ நிலையோவாடுதேஎன்மனமும்அலையே
அலையில்துரும்பாய் அலைந்தலைந்தோடித்துரும்பாய்
நிலையிலாயிருப்பாய் உளம்கொதித்தாலைக்கரும்பாய்
தலைவிதியினாலுன்னைப்பிரிந்து தாளுவோமெந்தன்சடலமிருந்து



மருத்வதிசொல்-விருத்தம்.

அப்பனேமகனேநாங்கள் அருந்தவமிகவிருந்து
செப்பமாய்ப்பயின்றெடுத்த சிவனுடஅருளினாலே
மெய்ப்புளகாலன்வந்து விரைவுடன்பிடிக்கவந்தால்
எப்படிசகிப்பேனென்று ஏங்கியேபுலம்புவாளே.

தரு-இ-ம்-ஆகிரி-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

கையிலைவாழும்ஈசன்கருணையால் காலமு தந்தவரம் மாச்சுதடா
மயிலாளுந்தனைபெற்றுஇருபேர்க் களிழ்ந்துகா குதவியென்று மிருந்தோமடா
புத்திரமுகந்தன்னை துணிவுகொண் டேந்தலிதமறந்து டிருப்போமடா
அந்தகனுபாவி அருமையாய் கையிற்கொடுப்பதற்கு வளர்த்தோமடா
ஆசையுடனே நாங்கள் அருகி லேசமறவாமற்கூடி யிருப்போமடா
பாசக்கயிறுகொண்டு பயந்துநீ வீசியிழுக்கக்காலன் யழுவாயடா
வையகந்தனிலே மகிழ்ச்சியாய்ப் பெத்தத்தவமிருந்து பெற்றோமடா
கையிற்கிளிவளர்த்து கதையைப்போ லூணூட்டிக்கொடுத்த லாச்சுதடா
என்னாளுமிருப்பாயென்று எண்ணியே இருபேருமகிழ்ச்சியாய் யிருந்தோமடா
கண்ணிலெமனைக்கண்டு கண்பார்த்து கலங்கியழும்போதெங்கள் களிப்போமடா

மார்க்கண்டன்சொல்-வசனம்.

அகோவாரும் சரணமம்மாதாயே இந்தஅண்டபிண்டசராசரங்களுக்கெல்லாம் ஆதிபராபரவஸ்துவாயிருக்கிற செகதீசனுடைய பாதாரவிந்தங்களைப்பூசைசெய்து எனக்குவரப்பட்ட துன்பங்களையெல்லாம்தீர்த்துக்கொள்ளுவேன் நீங்கள்யாதொன்றுக்கும் சஞ்சலப்படவேண்டாமம்மா தாயே.

மருத்வதிசொல்-விருத்தம்.

மலடியாயனேகநாளாய் வருந்தினேன்-அரனை நோக்கி
பலபலதவமியற்றிப் பரமனாருளினாலே
நலமதாயுன்னைப்பெற்று நமனுக்கொப்பித்துயாளும்
உலகத்திலுன்னைப்பிரிந்து உயிருடனுய்குவேனோ.

தரு-இ-ம்-சங்கராபரணம்-திரிபுடை-தாளம்.

பல்லவி.

ஐயனேயென்மகனே-எந்த-ஞானசுகிசைந்தகண்ணே.

அநுபல்லவி.

கையிற்கிளியை வளர்த்துப்பூனைக்கிரை
காட்டிக்கொடுத்த கதைபோலாச்சுதே (ஐய)

சரணங்கள்.

பாலகாவுன்முகத்தையிருவரும் பார்த்துமகிழாமல்-என்ன
காலங்கள்வந்ததடா-எந்தன் கண்மணியென்னசெய்வேன்
சாலவேநொந்துனைப் பெற்றெடுத்தவயிறு
தணலாயுருகி தியங்குதேயென்னுளம் (ஐய)

கட்டித்திரவியமே-உள்ளங் கருதியபாக்கியமே
விட்டுப்பிரிந்தினிமேல்-இந்த மேதினியோருமவென்
மட்டுப்படாத கவலைக்குடன்பட்ட
மைந்தனேமாவிலங் தன்னில்பிறந்தேனே (ஐய)

ஈசனன்றுனக்குத்தந்தவயதா வீணாட்டமோச்சுதடா
பேசுமெருமைக்கிடா தனிலேறிஎமனிப்போ
பாசக்கயிற்றினால் வீசியிழுப்பானே
பாலகனேயுந்தக் கோலத்தைப்பார்ப்போமோ (ஐய)

மார்க்கண்டன்சொல்-விருத்தம்.

தவமிகச்செய்துபெற்ற தாய்தந்தையாரேகேளீர்
பவமொழித்தருளுமாதி பரமனார்பாதம்போற்றி
சிவஸ்தலமெங்குஞ்சென்று தெரிசனஞ்செய்துவாறேன்
குவலயத்தோர்கள்மெய்க்கக் குணமுடனனுப்புவீரே.

---

தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

இந்தவினைக்கென்னசெய்வோம் உனைப்பிரிந்
தெவ்விதமாய் மனமுய்வோம்



அநுபல்லவி.

நந்தீர்வாமுடி வாச்சே-உனையழைக்க
தருமுன்தூதவர்வர லாச்சே
அந்தகாளிஸ்யாஞ்செய்த அருந்தவமல்மானால்
அரும்வயதென்றும்பதினாறாய் நீயுங்கொண்டதோ (இந்த)

சரணங்கள்.

மாதவஞ்செயலறி வாயோ-எமையன்றி
மகிழ்ந்துவனத்துக்கேகு வாயோ
காதவழிநடப் பாயோ-பாதம்நோக
கன்மேல்வழியிலேறு வாயே
ஆகவனுக்குமரி தாமோயிந்தக்கருமம்
ஆகத்துணிந்துவினை வாகமொழிந்தெழுந்தாய் (இந்த)

ஈசியுகம்பிறந்திட லாச்சே-தவத்தோர்கள்
காட்சிபெறவேகன வாச்சே
பேயுந்தேவர்கள் கைக்கொள்வாரோ-உனைச்சிறு
பாலனென்றிகழ்ந்து விள்ளாரோ
சலியமனத்திற்கு கன்னேமேவிடுங்கண்டாய்
ஜகதீசனிருபையென்ற சாபல்யமிகக்கொண்டாய் (இந்த)

எங்காளுந்தவமிக ளாச்சே-எங்களெந்த
இமையோரெவருமிகழ லாச்சே
சொன்னாலுங்கேட்காயோ மகனேமனப்பேய்தான்
சுவர்தினமாதிரு முங்னே
உன்றலெங்கள்திவினை யொழியுமென்றிருந்தோமே
ஊழ்வினைப்பயன் தோழியுருக்கொண்டுதே (இந்த)

---

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

தந்தையுந்தாயுமிந்தத் தகமையாயுரைக்கக்கேட்டு
எந்தையேயெமக்குமுன் னீசரன்கிருபையுண்டென்று
சிந்தையின்மிகத்தெளிந்து செழுந்தவவடிவனாகி
விந்தையாய்மார்க்கண்டேயர் வினாவினில்நடந்திட்டாரே.

தரு-இ-ம்-சௌராஷ்டிகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

நாரணனும்நான்முகனும் கடுமலர்ப்பாதம்தேடி
காரணமார்க்கண்டேயரும் தருகிட்டங்கினரே

எத்திசையுள்ளோர் பணியும் ஈசன்றன் பாதம்தேடி
பத்தியாகப்பூசைசெய்ய பாலகன்நடந்தனரே

ஆலமுண்டகண்டருரைத்த யாயிரத்தெட்டுஸ்தலமும்
சீலமுடனேசேவிக்க செல்வரும்நடந்தனரே

மருத்துவதிபெற்றெடுத்த மைந்தனுமார்க்கண்டேயர்
கருத்துடன்சிவனைப்போற்றிக் கருணைபெறநடந்தனரே

அந்தநாட்சிவனளித்த தானவயதுபதினாறும்
எந்தநாளுமெனக்கேயென்று எழிலுடநடந்தனரோ

காமனையெரித்தகண்ணன் கழலிணைதொழுதுபொல்லா
ஏமனைவீழ்த்துவேனென்று இயல்புடனடந்தனரோ

புவனத்தில்பூதநாதன்பொற்கழல் பணிவோர்க்கெல்லாம்
தவனலமுண்டென்றந்தகன் தன்னையேசிக்ஷித்தனரோ

சொற்பனத்திலும்சிவன்றன் சோதியைநினைந்தோர்க்கெல்லாம்
கொப்பவாதைதீருமென் இலேசமாற்றிநடந்தனரோ

---

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

பருவத்திலெழுந்துவந்து பரமனைத்துதிக்குமந்திரம்
இருபத்துநான்குஞ்சொல்லி எழிற்றவமியற்றும்போது
உருவத்திற்சிறந்தோராகி வுசிதயாழ்கையிலேந்தி
கெருவத்தின்மிகுதியுற்று கெடிகொள்நாரதர்வந்தாரே.

தரு-இ-ம்-ஆரபி-அடதாளம்.

பல்லவி.

நாதர்வந்தாரே-மகாமுனி-நாரதர்வந்தாரே.

அநுபல்லவி.

பாரினில்மிருகண்டர் காரிபாலனைத்தேடி
பண்ணியதவத்தினால் வந்தபாலனைநாடி (நாரத)

சரணங்கள்.

செஞ்சடைமுடியுடன் சிறந்தபஞ்சாட்சரத்தின்
செபமாலைகையி லிலங்க
பஞ்சமுகருத்திராட்ச மாலைபுலித்தோலுடன்
பரிவாய்வந்துவினோதம் பாவும்கலகஞ்செய்ய (நார)

அயன்வருவாரிநவருக் கருள்மிகத்தரென்று
அசக்கித தகக்கிக்கொண்டு



நயனமூன்றுடையோனை நாடித்துதித்துக்கொண்டு
சுற்றவரெவரையும் நகைகுகொடுத்துக்கொண்டு (நாரத)

புவியில்மார்க்கண்டரைப்போல்புனிதரெவருண்டென்று
புந்திமகிழ்ச்சி கொண்டு
செவியில்கேட்பதெவையும் சிந்தையில்வைப்பேனென்று
சிறந்ததவமியற்றும் செல்வமார்க்கண்டேயர்முன் (நாரத)

மார்க்கண்டன்சொல்-விருத்தம்.

வந்தநாரதனையையன் மகிழ்ந்தடிவணங்கிப்போற்றி
தந்தைதாய்நீரேவேறு தன்னினமில்லைகண்டீர்
எந்தனைப்பெருட்டாயெண்ணி இதயத்துக்களித்துவந்தீர்
சிந்தனைதவிழ்த்துசண்டன் செயலொழிவகைசொல்வீரே.

வசனம்,

அகோசரணஞ்சரணமையா நாரதமகாமுனிஸ்வரரே தேவரீர்தெய்வலோகத்தில் வாசம்பண்ணப்பட்டவர் அடியேனை ஒருபொருட்டாயெண்ணிஇவ்விடத்திலீர் எனக்கு உம்மைப்பார்க்கிலும் வேறேயாதொருஆதரவுமில்லை ஆனபடியால் எனக்குத் தாய்தந்தையர்இஷ்டர் மித்திரர்எல்லாரும்நீரே என்னைத்தேடிவரப்பட்ட எமனைச்செயித்து அவனுடைய ஆக்கினைக்கு உட்படாமலிருக்கும் படியானவகையை அருளிச்செய்யவேணுமையாசுவாமி.

நாரதர்-மார்க்கண்டருக்குச்சொல்-விருத்தம்.

மாதவமிருகண்டேயர் மைந்தனேகேளாயிப்போ
வேதனைமனதில்நாடி விரும்பியேதவம்புரிந்தால்
போதவேசிவபூசைக்குப் பொருள்வகையுள்ளதெல்லாம்
ஆதரவாயுரைப்பாம் அந்தகன்றனைவெல்வாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மார்க்கண்டா நீபிர்மதேவனை தியானித்துதவஞ்செய்வாயாகில் அவர் ஈஸ்வரர் அருள்தேடும்படியான வகையைஉபதேசிப்பார் அந்தஉபதேசத்தினாலே ஸ்ரீசாம்பசிவனுடையபாதபூசைபண்ணி அந்த பூசையினது மகிமையினாலே எமனைக்கூடவெல்லும்படியான சக்தியையடைவாய் ஆகையினாலே பிர்மாவைத்தியானித்துத்தவஞ்செய்யும்பிள்ளாய் மார்க்கண்டா நான்என்னுடைய ஆச்சிரமத்திற்குப்போய்வருகிறேன்பிள்ளாய்.

மார்க்கண்டன்-வசனம்-அப்படியேமகாபாக்கியமையாசுவாமி.



உபதேசப்பிர்மா.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

நாரதரிதுவிளங்கி நான்முகன்முன்புசென்று
ஆரணவும்மைநோக்கி யருந்தவமார்க்கண்டேயன்
பூரணத்தவமுயற்றல் புகன்றிடவரிதாமென்னளி
காரணமேதோவென்று கஞ்சனும்வருகின்றாரே.



(வசனம்) இந்தப்பிரகாரமாய் மார்க்கண்டேயருக்குச்சொல்லியநா ரதமகாமுனியானவர் பிரமலோகத்துக்குப்போய் ஓய் லோகநாயகா உம்மைக்குறித்து தபோதனராகிய மார்க்கண்டேயர்செய்யப்பட் டவத்தைச்சொல்லவேணுமானல் மிகவும் அரிதாகுமென்னைக்கேட் ட பிர்மதேவரானவர் சரஸ்வதிசமேதராய் அன்னவாகனரூடராய் வ ருகிறவிதங்காண்க.

பிரமதேவர்வருகிற-தரு-இ-ம் அடாணா ஆதிதாளம்.

பல்லவி.

சதுர்முகப்பிரம்மதேவர்வந்தார்-அன்னத்திலேறி (ச)

அநுபல்லவி.

மதுரமொழியாள்வேண்டா மறையகளுடனெழுந்து
மகிழ்ந்துநவமியற்றும் மார்க்கண்டனைப்புகழ்ந்து (சது)

சரணங்கள்

சென்னியில்மகுடந் துலங்க காதினிலணிந்த
சிறந்தகுண்டலங்க ளிலங்க மார்பில்நிறைந்து
மின்னியமுன்னூலும் விளங்க மணிபதக்க
மேவியமார்பினி லிலங்க தவத்தினர்முன்
தன்னிகரில்லாவேத நாலுமிகமுழங்க
தக்கிடகிடதக தரிகடதொங்கிட
தாகிடகிடதக ததிங்கணந்தோமென (சது)

தேவர்முனிவர்கள் கூட சித்தர்கள்கொண்டாட
தெரிவையரம்பை நடமாட மிகமகிழ்ந்து
பாவலர்குழாங் கொண்டாட பணிந்துபோற்றி
பரிவுளவூர்வசி பாட நாரதர்முதல்
தாவிவருதல்கண்டு தவத்தோரெல்லாந் திகைக்க
தரிகிடசெணுதக தரிகுசெணுதக
தந்திமிகிட தக ததிங்கணத்தோமென (சது)

விதியெவ்வுயிர்கட்கும்விதிப்போன் அந்தமுடனே
விளங்கவேயாவையு மதிப்போன் அனுதினமும்
கதியென்றருந்தவர் துதிப்போன் எவைக்குமூல
காரணமென்றுவந் துதிப்போன் இடர்விலகும்
கதியிரனெழுமார்க்கண்டன் றனக்குபதேசிக்கருள
தந்திடதிந்திமி திமிகிடதரிகிட
தரிகுசெணுதகசெணு ததிங்கணத்தோமென (சது)

மார்க்கண்டேயர் பிரமதேவனைத் துதித்தல்.

தேவாரம்.

எண்டிசைபடைத்தாய்போற்றி எங்கனுநிறைந்தாய்போற்றி
கண்டனைபுரிவாய்போற்றி கஞ்சனேபோற்றிபோற்றி
உண்டியிலுதித்தாய்போற்றி ஒளிமலர்மிசையாய்போற்றி
பண்டிதர்நாவுள்வாழும் பாரதிகேள்வாபோற்றி

(வசனம்) சரணஞ்சரணமையா சுவாமிவேதநாதனேபோற்றி அஷ்டதிக்கையும் அண்டபிண்டாதி சர்வமும் படைத்தவரேபோற்றி எங்கனுநிறைந்த சர்வேந்திரியாமியேபோற்றி சகலபாப புண்ணியங்களையும் நிர்ணயிக்கப்பட்ட கடவுளேபோற்றி ஸ்ரீஅரியின் உந்திக்கமலத்திலுதித்தவரேபோற்றி வித்தியாபாரங்கதாளான பண்டிதர்நாவினில் வாழ்கின்றசரஸ்வதியினது மணவாளனேபோற்றி.

பிரமதேவர் மார்க்கண்டேயருக்குச்சொல் - விருத்தம்.

தோத்திரஞ்செய்மார்க்கண்டா தொல்லுலகுள்ளமட்டும்
சாத்திரமாற்றவல்லாய் கருத்துடனுனக்குச்சொல்வாய்
ஆத்திக்கீழ்வீற்றிருக்கும் அரனடிபூசைசெய்வோர்
சுத்தமாற்றனக்கஞ்சார்கள் குவலயம்புகழுந்தானே

(வசனம்) அகோவாரும்பிள்ளாய் தபோதனனுன மார்க்கண்ட முனீஸ்வரனே துதிசெய்யப்பட்டவனே ஆகாசம்பூமியுள்ளமட்டுக்கும் மறுபிறவியில்லாதவனுய் நானுபதேசிப்பதை கருத்துடனேகேளும் ஆத்திமரத்தினடியிலே வீற்றிருக்கப்பட்ட பரமசிவனை உள்ளும்புறம்பும் ஒன்றாய்ப்பூசிப்போர் எமனுக்கு ஒருகாலமும் அஞ்சமாட்டார்கள் இப்படிப்பூசிப்பவர்களை பூலோகத்திலுள்ள புண்ணியபுருஷாளும் கொண்டாடுவார்கள் ஆகையினுலே சிவபக்தியன்றும் பிள்ளாய் மார்க்கண்டா.

மார்க்கண்டேயர்சொல் - விருத்தம்.

மனமகிழ்ந்தெனக்குரைத்த மாமறையுருவேசெலீர்
இனமதாமீசன்பூசை இப்படியனக்கருமையெல்லாம்
கனமதாயுபதேசித்தால் கண்டுணர்ந்துகொள்வேன்
புனமதிலெனையாட்கொண்ட போதனேபோற்றிபோற்றி



(வசனம்) அகோவாருங்களையா வேதப்பொருளின் உருவானவரே அந்தசாம்பசிவமூர்த்தியினுடைய பாதாரவிந்தத்தைநியானித்துப்பூசைபண்ணும்படியான பூஜாவிதானங்களை அடியேனுக் கன்புகூர்ந்து உபதேசித்தருளினுலந்தவிதிப்படி பூசித்து பரமசிவனது அருள்பெற்றுய்வேன் இத்தவனத்திலே என்னையொரு பொருட்டாயெண்ணி ஆட்கொண்டபோதனேபோற்றிபோற்றி.

பிரமதேவர்சொல் - ஜெபத்தியம்.

பஞ்சாட்சரந்தனைப்பற்றியாய்ச்செபிப்பவர்
பரமேஸ்வரனுருவெனப்படுவராகும்
பஞ்சாட்சரஞ்சொல்வோர்பயங்கடலொழிந்திடும்
பலகல்கற்பநாள்பவிதமேது
பஞ்சாட்சரஞ்சொல்லிப்பதினாலுலோகமும்
படைத்திட்டேன்பாலனேயறிவதாக
பஞ்சாட்சரமுறைக்கும்பத்தர் முன்னெக்காலும்
பாதகந்தன்வரிற்பயப்படார்கள்
சிற்றுவழிகளினுள்ளநினைதெரிடாமல்
ஓதுவாய்பஞ்சாட்சரந்தனையொப்பதாக
நேசனேயுனக்கென்றுபதேசமிதுவே
இரவுபகலினுமொழிந்திடுயெமன்வாரானே
இதுதெலுங்குகடைப்பிடியமானதால் தொடையும்சமேயையும்
அந்தசரணத்துக்கு சரணம்வேறுபாடாதலாம்

(வசனம்) அகோகேளும்பிள்ளாய் மார்க்கண்டா இனிமேல் பிறவியில்லாமல் எந்நாளும் சாசுவதமாயிருப்பவர்கள் பரமசிவனது பஞ்சாட்சரஞ்செபந்தப்பாமல் செய்துவந்தால் அவர்கள் பாபகன்மங்களினின்றும் விலக்கப்பட்டு சங்கரனுடைய பாதநெறிசேர்வார்கள் அவர்களிடத்திலே எந்தகாலம்வந்தாலும் அவனுடைய ஆண்மைபலிக்காது ஆனபடியினுலே எமனையும்வெல்லப்பட்ட மந்திரமானபஞ்சாக்ஷரத்தை உபதேசித்தோம் இந்தமந்திரத்தைஇரவும்பகலுமாக உனக்குள்ளே உன்னுடையமனதைவேறோரிடத்திற்செலுத்தி சிற்றின்பத்தில் அழியாமல் ஏகாக்கிரசித்தருய் எந்தசெய்கைக்கும் உறுதியேகாரணமாய் தயானதிலுமே ஒரேநிலையாய் செபிப்பாயானுல் எமனும்வரப்பயப்படுவான் அப்படி துணிந்துவந்தாலும் அர்த்தமாபதியானவர் அவனை ஒரேஉதையிலே வீழ்த்திடுவார் நீமறவாமல் பஞ்சாக்ஷரத்தை செபியும்பிள்ளாய்.

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்.

போதித்தவிசாகலையப்பொருள்தனையுணர்ந்தேனந்த
சோதியானடிவணங்கிச்சொரூபத்தின்மகிமையாய்ந்து
ஆதிசேஷ்அயனேயிந்த அகிலமும்படைத்தகோவே
பூதியின்மகிமைதன்னைப் பொற்புறப்புகலுவீரே

(வசனம்) அகோவாரும்சுவாமி சகலமும்படைத்த என்னையனே மிகவும் அதிகாகசியுமாயிருக்கப்பட்ட பஞ்சாட்சரத்தையு முபதேசித்தீர் அந்தருட்சமத்தை அறிந்துகொண்டேன் அந்தசோதியினுடையமகிமையை ஆய்ந்துணர்ந்துரைத்தபடி நிர்மலமாயிருக்கிற விபூதியினது மகத்துவத்தை சொல்லியருளவேணும் சரணஞ்சரணமையாசுவாமிபிரமதேவனே.

பிரமதேவர்சொல் வசனம்.

ஆனால் சொல்லுகிறேன் கேளும் பிள்ளாய் மார்க்கண்டா.

சரு-இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

கண்ணிகள்.

பூதியின்மகிமையைத் புகலக்கேட்பாய்தவத்தோனே இந்த
புனிதமானபூர்வஞானமுண்டாம் புண்யவானே
நீதியாயெவர்களும் தெற்றியிலேதரிப்பாரே-நேம
நிட்டைக்குமாதவநெறிக்குந்தான்பிரோலாயக்கொள்வாரே.
மனோபாகமங்கட்குக் குற்றமில்லாதிருநீறு-துப்ப
மடிக்கலையாலே வடிந்துக்கொள்வார்திருநீறு
இராகமூன்றுவிரற்றொன்றும் இருநாணந்தேறும்-சாத்த
சிவதீர்த்தமாடிய புலன்வருமேயேர்ப்பாரும்
வட்டம்போல்சூலம்போல் பொட்டிடுதுமாகாது-நல்ல
வாசனைநீருடன் கூட்டிடவுமாகாது
சட்டமாய்நெற்றியிலில்லாம உண்ணலாகாது-இதை
சார்ந்திடும்போர்பெறும் நேத்திரமைச்சொல்லநோகாது
நீருடனேதிருமண்கூட்டித் தரிக்கின்றவேணை நித்தம்
நிந்தனைசொல்லியித் நெறியைத்தவிக்குமந்தோனை



நாருடனேநரகத்தில் நன்னுவாரெமதூதர்-நான்
சொன்னதுசிவனிட சத்தியமென்றார்கனநாதர்

பிரமதேவர்சொல்-விருத்தம்.

அதிவித்தைதிருநீற்றின்பெருமைதன்னை
அன்றறிபுங்காலெனன்னுவடிவையும்பேணி
சீற்றியுடனேநீராடித்திருவெண்ணீறை
நெத்தியினிற்றரித்துவேதநெறமுளை
குறியுடனேசுந்தரவேர்விதங்கள்கொண்டு
கொண்டாடிப்போற்றியடிபூசைப்போர்கள்
பொறிபுதனைப்பெற்றருள் மேலான்பூதநாதன்
பொற்கழலையணுகினமும்போற்றுவாயே

(வசனம் அகோவாரும்பிள்ளாய் மார்க்கண்டா இப்போது பெருமைபொருந்திய மகாவிபூதியானதும் காண்பதற்கரிதாகிய திருவடி மைத்தோதத்தரித்து நல்லசிலரும் தீர்த்தமாடிய திருவெண்ணீறணிந்து நிஷ்டாபாரும் பகியாய் மலர்ந்தபட்பத்ரங்களை பறித்துக்கொண்டுவந்து சிவபூசைசெய்வோர்களுடைய பொல்லாங்கானசகலமெழுத்தையும் அழித்து அருள்தருவார் ஆனபடியினாலே சகலவாப் பயமான விபூதியின் மகிமையைச்சொல்ல ஆதிபராப்பிரமாவலதவுக்கும் அரிதாகும் பிள்ளாய் மார்க்கண்டா.

மார்க்கண்டன்சொல்- விருத்தம்.

கருத்திலுள்ளதறிந்துரைத்தீர்மிகத்
திருத்தியென்மனத்திலைகயகற்றினீர்
வருத்தினேனையனேயிப்பிழைபொறுத்
துருத்திராட்சமகிமையையோதுவீர்

(வசனம், அகோவாரும் தயாபரனே பிரமதேவரேயென்னுள்ளத்தில் நினைத்ததெல்லாமறிந்துசொல்லினீருடையதிவ்யபொருந்திய மனதைத்திருத்தி நான்பதங்களிர்த்தீர் அடியவனாகேயிருந்தபிரயாசையைப்பட்ட என்னையனே மகத்வமிருந்த உருத்திராட்சத்தின் பெருமையைச்சொல்லியருளவேணுமையா சுவாமி

திரு-இம்-பந்துவராளி-அடதாளம்.

பல்லவி.

பெருமையிதுவாமே ருத்திராட்சத்தின் (பெருமை)

அநுபல்லவி.

பெருமைசொன்னாலுந்தன் பிறவித்துன்பம்நீங்கும்
அருமையாயுரைத்தேனிவ் வவனியிற்புகழோங்கும் (பெரு)

சரணங்கள்.

வதனமும்வதனமும் சேரவொட்டாமலே
வாய்த்தாளமொன்று வரிசையாய்க்கோர்ப்பது (பெரு)

வேண்டிடும்போதிலும் பண்டிடும்போதிலும்
ஆண்டவர்க்குரியபஞ் சாட்சரஞ்செபித்திடும் (பெரு)

மாண்டிடுமுன்னமே மாலையப்பத்து நாறு
பூண்டவர்புண்ணிய மென்னாற்புகலப்போமோ (பெரு)

போதகஞ்செய்யும்போதும் பூசைகள்செய்யும்போதும்
மாதவஞ்செய்யும்போதும் மணியைப்பணுமவர்கள் (பெரு)

---

பிரமதேவர்சொல்-வசனம்

அகோவாரும்பிள்ளாய் மார்க்கண்டா உருத்திராட்சத்தின் மகிமையைஎம்மால்சொல்லுதுமெத்தவரிதாகும்ஆகிலும்எவர்களேனும் விபூதிஉருத்திராட்சதாரணம்பண்ணிக்கொள்ளுகிறவர்கள் அந்த பரமசிவனுடையபாதாரவிந்தத்துக்கடிமையாவார்கள் எமனும் வந்தானுமானாலும் அப்படிவந்தபோதிலும்அவனை அந்ததிரிநேத்திரரேஉருவியில்விழுத்தி அடியாருக்கருள்செய்வார்மார்க்கண்டனே

மார்க்கண்டேயர்சொல் வசனம்

அப்படியேபத்திபண்ணிவருகிறேன்கோலநாயகரே என்பேரில்கிருபைசெய்துசிவபூசையின்மகிமையைசொல்லவேணுமையா சுவாமி-

பிரமதேவர்சொல்-வசனம்

அப்படியேசொல்லுகிறேன்கேளும்பிள்ளாய்

சிசப்தியம்

பத்தியாய்ச்சிவபூசையார்தவிர்செய்பவர்
முத்தியினெறிதனில்முதல்வராவர்



அத்தனாருள்பெற்ற அருந்தபாலரேனும்
பூசித்துப்போற்றிடுவோர் புனிதராவார்
குலதான்றனைந்துதித் திணையடிபோற்றும்
சிலரைச்சிவனெனச்செப்பலாகும்
லச்சிதானந்தனைச் சாரணடைந்திடுவோர்
உச்சிதராவரெவ் வுலகிலேனும்
நெஞ்சகத்திடைவஞ்சகம் நினைந்திடாமல்
பூதநாதனைப்பூசிக்கவும் புகழ்ச்சியோங்கும்
அத்தசனும்வரலரி தாடியிற்பூசை
மகுத்வமிதுவாகு மார்க்கண்டமெளனிவாய்

(✲)✻(✲)

பிரமதேவர்சொல்-வசனம்.

அகோகேளும்பிள்ளாய் மார்க்கண்டா மகாபக்தி பூர்வகமாய்உமாமகேஸ்வரர்களை பூசைபண்ணினவர்கள் மோட்சசாம்ராச்சியம் அடையப்பட்ட புனிதர்களில் முதன்மையான்பதவி யடைவார்கள் திரிநேத்திரனுடைய பக்திசெய்யாத தவத்தோர்களானவர்கள் ஒருகாலாந்திரத்தில் சிவனைதியானித்துப் பூசித்தாலும் மகாசிரேஷ்டராவார்கள் சூலாயுதத்தைத் தரித்திருக்கப்பட்ட மதவயிரிக்கு அடியவர்களானவர்களை சாட்சாத்சிவரூபியென்றே எண்ணலாகும் திரிமூர்த்தி சிவரூபியாயிருக்கிற அந்தசங்கரருடைய அடிவணங்குவோர் எந்த உலகத்திலிருந்தபோதிலும் எவர்களுக்கும் மேலாவார்கள் உள்ளத்தில் கல்மிஷமில்லாமல் அந்தகபாலமூர்த்தியைப் பூசிக்காமல் மிகவும்புகழ்ச்சிபெறுவார்கள் எமன்வருவதுமைத்த மெத்தவரிதாகும் ஈஸ்வரனடியைப்பூசைசெய்பவர்களுடையமகுத்துவமிப்படி உபதேசித்தமுறைமையை தப்பாமல் அந்தபரமேஸ்வரனைப் பூசித்து வருவாயானால் சந்திர சூரியாள் தெற்குவடக்கானபோதிலும் பூமி ஒன்றானாலும் நட்சத்திரங்களுதிர்ந்தாலும் பெரிதல்ல நீ என்றுஞ்சிரஞ்சீவியாய்பதினாறுவயது பாலகுமாரனாகத்தானேயிருந்து தடசியாகவாழ்வாய் ஓய்மார்க்கண்டமகாமுனிவனே நான் என்னுடைய யதாஸ்தானமான பிரமலோகத்திற்குப்போய் வருகிறேன் முனிசிரேஷ்டரே.

✻

மார்க்கண்டேயர் வசனம்.

ஆனால் தேவரீர் இடத்திற்குவந்தது வெகுபொழுதாச்சுது அடியேனுக்காகரொம்பவும் பிரயாசைப்பட்டீர்கள் போய்வாருங்கள் சரணஞ் சரணமையா சுவாமி.

விருத்தம்.

ஓம்நமசிவாயமென்றிங் குதித்தநாற்கருணைவாழ்வே
வானவர்முதலாய்ப்போற்றும் மந்திரகுருவாமெங்கும்
தானதாயுபிராப்பிவ சாட்சியாய்க்கண்டமான
ஆனைமுகவனேனும் ஆதியேபோற்றிபோற்றி.





தரு-இ-ம்-பியாகு-அடதாளம்.

கண்ணிகள்-

மூலமதனில்யெழுந்தவாசியே — கணபதியேசரணம்
முற்றிலும்ளவர்கார்க்கும்முதல்வனே

வேலவன்றனக்குதவிசெய்தவா — தினைப்புனத்தில்வள்ளியை
விரும்புங்காலேயில்விளங்குங்கரிமுகனே

கோவிலைச்சுற்றிகுமரன்வருமுன்னே — கணபதியேசரணம்
கொன்றைசூடிகைக்கனியைக்கொண்டவா

சாலவுமுன்னைச்சரணஞ்செய்கிறேன் — கணபதியேசரணம்
சண்டனவராவகைதொண்டர்க்கருளுவாய்

ஆதிமூலமானவிநாயகனே — ஓம்கணபதி
ஐங்கரவுன்னைப்பூசைசெய்கிறேன்

சோதிமுதலோர்போற்றும்பாதனே — ஓம்கணபதி
சுமுகனேயுனைப்பூசைசெய்கிறேன்

சம்பரத்தைபுஷ்பங்கொய்துவந்துநான் — ஓம்கணபதி
சரணடைந்துனைப்பூசைசெய்கிறேன்

அம்பையருகுவில்வமறைமலரால் — ஓம்கணபதி
அதின்உன்பாதத்தில்பூசைசெய்கிறேன்

முக்கணர்தவத்துதித்தமைந்தனே — ஓம்கணபதி
முல்லைமலர்கொய்துபூசைசெய்கிறேன்

எக்கடவுட்குமிபூறவனுகியே — ஓம்கணபதி
எழுந்தருளியவிக்னராசனே

செல்விஇலங்கைஆததிருமடியே — ஓம்கணபதி
சிறந்தவாவுனைப்பூசைசெய்கிறேன்

அல்லிமலர்கொண்டுபூசைசெய்கிறேன் — ஓம்கணபதி
ஆனைமுகத்துடனமர்ந்ததேவனே

மெல்லியல்லலம்பாகத்தமர்ந்தவா — ஓம்கணபதி
மேலவர்போற்றும்விக்னவிநாயகனே

மல்லிகைமொக்கும்தாமரைமலர்கொண்டு — ஓம்கணபதி
மலரடிதனிற்பூசைசெய்கிறேன்

| | |
|---|---|
| சுமுகாயநம | தூமகேதுவேநம |
| ஏகதந்தாயநம | கணாத்யக்ஷாயநம |
| கபிலாயநம | பாலசந்திராயநம |
| கஜகர்ணிகாயநம | கஜாநநாயநம |
| லம்போதராயநம | வக்ரதுண்டாயநம |
| விகடாயநம | சூர்ப்பகர்ணாயநம |
| விக்நராசாயநம | ஏரம்பாயநம |
| கணாதிபாயநம | ஸ்கந்தபூர்வஜாயநம |

நாநாவிதமந்த்ரபுஷ்பாணிசமர்ப்பயாமி.

சுலோகம்.

அம்பிகாஇருதயானந்தம் மாத்ருப்பிரிவேஷ்டிதம்
பக்தப்பிரியமதோம் வந்தேதகஞ்சணாயகம்.

தேவாரம்.

எங்கணுநிறைந்தாய்போற்றி இமையவர்முதல்வாபோற்றி
பங்கயன்பூசைசெய்த பனிமலர்பாதாபோற்றி
பொங்கரவினைமுன் னூலாய் புனைந்தனன் மார்பாபோற்றி
ஐங்கரயென்முன்வமன் அணுகொணதருள்வாய்போற்றி.

கட்டியக்காரன்சொல்- விருத்தம்.

கதிரவனுதிக்குமுன்னே கடிதியேகங்கைக்கேகி
விதிமுறைதீர்த்தமாடி விளங்குவெண்ணீறணிந்து
மதியுள்மார்க்கண்டேயர் மலர்கள்கொய்தளையகிழ்ந்து
நதியணிகாசிவிஸ்வ நாதனைப்பூசைசெய்வார்.

வசனம்.

அகோகேளும் புண்ணியவான்களே இந்தப்பிரகாரமாய் வில்வவனத்திலிருந்து ஸ்ரீமகாகணபதியினது பாதாரவிந்தத்தைப்பூசித்துஅங்கிருந்தெழுந்து சூரியோதயமாகுமுன்னே காசிக்ஷேத்திரத்துக்குவந்து கங்காதேவியைத்தெரிசனம்பண்ணி மானஸ்புட்பங்களாலே அர்ச்சித்து மணிகர்ணிகை தீர்த்தமுதலாக அறுபத்துநாலு தீர்த்தங்களிலும் விதிமுறை தவறாமல் தீர்த்தமாடி விபூதிருத்திராட்சமாபிகாபரணாலங்கிருதராய்தேஜோமாய் நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்தபின்பு அதிபக்திபூர்வகமான புத்திமதியுடனே அங்குள்ள புட்பவனங்களிற்சென்று பூசாரகமாயிருக்கிற வாசனைபொருந்திய மலர்களைக்கொய்து மார்க்கண்டமகாமுனிவரானவர் சந்திரனைச் சடாபாரத்திலே தரித்திருக்கின்ற ஸ்ரீகாசிவிசுவநாதர் கோயிலில்வந்து நமஸ்கரித்து பூசைசெய்கிற விதமெப்படியென்றால்.

தியான சுலோகம்.

விசுவேசமாதவம்டுண்டிந் தண்டபாணிச்சபைரவம்
வந்தேகாசிங்குகங்கங்காம் பவானிம்மணிகர்ணிகாம்





ஸ்ரீகாசிக்ஷேத்திரம்- விசுவநாதர்.

தரு-இ-ம்-ரூபகதாளம்.

கண்ணிகள்.

தேவர்முனிவர்சித்தர்போற்றிடும் | சிவகாசிவாழும்
தேவனேவிசுவநாதலிங்கமே |
மூவருமொருரூபமானவா | சிவசாம்பசிவா
முதல்வனேயுமைப்பூசைசெய்கிறேன் |
மாயன்பூசைபுரியும்பாதனே | விசாலாட்சியம்மன்
வாமபாகங்கொள்விஸ்வநாதனே |
சேயனாயுமைப்பூசைசெய்கிறேன் | கருணைபுரிந்து
ரட்சித்தருளவேணுமையனே |
கழுதைக்கன்றுமுத்திதந்திட | சிவசாம்பசிவா
கட்டுளவொவர்களையுமெழுந்தவா |
பழுதுறுதனைப்பூசைசெய்கிறேன் | சிவசாம்பசிவா
பதத்தில்வைத்தாளவேணுமே |
முப்பத்துமுக்கோடிதேவர்மகிழவே | சிவசாம்பசிவா
முழுமனதுடன்பூசைசெய்கிறேன் |
சொர்ப்பனத்திலுமுன்னைமறவாமலே | சிவசாம்பசிவா
சோதிபாதந்தந்தாளவேணுமே. |

சுலோகம்.

கங்காதரங் கமலிய்யபடாமகாரம்
கவுரிசிரந்தர விபூஷிதவாமபாகம்
நாராயணப்பிரிய மதங்கபதாககாரம்
வாரணசிபுரபதிம் பஜவிசுவநாதம்.

தேவாரம்-இ-ம்-பஞ்சுவராளி.

சீர்பூத்தசெழுங்கமலமலருதவுக்கையோடுதேனூர்கொன்றைத்
தார்பூத்தசெஞ்சடையுலவிக்குமதிமேல்விளங்குந்தனியனுகிக்
கார்பூத்தவிசும்பிற்கங்கைநதிசூழவாக்காசிவாழும்
ஏர்பூத்ததனிப்பிரான்பிணையடியின்மலர்தாவியேற்றுவேனே.

கொச்சகம்.

என்னையெமனிழுத்தே யேசாமற்பிராவி
தன்னையளிக்காமல் தாக்காத்துதவிசெய்வார்
புன்னைவிருட்சிகொன்றை தும்பைபுட்பமொடுகங்கைதன்னை
சென்னியில்வைத்தாளுமன்பர் தேசிகனேவிசுவலிங்கா.

திருச்சிற்றம்பலம்.





இராமேசுரம் - இராமலிங்கம்.

கட்டியக்காரன்சொல்- விருத்தம்.

கங்கையுமதியுஞ்சூடுங் காசிநாதனைப்பூசித்து
மங்களஞ்சேர்ப்ரயாகை மாதலத்திர்த்தங்கொண்டு
சங்கரலிங்கங்கோடி தன்னிலுந்தீர்த்தங்கொண்டு
பொங்கமாயிராமலிங்கர் பொன்னடிக்கன்பரானார்.

வசனம்.

அகோசேரும் புண்ணியவான்களே இந்தப்பிரகாரமாய் ஸ்ரீகாசிவிசுவநாதனைத் தெரிசனம்பண்ணிக்கொண்டு அங்கிருந்தெழுந்த மார்க்கண்டேயமகாரிஷியானவர் பிரயாகையென்னும் ஸ்தலத்துக்குப்போய் திருவேணி தீர்த்தங்களாடி பிரயாகேசுவரரைத் தோத்திரம்பண்ணிப் பூசித்துக்கொண்டு ராஜமகேந்திரமென்னும் நகருக்கருகேயிருக்கிற கோடிலிங்கட்சேத்திரம்வந்து கோதாவரியென்னும் நதியில் தீர்த்தமாடி அங்குள்ள கோடிதீர்த்தத்துடன் கங்காதீர்த்தத்தைக் கலந்தெடுத்துக்கொண்டு அவ்விடம்விட்டு இன்னம் அனேகபுண்ணியதீர்த்த சிவக்ஷேத்திரங்களை தெரிசித்துக்கொண்டு ஸ்ரீராமேஸ்வர க்ஷேத்திரம்வந்து தனுக்கோடிதீர்த்தத்தில் ஸ்னானம்பண்ணி ஸ்ரீராமலிங்கருடைய திருவாலயவலம்வந்து சேவித்துப்பூசிக்கிறவிதங்காண்க,

தரு-இ-ம்-உசேனி-அல்லது-ஆனந்தபைரவி-அடதாளம்.

கண்ணிகள்.

ஆழிநடுவிலமர்ந்ததேவனே — ஸ்ரீராமர்பூசித்து
ஐயனேசிவராமலிங்கமே
யாழிலேயமனென்னைத்தொடாமலே — சிவசாம்பசிவா
பார்த்திபாவுனைப்பூசைசெய்கிறேன்
பாவந்தீர்த்துக்கதிகொடுத்தவா — பார்வதத்திவி
பாதத்தமரும்ராமலிங்கமே
சூலவாயுனைப்பூசைசெய்கிறேன் — சிவசாம்பசிவா
அடியேனுக்கருள்புரியவேணுமே
ஜானகிராமன்போற்றும்பத்தனே — சிவசாம்பசிவா
ஜன்மசாபல்யமளிக்கவேணுமே
தீரைட்சகனுகிவந்தவா — சிவசாம்பசிவா
தெளிந்திலான்கவிதீர்க்கவேணுமே
அருநரகினிலாழ்ந்திடாமலே — சிவசாம்பசிவா
ஆண்டவாயென்னையாளவேணுமே
ஒருவனேயுமைப்பூசைசெய்கிறேன் — சிவசாம்பசிவா
உளமகிழ்ந்தடியேனைநீதருள்வையே.

தேவாரம்,

பாசமதறுக்கவல்லான் பாலனையடுத்ததக்கன்
வாசமிகுவன்பினனும் மதியினல்மால்செய்கோயில்
கேசமிக்கனவினனும் இனையபிரண்டரனும்
தேசமேதனாநிறைந்த திருராமேச்சுரத்துள்ளானே



கொச்சகம்.

உத்தானைக்கொருத்த குண்டோபிறர்க்களினி
அத்தாவுனையடுத்தேன் அழியாமலெவ்வுயிரும்
வித்திலுறும்பத்தினும் வேதாமனத்திலிருக்
தெத்திறுவறும்புக்தேறுவாய்ராமேசுரனே.



கட்டியக்காரன்தொல்-விருத்தம்.

நாரணன்பூசைசெய்த ராமலிங்கத்தைப்போற்றி
காரணத்திருப்புல்லாணிக் கடவுளினடிகளேத்திப்
பூரணவையநாடி பொன்னினற்பொய்கையிற்றே
ஆரணம்புகழுஞ்சொக்க ராமருமாநகரம்புகுந்தார்.

வசனம்.

அகோ கேளுங்கள் வேதவேதாந்த திவ்ய ஞானபரிபூரணமானவர்களே இந்தப்பிரகாரமாய் ஸ்ரீஅரியான ராமசுவாமியினாலே பிரதிஷ்டைபண்ணின ஸ்ரீராமலிங்கரை நியானம்பண்ணி பூசித்துப்போற்றி அங்கிருந்தெழுந்து தாப்பசமயமடைந்து அங்குள்ள ஈசுவரனைப்போற்றி இராமநாசபுரஞ்சேர்ந்து சேதுபதிநாதனை சேவித்துக்கொண்டு வேகவதிநதியிலே தீர்த்தமாடி வேதாகமங்களாலே துதிபெற்றமீனாட்சி சுந்தரேசுவரரடைந்த மதுராபுரமடைந்து திருவாலவாயிற்சென்று சொக்கநாதரைப்பூசிக்கிறவிதமெப்படியென்றால்.

பூசை-தரு-இ-ம-உசேனி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

வைகையண்டக்கடம்பவனந்தமர்ந்தவா தென்மதுராபுரியில்
வாசமானசொக்கலிங்கமே
தையல்மீனாட்சிதழுவும்பாதனே சிவசாம்பசிவா
தமியேனுக்கருள்புரியவேணுமே
திருவாதவூரர்க்கருள்செய்திடவே பெருந்துறைதனில்
தேவர்களுடன்கூடிவந்தவா
குருந்தடிதனில்வீற்றிருந்தவா குருவடிவாகிய
கோலந்திகழுஞ்சுந்தரேசனே
வேதம்புரிமேற்காட்சிதந்தவா தென்மதுராவாழும்
விமலனையுமைப்பூசைசெய்கிறேன்
பேதமகற்றியாளுமையனே சிவசாம்பசிவா
பிஞ்ஞகனுமைப்பூசைசெய்கிறேன்
இந்திரன்பூசைபுரியும்பாதனே சிவசாம்பசிவா
ஈசனேயுமைப்பூசைசெய்கிறேன்
தொந்திரவெல்லாமகற்றியாளுவாய் அந்தகனென்றுந்
தோன்றிடாதருள்புரியவேணுமே

தேவாரம்.

மங்கையர்க்கரசிவாணவர்தோன்றன் மாதவத்துதித்தனன்மாது
பங்கயச்செல்விபாண்டிமாதேவி பணிசெய்யுநாடொறும்பரவப்
பொங்கரவணியுமபூதநாயகனார் பூரணப்பொருள்களுமருளும்
அங்கயற்கண்ணியம்மையுடனமர்ந்த ஆலவாயாவதுமிதுவே.

விருத்தம்.

வாழிசைக்கும்பாணனுக்காயன்றுவிறகைச்சுமந்து
நாழிக்கொருவிலையாய் நாடோறும்விற்கிலையோ
வாழியாயுன்பதத்தை வந்தடுத்த அடியேனை
பாழில்விமன்வந்தனுகா பாண்மையெனக்கருள்வாயே.

திருச்சிற்றம்பலம்





திருப்பெருந்துறை - சிவகுருநாதர்.

கட்டியக்காரன்-விருத்தம்

மதுரைவாழ்சொக்கர்பாதம் மகிழ்ச்சியாய்பூசைசெய்து
சதுர்முகன்முதலோர்போற்றத் தகும்வரதனூர்கடந்து
அதிவேகத்துடனேவந்து ஆவிடையார்தன்கோயில்
விதிபுடன்சென்றுபோற்றி விமலனைபூசைசெய்தார்.

வசனம்.

ஆகோசேரும் சச்சிதானந்தசொரூபா சாட்சாத்கார நிதிசயானந்த பரிபூரணமானவர்களே ஸ்ரீமதுரைஸ்தலத்தைச் சேவித்துக்கொண்டு அங்கிருந்தெழுந்து பிரமன்முதலோர்களும் துதிசெய்யப்பட்ட திருவாதவூரென்னும் ஸ்தலத்துக்குவந்து திருவாதவூரருள்பெற்று சிவபூசைசெய்து அவ்விடத்தில் இரண்டொருநாள்வசித்து பின்பு அதிகதுரிதமாய் ஸ்ரீசிதம்பரேசுவரர் குருமூர்த்தமாயெழுந்தருளிய ஆவிடையார்கோவிலென்னும் திருப்பெருந்துறை ஸ்தலத்துக்குவந்து யோகீசுவரரைப்பூசிக்கும் விதங்காண்க.

பூசை-தரு-இம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆனையுரிபோர்த்தமார்த்தயீசனே — சிவபுரந்தனில்வாழும்
ஐயனேலோகநாதருனைவா
மானேந்தைதனிலெந்தமிருந்தவா — சிவசாம்பசிவா
மாணிக்கவாசகர்போற்றும்பாதனே
குருந்தடிதனில்வீற்றிருந்தவா — சிவசாம்பசிவா
கூடியார்ந்திடுங்குருந்தவனத்தோனே
திருந்தவேதவம்புரிந்தநாதனே — சிவசாம்பசிவா
சிவகணங்களுக்கருள்புரிந்தோனே
பூவுலகினில்கோயில்கொண்டவா — சிவகணங்கள்செய்திட்ட
பொன்னின்மண்டபந்தமர்ந்தநாதனே
கோவுக்கெழிலுயர்மணிகொடுத்தவா — சிவசாம்பசிவா
கொண்டாடிதனைப்பூசைசெய்கிறேன்
அடிமையாயுனைப்பூசைசெய்கிறேன் — சிவசாம்பசிவா
அடியேனுக்கருள்புரியவேணுமே
படிதனில்சண்டனைத்தொடாமலே — சிவசாம்பசிவா
பாதுகாத்தருள் பக்தபாலனே



தேவாரம்.

ஏகநாயகனேபோற்றி எவர்கட்குமதிப்பபோற்றி
யோகநாயகியாள்பாகத் துற்றநற்றவனேபோற்றி
பூகமாமதியாய்போற்றி வுயர்வரந்தருவாய்போற்றி
நாதபூதனனேபோற்றி நான்மறைப்பொருளேபோற்றி.

கொச்சகம்.

அண்டரொலாங்கண்களிக்க அடர்வனத்திநேரியெலாங்
கொண்டகோலந்தெரியாக் குழினாயெனக்கொண்டுவந்து
மண்டலத்தையாளுமந்த மகாராஜனுங்களித்த
துண்டதுபோலத்தக்கனைக் கொன்றதிரித்தகற்றுவையே.

திருச்சிற்றம்பலம்.



திருவானைக்காவல் - ஜம்புகேசுரர்.

கட்டியக்காரன் விருத்தம்.

அற்புதலிங்கந்தன்னை யன்புடனடிவணங்கி
பொற்புறத்தாயுமானார் பூங்கழல்போற்றிமெத்த
விற்பனர்துதிக்கும்நற்கா விரிநதியாடிநீங்கி
சிற்பதம்போற்றவெண்ணி ஜம்புகேஸ்வரமடைந்தார்.

வசனம்.

அகோகேளுங்கள் நித்தியானந்தசொரூப நிலையறிந்தமசத்துக்களே அரியதவத்தினையுடைய மார்க்கண்டேய மகாமுனிவரானவர் திருப்பெருந்துறையென்னும் ஸ்தலத்தைநீங்கி திரிசிரபுரமடைந்து மாதுர்பூதேசுவரரென்னும் தாயுமானவருடைய பாதபூசைபண்ணி பஞ்சாட்சரம்செபித்து இரண்டொருநாளங்குவசித்துத் துதிபெற்ற காவேரிநதியில் ஸ்நானஞ்செய்து ஜெபதபமுடித்துக்கொண்டு ஜலரூபியாகி ஜம்புகேசுவரமகாலிங்கனை தோத்தரித்துப் பூசிக்கும் விதமெப்படியென்றால்.

தரு-இ-ம-கமாசு-அடதாளம்.

கண்ணிகள்.

அம்பிதனக்குக்காட்சிதந்தவா — சிவந்தப்பூசித்து
துதிக்கவந்தசம்புலிங்கமே
நம்பிவந்துனைப்பூசைசெய்கிறேன் — அகிலாண்டேஸ்வரி
நாதனேயெனைக்காருண்மையனே
சிலந்திமுனிக்குச்சேவைதந்தவா — சிவசாம்பசிவா
சிற்பராவுமைப்பூசைசெய்கிறேன்
நலந்திகழ்ந்திடும்ஜம்புலிங்கமே — அப்பர்போற்றிசெம்
நற்பதமெனக்கருளவேணுமே
நிறைந்திடுஞ்சலத்துதித்தலிங்கமே — சிவசாம்பசிவா
நிமலனேயுனைப்பூசைசெய்கிறேன்
தறைதனிலெனையாளவேணுமே — தருமன்கைச்சேனே
தந்திடாதுனைப்பூசைசெய்கிறேன்
அகிலாண்டேஸ்வரிபாகத்தமர்ந்தவா — சிவசாம்பசிவா
ஆதரித்தெனையாளுமையனே
இகலொழித்தெனையாளும்பாகனே — சிவசாம்பசிவா
திருவடிக்குயானடிமையாகினேன்

நான்காவது.



தேவாரம்.

இப்புவியடியார்க்கெல்லா மிறைவனேபோற்றிபோற்றி
செப்புறைபொய்தபேர்க்குஞ் சிறப்பருஞ்சமுவாய்போற்றி
முப்புமெரித்துக்காத்த முல்லைவாய்நகையாய்போற்றி
அப்புலிங்கேசாவுத்த னடிமலர்போற்றிபோற்றி.

வெர்ச்சகம்.

அன்னையுநீதந்தையுநீ ஆசானுந்தெய்வமுநீ
உன்னையல்லால்வேறுதுணை உண்டோவுலகினிலே
என்னையிழுக்கவரும் எமனுக்குவேறுவகை
தன்னையுணர்த்தருள்வாய் தயாபரனேஜம்புலிங்கா.

திருச்சிற்றம்பலம்.



திருவையாறு - பஞ்சநதீசர்.

கட்டியக்காரன்சொல் விருத்தம்.

தென்புடன்சம்புலிங்கா திருவடிபோற்றிமிக்க
அன்புடனையாரப்ப ரடிசணிந்தவகாப்போற்ற
முன்புகாவிரியிலாடி முறைமுறைவிதிமுடித்து
இன்புறப்பூசைசெய்து ஏற்றியேதொழுவாரானார்

## வசனம்.

அகோ சேருங்கள் ஈஸ்வராநுக்கிரக பரிபூரணாத்தர்களே இந்தப்பிரகாரமாய் ஜலலிங்கேசுரரான சம்புநாதருடைய பாதபூசை பண்ணினபிற்பாடு திருவையாறென்னும் பஞ்சநதிக்ஷேத்திரத்திற்குவந்து காவேரியில்தீர்த்தமாடி நித்தியகர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீபஞ்சநாதசுவாமியினுடைய பாததரிசனம்பண்ணி பூசிக்கிறவிதமெப்படியென்றால்.

பூசை-தரு-இராகம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

## கண்ணிகள்.

| | |
|---|---|
| கேட்கும்வரந்தந்தாளுமீசனே<br>கேள்வனேயுனைப்பூசைசெய்கிறேன் | தர்மசம்வர்த்தனி |
| ஆட்கொண்டாயெனையாளாயேற்றுமே<br>அமர்ந்துவாழும்பஞ்சநதீசுவரனே | திருவையாற்றினில் |
| எழுருக்கிறையானவேலனே<br>என்னுளங்களித்துன்னைப்போற்றினேன் | சிவசாம்பசிவா |
| யமராசனென்னை யணுகிடாமலே<br>பணிவிடையுடன் பூசைசெய்கிறேன் | பஞ்சநதீசனே |
| ஞாலமீதினிற்குருபரனானவே<br>ஞானவமுதமளித்தயீசனே | எவர்களுக்குமெய்ஞ் |
| ஆலகாலவமுதமுண்டவா<br>அடியிணைதனக்கன்பணுகினேன் | ஐயாரப்பாவுன் |
| நந்திக்கருளுஞ் சந்திரசேகரா<br>நாதனேயுனைப்பூசைசெய்கிறேன் | சிவசங்கரிப்ராண |
| தந்திமுகன்பூசித்தபாதனே<br>தடந்திருவில்வாழ்பஞ்சநதீசனே. | காவிரிநதி |

## தேவாரம்.

பூவிரிந்தாருக்கொன்றைப் புகழ்புனற்றிங்கள்சூடி
சேவையாயரம்வளர்ந்த தேவிபாலமர்ந்தகோவே
காவிரிதடத்தமர்ந்தோய் கருணையங்கடல்தந்தாளும்
ஆவியின்றுணையானையா றப்பனேயருள்செய்வாயே.

## கொச்சகம்.

எவ்விழினுலகோர்போற்றி நிதம் வேதமோதியோதாமிடு
எண்ணுதலைநான் மூன்றுங் காவேரியலமுடிவே
நண்ணும்வயதெனக்கு நஞ்சன்காமென்றுணைப்ப
தெண்ணும்பதினாறென் றியம்புவையாரப்பனே.

திருச்சிற்றம்பலம்.





கும்பகோணம் - கும்பேசுரர்.

கட்டியக்காரன்சொல் - விருத்தம்.

அம்புலிகங்கைவில்வ மணிஜடாரப்பனென்றும்
சம்புவின்பொற்குளேந்தீர் சாத்திரமுறைநிகழ்த்தி
கும்பகோணத்திற்சென்று குலவிக்கவிரிவிலாடி
நம்புவோர்க்கருளுங்கும்ப நாதனைப்பூசைசெய்வார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் திருவையாற்றிலிருந்தெழுந்திருந்து கும்பகோணம் வந்து காவேரியில் ஸ்நானம்பண்ணி ஆதிகும்பேசுவரசுவாமியை பக்தியுடனே பிரதட்சணநமஸ்காரம்பண்ணி பூசைசெய்கிறவிதங்காண்க.

தரு-இ-ம்-கமாசு-ஏகதாளம்.

கண்ணிகள்-

சென்மவினைகள் தீர்க்கவந்தவா திருக்குடந்தையில்வாழும்
தேவர்போற்றும் கும்பலிங்கமே
சன்மசனமாய் செனம்மெடாமலே சிவசாம்பசிவா
கர்த்தனேயுனைப் பூசைசெய்கிறேன்
துங்கமாமக தீர்த்தமாடியே சிவசாம்பசிவா
சோதியேஉமைப் பூசைசெய்கிறேன்
மங்களாம்பிகை யாசந்தமர்ந்தவா சிவசாம்பசிவா
வானவர்போற்றும் கும்பலிங்கமே
எத்தலத்திலோர் செய்யும்பாவமும் சிவசாம்பசிவா
இத்தலத்தினில் தீருமென்னவே
சித்தரும்வேதா கமங்கள்புகழுமே சிவசாம்பசிவா
சிவலோயந்த நெறியைக்காத்தருள்வாய்
அகத்திமர்குடந் தமர்ந்தவர்தவா சிவசாம்பசிவா
அவனிதலத்தில் லெவைக்குமதிபனே
இகத்திலெந்தன்முன் எமன்வராமலே சிவசாம்பசிவா
இணையடிதனைப் பூசைசெய்கிறேன்
பிரமன்பூசைக் கருளுந்தேவனே சிவசாம்பசிவா
பெருமையாயுனைப் பூசைசெய்கிறேன்
அரித்திமாலை யணிந்தயீசனே
அடியவனெனக் கருளுமையனே. சிவசாம்பசிவா.



தேவாரம்.

சங்கராபோற்றிபோற்றி சச்சிதானந்தாபோற்றி
மங்களாம்பிகையின்பாகந் தமர்ந்தெமக்கருள்வாய்போற்றி
துங்கமான்மறைக்குமெட்டாச் சோதியேகும்பலிங்கா
செங்கரக்குவிந்தேனுந்தன் சேவடிதந்தாள்வாயே

சொச்சகம்.

முத்தனேநான்மறைக்கும் முதல்வனேமிக்கபரி
சுத்தனேமறைவியெனைத் தடாதுகாத்தருள்வாய்
அத்தனேஎவ்வகைக்கும் அதிபனெனவவதரித்த
சித்தனேயுனைப்பணியும் செல்வனெனைக்காத்தருளே

திருச்சிற்றம்பலம்.



திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கேசுரர் மார்க்கண்டேயர்

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

கூடியகும்பலிங்கர் கோகனகத்தாள்போற்றி
காடியேபூசைசெய்து நமக்குவரமளித்ததாடி
இடியேமருதப்பரா குகத்தனத்தலத்திற்சென்று
தேடிகாவிரியிலாடி திருவடிபோற்றிநேரே

(வசனம்) அகோகேளும் சிவனடியார்களே இவ்விதமாய் கும்பகோணத்தில் ஸ்ரீ ஆதிகும்பேசுவரரை தெரிசனம்பண்ணிக்கொண்டு அங்கிருந்தெழுந்து திருவிடைமருதூரென்னும் ஸ்தலத்திற்குவந்து காவேரியில் ஸ்னானம்பண்ணி சோழன்பிரம்மகத்தியை அகற்றியருள்செய்த மகாலிங்கமூர்த்தியினுடைய திருவடியைபூசித்துதோத்திரஞ்செய்கிற விதங்காண்க.

தரு-இராகம்-கமாசு-ஏகதாளம்.

கண்ணிகள்.

திருவிடைமருதூரில்வாசனே — சோழன்பிரம்மகத்தி
தீர்த்தருள்தந்தநேசனே
கருவினியாதுசேராமலே — சிவசாம்பசிவா
கருணையைப்பூசைசெய்கிறேன்
புவியின்கண்ணிலுக்கழுதமர்ந்தவா — சிவசாம்பசிவா
புனிதனேயுனைப்பூசைசெய்கிறேன்
இவிதலிற்தெய்வமதுவேறுமே — சிவசாம்பசிவா
செழிதந்தருளும்மருதூரீசனே
சோழன்பிரமத்திதன்னைதவிர்த்தவா — சிவசாம்பசிவா
சோதியேயுனைப்பூசைசெய்கிறேன்
வேழமுகனையீன்றநாதனே — சிவசாம்பசிவா
விமலனேயுனைப்பூசைசெய்கிறேன்
பெருமுலையம்மன்பாகத்தமர்ந்தவா — சிவசாம்பசிவா
பிஞ்ஞகாவுனைப்பூசைசெய்கிறேன்
கருமாலைபோலந்தகன்வராமலே — சிவசாம்பசிவா
கருணைபாதந்தருளுமையனே

தேவாரம்.

வித்தகாவிமலாநாதா விண்ணவர்போற்றும்பாதா
பத்தர்கள்பணிந்துபோற்றப் பாவலர்நாவிலுள்ளோய்
சித்தனேகவிதமிழ்க்குத் தேவனே அமரர்வாழ்வே
அத்தனேமருதூர்வாழும் அண்ணலேயருள்செய்வாயே



கொச்சகம்.

கல்லடிக்கும்வில்லடிக்கும் காலுதைக்குங்கோட்சிதர்த்த
இல்லைபோலின்மாயை எவரறிவார்கண்ணுதலே
கல்லல்செய்யுந்தூதருடன் காலனெனைக்கிட்டாமல்
தொல்லையில்வந்தெனைதரித்தாள் ஞானமகிழ்மகாலிங்கனே

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

திருவிடைமருதூர்போற்றித் திருநாகேச்சரமும்போற்றி
குருவருள்மிகப்படைத்த குடவாசலடைந்துபோற்றி
அருந்தவர்துதித்துப்போற்றும் அருள்சிவபுரஞ்சேவித்து
திருவாஞ்சிஸ்தலம்புகுந்து திருவடிபூசைசெய்தார்



திருவாஞ்சியம் — வாஞ்சிநாதேசுவரர்

தரு-இராகம்-கமாசு-ஏகதாளம்.

கண்ணிகள்.

வானோர்முனிவர்வணங்கியேற்றிடும்
மதனையெரித்தவாஞ்சி — லிங்கமே
ஈனமாயினிபிறந்திடாமலே
எந்தனுக்கருள்செய்ய — வேணுமே

என்றுமேயம்மன் பாதத்தைச்சேர்த்தவா — சிவசாம்பசிவா
மெய்யினைநீர்க்கும்வாஞ்சிலிங்கமே
கல்லுகொண்டுகோணக்காட்டிதந்தவா — சிவசாம்பசிவா
காலன்வாராமல்காத்தருள்வாயே
அண்டருக்கரிதானதேவனே — திருவாஞ்சியனே
ஆனந்தக்கூத்தாடுமையனே
தொண்டருனைப்பூசைசெய்கிறேன் — சிவசாம்பசிவா
தொல்வினைதவிர்த்தாளுமையனே
காலனைக்காலாலுதைத்திட்டவா — சிவசாம்பசிவா
கர்த்தனேயுனைப்பூசைசெய்கிறேன்
பாவவினைத்தனைமாய்ப்பவனே — [illegible]
பதினாறென்றருள்புரியுமீசனே





கொச்சகம்.

ஆதியாயமர்ந்தசெம் மல்வுருவமோரெழுத்தாய
நீதியுமாய்சத்தருமாய் நின்றவொளியாயெங்கும்
வேதவிழிகொண்டவனே வித்தகனே காலனெனை
வாதியாதென்னையருள் வன்னலேவாஞ்சிலிங்கா

கட்டியக்காரன்சொல்விருத்தம்

நேசமாஞ்சேயர் இன்மலரற்றுப்போற்றி
பாசபந்தங்கள்நீக்கும் பரமனாமநேகநாதர்
வாசமாக்கோவில்சென்று வணங்கியங்கிருந்தெழுந்து
ஆசையாய்வினைக்குழந்தை அருணைக்குலையடைந்தார்

(வசனம்) அகோகேளும் புண்ணியவான்களே திருவாஞ்சியம் நாகபட்டணமுதலான அந்தந்தச்சிறப்புள்ள ஸ்தலங்களிலே வாசமாயிருந்து சிவஸ்தலங்கடோறுஞ்சென்று பூசிக்கும்போது விநோதமாத்திரத்திலே முத்தியருளப்பட்ட திருவண்ணாமலையாளைச்சேர்ந்து அங்கிருந்தெழுந்து திருவண்ணாமலையிலுள்ள அருணாசலதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி அருணாசலேசுவரருடைய திவ்வியமான திருவடிகளைப்பூசிப்பதுகாண்க.

தரு-இராகம்-கமாசு-ஏகதாளம்.

கண்ணிகள்.

வினைக்குழந்தைகொடுக்கும்சீலனே — சிவசாம்பசிவா
நேசமாயுனைப்பூசைசெய்கிறேன்
அனைத்துயிர்க்குயிர்த்துணையாயிருக்கிறவா — சிவசாம்பசிவா
அமலனேயுனைப்பூசைசெய்கிறேன்
அருட்கவர்க்கருள்புரியும்பரமனே — உண்ணாமுலையாள்
அருகிலமர்ந்தசோதிநாதனே
பொருந்தவுன்னடிபூசைசெய்கிறேன் — சிவசாம்பசிவா
புகழுஞ்சோதிநாதருமையனே
மாலயனிருவருந்தேடுமுருவாய் — மண்ணுடன்விண்ணும்
மகிழ்ந்தேடியடிமுடியரியனே
காலனைக்கண்டுறாதெனக்கருள்வாய் — சிவசாம்பசிவா
கடவுளேயுனைப்பூசைசெய்கிறேன்

தேவாரம்.

உண்ணாமுலையுமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமானணி திருமாமணி திகழ
மண்ணார்ந்தனமருவித்திரள் மழலைம்முழவதிர
அண்ணாமலைதொழுவார்வினை வழுவாவண்ணமறுமே

கொச்சகம்.

ஆலமுண்டாயண்டருச்சாய் அரும்வேடனெச்சிலுண்டாய்
மாலயனுந்தேடுமெம்மான் மண்ணும்விண்ணுமொன்றான
கோலமதுகொண்டாயுன் கோகனகத்தாள்போற்றும்
பாலனென்றான்காலன்வாராப் பரிவருள்வாயருணேசா

திருச்சிற்றம்பலம்.





கட்டியகாரன்சொல்விருத்தம்.

அருணேசன்றன்னைப்போற்றியாலங்காட்டில்
அமர்ந்தவனைப்போற்றிதிருவொற்றியூர்வாழ்
கருணைகற்றுந்தியாகேசர்தம்மைப்போற்றி
மகிழ்ந்துதிருநின்றவூர்மாதவனைப்போற்றி
இருளகற்றுஞ்சிவபுரத்துக்கரசேபோற்றி
இசைந்திடுமுன்னடியாதியின்பமீதி
தெருள்மிகத்தந்திடுமேகாம்பரேசர்பாதம்
தேடவலம்வந்தருள்கொண்டாடினாரே

(வசனம்) இந்தப்பிரகாரம் திருவண்ணாமலையைப்போற்றிதிருவாலங்காடு திருவொற்றியூர் திருநின்றவூர் சிவபுரம்முதலான ஸ்தலங்களெல்லாம் கடந்து சேவித்துக்கொண்டு வேகவதி சலயகதிட்சீரநதி இம்மூன்றினும் ஸ்நானஞ்செய்துகளித்து காஞ்சிபுரத்தில்வாழும் ஸ்ரீஏகாம்பரநாதருடைய திருவடியைப் போற்றிசெய்யும்விதமெப்படியென்றால்.

தரு-இங்-கமாசு-ஏகதாளம்

கண்ணிகள்

எமன்வந்தென்னையணுகிடாமலே — சிவசாம்பசிவா
இணையடிதனைப்பூசைசெய்கிறேன்
வாமனன்மகிழ்கூறுமண்ணலே — அம்மைகாமாட்சியுடன்
வானோர்போற்றுமேகாம்பரேசனே
மந்தாரைதும்பைவில்வமெடுத்துநான் — சிவசாம்பசிவா
மலரடிதனைப்பூசைசெய்கிறேன்
செந்தாமரைமலர்பூசைசெய்கிறே — னெமையோட்டி
சிந்தனையொழித்தாளுமையனே
நம்பியுன்னிடப்பாகங்கொள்ளவே — திருக்கம்பைநதியில்
நடுமணலினிலுதித்தலிங்கமே
அம்பிகைக்கிடப்பாகந்தந்தவா — அந்தகனென்முன்
அணுகிடாதருள்புரிவேணுமே
செம்பொன்னம்பலத்தாடுமையனே — சிவசாம்பசிவா
சீருடனுனைப்பூசைசெய்கிறேன்
அம்புவிதனிலெமன்வாராமலே — சிவசாம்பசிவா
அடியேனுக்குமருள்புரிந்தருளே

தேவாரம்.

அரியனையந்தணர் தஞ்சிந்தையானை
யருமறையுட்பொருளானை யணுவமாகடந்த
தெரியாதத்துவனைத் தேவர்போற்றுந்
திகழொளியேநான்மறைவேதெளிக்கதேனை
கரியுரித்தகண்ணுதலோனைவீசி
காமனைத்தீய்த்தருக்கவனாக்காந்தகோவே
பெரியோனைபெறுபெற்றைச்சிவாழும்
பெம்மானையுன்னடிகயைப்பேறுவேனோ

கொச்சகம்.

எல்லையிலாத்துன்பமுற்றுப்பிரவிதனைக்கருவிட
தொல்லுயிருனுடனெப்பணிந்தேன்தொண்டனென்னையின்முதல்
அல்லல்செய்யுமந்தகனை யுதட்டிவெனைக்கருள்புரிவாய்
இல்லையெனிசோவகலேன் ஏகாம்பரநாதனே

திருச்சிற்றம்பலம்.

---

திருக்காளத்தி.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

இருக்கதோர்புட்பமெல்லாம் ஏகாம்பரேசர்பாதம்
சொரிந்தேன்பூசைசெய்து சுவாமிமுகிவினிவாடி
பரிந்துநற்றிருக்காளத்தி பரமனைப்போற்றுசெய்ய
அரிந்தநன்மலர்கள்கைக்கொண் டாலயம்வலம்வந்தானே

(வசனம்) இந்தப்பிரகாரம் காஞ்சிபுரஞ்சேர்ந்து ஏகாம்பரநாதனைப்பூசித்த மார்க்கண்டேயமகாமுனிவரானவர் அங்கிருந்தெழுந்து புறப்பட்டுச்சமாற்றி மோட்சதலக்கொடுக்கப்பட்ட பொன்முகிலியென்னும் நதியில் தீர்த்தமாடி திருக்காளத்திநாதனைத் தோத்திரம்பண்ணுகிறார்.

கரு-இம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

கண்ணிகள்.

மதியும்புனலுங்கொன்றையுஞ்சூடிய வேடன்பூசித்த
மகிழ்ந்திருந்தகாளத்திசனே
கதிகொடுத்தெனையாளவேவேணுமே சிவசாம்பசிவா
கர்த்தனேயுனைப்பூசைசெய்கிறேன்



வேடனெச்சிற்றெனுண்டுமகிழ்ந்தவா தின்னனுக்கன்று
விரைவிற்கண்தந்த விசுவநாதனே
மூடனுமடியேனைக்காருமே சிவசாம்பசிவா
முத்தியருள்காளத்திநாதனே
அரவினையாரமாகப்பூண்டவா ஞானம்பிகைபாகனே
தமர்க்குவாழ்ந்திடும் திருக்கண்ணசனே
மறலிவந்தெனையணுகிடாமலே சிவசாம்பசிவா
மார்க்கண்டனெனைப் பூசைசெய்கிறேன்
வேதனேயுனைப்பூசைசெய்கிறேன் சிவசாம்பசிவா
வித்தகாஎனைக்காக்கவேணுமே
மாதவர்போற்றுங்காளத்திசனே திருவேங்கடத்தோன்
மகிழ்ந்திடுமுனைப் பூசைசெய்கிறேன்.

தேவாரம்.

கரும்புத்தேனருந்துங்காளத்திசனே
அரும்புமாமுலை ஞானம்பாள்பாகனே
எரும்புபூசித்திறைஞ்சியவண்ணலே
விரும்புவாயெந்தன் வேதனைதீர்க்கவே.

கொச்சகம்.

ஆட்கசசிதம்பரத்தி லந்தரிமுன்னேகடித்தாய்
காடகழுகேகமொண நற்றவத்திலேறுக்கனிக்கக்
கோடாயிதேறிவந்தாய் கூடல்நகராட்சிகொண்டாய்
வீட்கத்திலென்னைவைப்பாய் விமலனேகாளத்திசனே,

திருச்சிற்றம்பலம்.

---

கட்டியக்காரன்-விருத்தம்.

கண்ணப்பன்பூசைசெய்த காளத்திலிங்கர்பாதம்
எண்ணமதொருங்கிடாமல் எழிலுறப்பூசித்தேற்றி
விண்ணப்பஞ்செய்துபோற்றி விளங்குபொன்னம்பலத்தை
நண்ணவச்சிவகங்கைக்குள் நாடினார் ஆடினாரே.

வசனம்.

அகோகேளும் சகலசௌபாக்கியவான்களே இந்தப்பிரகாரம் திருக்காளத்திலிங்கனைப் பூசித்து உள்ளம்பூரம்பு மொன்று மெண்ணை கல
மா

ங்காமல் தன்மனத்துள்ள குறையாவையும் விண்ணப்பஞ்செய்து களித்து அங்கிருந்தெழுந்து பொன்னம்பலமாகிய சிவசிதம்பரஸ்தலத்தில் வந்து மகாசிரேஷ்டமாகிய கங்காநதிக்கொப்பான சிவகங்கை தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஸ்ரீசிதம்பரேசருடைய திருவாலயப் பிரதட்சணம் வந்து நமஸ்காரஞ்செய்து அங்கிருந்த நந்தவனத்திலுள்ள பூஜார்க்கமான மல்லிகைமுல்லை இருவாட்சி கொன்றை தும்பை வில்வ முதலான மலர்களைப் பறித்துக்கொண்டு ஆனந்தக்கூத்தாடி அலங்கரித்துக்கொண்டு தில்லைமூவாயிரவரும் பிர்மா விஷ்ணு முதலான தேவர்களும் களிகூறக் கனகசபையேறி கண்களித்து நடனசபையில் வீற்றிருக்கிற நடேசரைப் போற்றிப்பூசிப்பதுகாண்க.



சிவகாமியம்மை.

## சிதம்பரட்சேத்திரம்.

சிதம்பரத்தில் ஆயுஆயுரகலிங்கமே லைல்லிங்கப் பவிர்க்கப்பட்டது.



50

தரு-இம்-கமாசு-ஆதிதாளம்,

கண்ணிகள்.

காளியுடன்வாதாடுமீசனே — சிவசிதம்பரத்தில்
கனகசபையிலமர்ந்ததேவனே
தூளிசெய்திடும்எமன்வராமலே — சிவசாம்பசிவா
துரத்தியெந்தனைக்காக்கவேணுமே
கங்கைபாதனும்போற்றுந்தேவனே — சிவகாமியம்மனை
கருணையுமயிடப்பாகங்கொண்டவா
சிங்கம்புலிவாழுந் தில்லைவனத்தோனே — சிவசாம்பசிவா
சிறியேனுன்பாதம்பூசைசெய்கிறேன்
தும்புருநாரதர்தித் துப்பாடவே — பொன்னம்பலந்தனில்
துய்யவன்னெழுதாளம்போடவே
சம்புவினடியார்கள் களிக்கவே — மத்தளங்கொட்டி
சக்கிரியுந்தொனிப்பித்துகெளிக்கவே
திந்திமித்திமிதித்திமியெனவே — சிவசாம்பசிவா
தில்லையம்பலத்தாடுமையனே
புந்திமகிழ்ந்துனைப்பூசைசெய்கிறேன்பொல்லாஅந்தகன்றனைப்
போக்கிடுந்தன்பொன்னடிதந்தாளவையே

தேவாரம்.

எத்தனைஜனனமென்மேல் எடுத்தெடுத்திருந்துமென்ன
குற்றங்கள்பொறுத்தேயாண்ட குருபரனுகத்தோன்றும்
சித்தனேவெளியாய்நின்ற சிவசிதம்பரனேபோற்றி
முத்தனேசிவகாமித்தாய் மோகனேபோற்றிபோற்றி.

கொச்சகம்.

காட்டுக்கோயெரித்தநிலா கானலுக்கோபேயுமழை
நாட்டுக்கோர்துண்டதுபோல் நன்னுந்தில்லைநாயகனே
பாட்டுக்கோர்துறையெனவே பாய்ந்தேமன்வாராமல்
மீட்டுக்கோயெவ்வகையும் மேவியசிதம்பரனே.

திருச்சிற்றம்பலம்.



சீர்காழிட்சேத்திரம்



கட்டியக்காரன் விருத்தம்.

முல்லைமாமலர்கள்கொண்டு மூன்றுநாள்பூசைசெய்து
அல்லும்பகலும்போற்றி யருந்தவப்பேறுபெற்று,
தில்லையைவிட்டுநீங்கிச் சீர்காழிதன்னில்வந்து
எல்லையில்லாததுன்பம் ஏகவேபூசைசெய்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் சிவசிதம்பரநாதனைப்பூசித்து மூன்றுநாள் அங்கிருந்து சீர்காழியென்னும் ஸ்தலத்தில்வந்து அங்குள்ளபாபவிமோசனமாகிய சட்டைநாதர் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து நேமநிஷ்டைமுடித்துக்கொண்டு அங்கிருக்கும் நந்தவனத்திலுள்ள புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு ஸ்ரீசட்டைநாதீஸ்வரரைப் பூசிப்பதுகாண்க.

தரு-இ-ர-மோகனம்-ஏகதாளம்.

கண்ணிகள்.

சென்னிதன்னில் கங்கைசூடியே — சிவசாம்பசிவா
சீர்காழியில்வந்தமர்ந்தநாதனே
மங்கைதிருநிலையம்மன்பாகனே — சிவசாம்பசிவா
மலர்பதந்தனைபூசைசெய்கிறேன்
பின்னையொருதுணை வேறுமில்லையே — சிவசாம்பசிவா
பெருமையாயெனைக் காக்கவேணுமே
அன்னைபிதாகுருதெய்வமானவ — சிவசாம்பசிவா
அண்ணலேசட்டைநாதலிங்கமே
பாலகனுக்குப்பாலளித்தவா — சிவசாம்பசிவா
பார்வதிமகிழ்பரமலிங்கமே
மூலகாரணனுயுதித்தவா — அந்தகனோந்தன்
முன்வராதருள்செய்யவேணுமே
ஞாலமீதினில் தாயைப்போல்வந்தாய் — சிவசாம்பசிவா
ஞானசிரோமணியானதெய்வமே
லேனேசினைல்பூசைசெய்கிறேன் — எவர்க்குமில்லாத
சிந்தனைதவிழ்த்தாளவேணுமே

தேவாரம்.

தோடுடையசெவியன்விடைதூய்மதிசூடி
காடுடையசுடலைப்பொடி பூசியென்னுள்ளம்
கேடுடையார்முன்னாள் பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமபுர தீசன்கழல்போற்றி.

கொச்சகம்.

தூங்காத்துயர்க்கடலில் தேங்கிடனம்வாடாமல்
வாங்காமல்நினகருணை வைக்கவென்முன்வாராயோ
நீங்காத்திருநிலைபு வியுன்பங்கிலமர்ந்
தோங்கஇருப்பாயென் றியம்புவாய்சீர்காழிலிங்கா



வயித்திநாதன்கோயில்.



கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

தேவர்கள்மகிழ்ந்துபோற்றுஞ் சீர்காழிநாதர்தம்மை
யாவருங்களிக்கப்போற்றி யடிமலர்தனைப்பூசித்து
ஆவலாய்த்தீர்த்தமாடி அண்ணலேவயித்திலிங்கத்
தேவனேயெனக்கொண்டாடித் திருவடிபோற்றுவாரே.

வசனம்.

இந்தப்பிரகாரமாய் சீர்காழிநாதருடைய பாதாரவிந்தங்களைப் பூசை செய்து எல்வினையுந் தீர்த்தருளப்பட்ட வயித்தியநாதருடைய திருவாலயத்தில்வந்து காலுவீதியிலும் ஆனந்தக்களிப்பினால் பாடியாடி ஆலயத்துக்குட்சென்று அங்குள்ள திவ்வியமாகிய வயித்தியநாதரது ரோகநிவாரணமென்கிற புஷ்கரணியிலே தீர்த்தமாடி அங்குநானாவிதமான புட்பங்களுள்ள நந்தவனத்துக்குட்சென்று திவ்வியபரிமள வாசனைபொருந்திய பத்திரபுட்பங்களைப் பறித்துக்கொண்டுவந்து ஸ்ரீவயித்தியநாதருடைய பாதாரவிந்தத்தை அர்ச்சிக்கும் விதங்காண்க.

தரு- இ-ம்-மோகனம்- அடதாளம்.

கண்ணிகள்.

பஞ்சாட்சரத்தி னுருவாய்வந்தவா — வேளூரமர்ந்த
பரமனாகியவயித்தியலிங்கமே
அஞ்சலென்றுனைப்பூசைசெய்கிறேன் — சிவசாம்பசிவா
அந்தகன்வராதருள்வையே
இருவினையாமருந்தளித்தவா — சிவசாம்பசிவா
இணையடிதனைப்பூசைசெய்கிறேன்
வருவினைகள்தீர்த்தாளுமையனே — திருவயித்தீசுவரத்தில்
வாழ்ந்திடுந்தையநாயகிபாகனே
அண்டர்போற்றும்அமலபாதனே — சிவசாம்பசிவா
அடியேனுக்கருள்புரியவேணுமே
தொண்டர்போற்றிடவேளூரமர்ந்தவா — சிவசாம்பசிவா
துன்பந்தவிர்த்தெனையாளவேணுமே
கந்தருக்கரசாட்சிதந்தவா — சிவசாம்பசிவா
கருணையங்கழல்பூசைசெய்கிறேன்
எந்தனுக்குயர்துணையுண்டாதமே — சிவசாம்பசிவா
எழிலுறவேநான்பூசைசெய்கிறேன்

தேவாரம்.

பேராயிரம்பரவி வானோர்போற்றும்
பெம்மானைப்பிரியா வடியார்க்கென்றும்
வாராதசெல்வங்கள்வருவிப்பானும்
வல்வினைக்கோர்மந்திர மும்மருந்துமாகி
தீராநோய்தீர்த்தருள வல்லான்றன்னைத்
திரிபுரத்தோர்குலமழியச் சிலையைக்கொண்ட
போரானைபுள்ளிருக்கும்வேளூரானைப்
போற்றாதநாளெல்லாம்புலர்ந்திடாமே.

திருவாசகம்.

கண்ணேகருத்தே கற்பகமேகண்ணிறைந்த
விண்மேவியகடவுளேவேதமுதல்மெய்ப்பொருளே
என்னுமனவகந்தை எத்தனைவந்தணுகாமல்
தன்னருளைசெய்வாய் தயாபரக்கரசே.
திருச்சிற்றம்பலம்.



மாயூரக்ஷேத்திரம்.



கட்டியக்காரன் - விருத்தம்.

வானவர்மகிழ்ந்துபோற்றும் வயித்தியலிங்கந்தன்னை
கானகத்தின்மலர்கள்கொய்து கருதியேபூசைசெய்து
போனவர்வேறோர்விட்டுப் புனிதமாயூரஞ்சென்று
ஆனதோர்மலர்கள்கொய்து அன்புடன்பூசைசெய்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரமாய் தேவர்களும்போற்றி அர்ச்சிக்கப்பட்ட வயித்தியநாதரைப் பூசித்துப்போற்றி நினைத்து அக்கிருந்த புஷ்கரணியிலே ஸ்நானம்பண்ணி சோடச உபசாரத்துடனே அர்ச்சித்து அங்கிருந்தெழுந்து கௌரிமாயூரமென்னும் ஸ்தலத்தையடைந்து காவேரிநதியில் விருஷதீர்த்தத்தில் தீர்த்தமாடி விபூதிருத்ராட்ச மாலிகாபரண லங்கிருதனுகி கௌபீனகடி சூத்திரதாரியாய் பிரம்மசர்யா சிரமாசாரபரனாய் ஏகவஸ்திரதாரியாய் ஆநந்தக்கூத்தாடிக்கொண்டு நாலுவீதியும் பிரதட்சணம்வந்து ஆலயஞ்சுற்றி வேதமந்திரங்களாலே துதித்துப்போற்றிப்பூசிப்பதுகாண்க.

தரு - இம் - சுருட்டி - அடதாளம்.

கண்ணிகள்.

வானவர்க்கருள்தந்த மூர்த்தியே — மாயூரத்தில்
வாசமானமாயூரலிங்கமே

கானவாஉமைப்பூசைசெய்கிறேன் — மயிலைப்போல்வந்த
காதலியொழுங்கழல்தந்தருளுவாய்

ஆவலாயுனைப்பூசைசெய்கிறேன் — சிவசாம்பசிவா
அடியேனுக்கருள்புரியவேணுமே.

தேவிமயிலாள்பூசைக்கிசைந்தவா — அபையாம்பாளுடன்
சேர்ந்துவாழுமாயூரலிங்கமே

காவிரிநதிகட்டத்தமர்ந்தவா — சிவசாம்பசிவா
கண்ணுதலேயுனைப்பூசைசெய்கிறேன்

தாவிவந்தெமனெனைத்தொடாமலே — சிவசாம்பசிவா
தற்காத்தருள்மாயூரநாதனே

பிறவித்துன்பமகற்றியாளுவாய் — சிவசாம்பசிவா
பெருமானேயுனைப்பூசைசெய்கிறேன்

உறவினருனைப்போலவேறுண்டோ — சிவசாம்பசிவா
உளமகிழ்ந்தெனையாள வேணுமே

தேவாரம்.

காலனார் தூதர்வந்து கயறுகட்டிழுக்குமுன்னே
சாலவேமகிழ்ந்துன்பொற்றாள் தன்னையென்றலைமேல்வைப்பாய்
ஆலகாலத்தையுண்டஐயனே அமரர்கோவே
சோலையின்மயில்வந்தேற்றும் சோறியேபோற்றிபோற்றி.

கொச்சகம்.

எங்கணுமொன்றாய்நிறைந்து எழுந்தபரஞ்சுடரோ
அங்கமெல்லாம்வேசாரி அருகில்வந்தேனுன்னடிமை
செங்கையின்மான்மழுவேந்துந் திரிபுரசம்மாரகனே
மங்கையபையாம்பாள்கொண்ட மலர்ப்பதந்தந்தருளுவையே.

திருச்சிற்றம்பலம்.



திருவாரூர்தியாகராயர்.



கட்டியக்காரன்-விருத்தம்.

மங்களமாகவாழும் மாயூரநாதர்பாதம்
அங்கவன்போற்றிசெய்து அடைந்துநற்றிருவாரூரில்
செங்கழுநீர்பூத்துய்யும் திவ்வியதீர்த்தமாடி
சங்கரனுருவாய்வந்த தியாகராயரைப்பூசிப்பாய்

வசனம்,

இந்தம்பிரகாரமாய் மாயூரநாதரைப் பூசைசெய்து அங்கிருந்தெழுந்து பிறக்குமவர்களுக்கு முத்திகொடுக்கப்பட்ட திவ்யட்சேத்திரமாகிய திருவாரூருக்குவந்து நாள்தோறுந்தவறாமல் புஷ்யந்தரப்பட்டசெங்கழுநீர்பரவியஓடை ஐவேலியிலமுள்ள கமலாலயமென்னப்பட்ட சிவபுஷ்கரணியாகிய மகாதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி கைலையங்கிரியிலிருந்தெழுந்த சோழமகாராஜனுக்கு அருள்தர இராசவடிவாயமர்ந்த ஸ்ரீதியாகராசருடைய் திவ்வியபாததியானம்பண்ணி மகா ஆசாரபானுகி சுசீலனாய் நிர்ம்மலசித்தனாய் நிஷ்காமியாய் ஈஷணத்ரயமுற்றவனாய் ஜெபதபாதிகள் செய்து முடித்துக்கொண்டு திருவாலயவலம்வந்து கெர்ப்பகிரகதரிசனம் பண்ணிக்கொண்டு நந்நிமகாஸ்தோத்திரஞ்செய்து நித்தியானந்தரான தியாகராயரைப் பூசிப்பதுகாண்க.

தரு-இராகம்-சுருட்டி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

இந்திரன்பூசையுரியும்பாதனே திருவாரூரில்வாழும்
ஏகனேதியாகராஜலிங்கமே

மந்திரமுறையாகப்பூசிப்பேன் சிவசாம்பசிவா
மறலிவாராமற்காத்தருள்வையே

பரவைமனைக்குத்தூதுசென்றவா அல்லியங்கோதை
பங்கிலமருந்தியாகராஜனே

சரணமென்றுனைப்பூசைசெய்கிறேன் சிவசாம்பசிவா
சங்கராயெந்தன் சஞ்சலந்தவிர்ப்பாயே

கமலநாயகிபாகத்தமர்ந்தவா சிவசாம்பசிவா
கடையேனுக்கருள்புரியவேணுமே

அமலனேயுனைப்பூசைசெய்கிறேன் சோழமன்னனுக்
கரசருளியதியாகராசனே

அல்லிசெண்மலர்மாலையணிந்தவா சிவசாம்பசிவா.
ஐயனேயுனைப்பூசைசெய்கிறேன்

மெல்லிக்குப்பிள்ளைவரமளித்தவா தேர்வண்டியின்சாலில்
மேலுயிர்தந்ததியாகராசனே

## தேவாரம்.

அண்டர்கள்முனிவர்போற்ற ஆயிரங்கண்ணன்பூசை
கொண்டதோராரூரீசர் கோகனகந்தாள்போற்றி
தொண்டருக்கருள்வாய்போற்றி துதிப்பவர்மனத்தோய்போற்றி
கண்டனென்முன்வராமல் சந்ததங்காப்பாய்போற்றி

## கொச்சகம்.

கண்டன்றிடரவேற்றி சாவுவேனெனுமவன்
தண்டனைக்குள்ளாகாமல் தற்காத்தருள்பரனே
கொண்ட வினம்பரவக் குயிலொலிகள்கேட்டுகிழ்
அண்டர்கோனேயாரூர்க கரகனேதியாகேசா

திருச்சிற்றம்பலம்.



அமுர்தலிங்கர்

அபிராமியம்மை

திருக்கடையூர்சேட்த்திரம்.



## கட்டியக்காரன் விருத்தம்.

மார்க்கண்டமுனிவர்தாமும் வையகந்தன்னின்மீது
கார்க்கண்டதாரமெல்லாங் கடுகியேகடந்துபிப்பால்
தாரமர்பூக்கள்கொண்டு சதிருடன்போற்றிசெய்து
ஆர்க்கொண்டகடையூரீச ரடியிணைபூசைசெய்வார்.

## வசனம்.

அகோகேளுங்களையா நித்யானந்தபரிபூரண கிருபையையடைந்த சிவபத்த சிரோமணிகளே இந்தப்பிரகாரம் பூமியின்கணுள்ள ஆயிரத்தெட்டு சிவாலயங்களுந்திரிந்து அங்கங்கேயுள்ள தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணி நித்தியகர்ம்மாநுஷ்டானசெபதபாதி நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு ஈசுவரபிரசாதங்களினாலே சந்தோஷமடைந்து வருநாளில் ஒருநாள் ஆயிரத்தெழு ஸ்தலமும் யாத்திரைசெய்து வந்தோம் இனியிந்த அமுர்தலிங்கரமர்ந்திருக்கிற க்ஷேத்திரத்துக்குவந்துபூசிக்கிறகாலத்திலே பதினைந்துவயதும் பதினைந்துமாதமும் பதினைந்துநாளுமாய்விட்டது இனிமேல் இவரைத்தவிர நமக்கு என்றுஞ்சிரஞ்சீவியா யிருக்கும்படியான வரவரமளித்து கிருபைசெய்பவர்கள்வேறொருவரும் இல்லையென்று நிச்சயித்து சுவாமியின் ஆலயவலம்வந்து நாமபூமண்டலத்திலுள்ள சிவாலயமெங்கணும்போய் கடைசியாக இந்தக்ஷேத்திரத்துக்குவந்தோம் ஆகையால் இந்தக்ஷேத்திரத்திற்கு திருக்கடையூரென்கிற நாமதேயம் நம்மால் வழங்குவென்றுகடையூராரோ என்னைக்காருமென்று அங்குள்ள அமுர்தகண்டி தீர்த்தத்தில் ஸ்நான சந்தியாவந்தன செபதப நேமநிஷ்டாதிகளை முடித்துக்கொண்டு திருக்கடையூரான்று வழங்கிவருகிறஅமுர்தலிங்கரைத்தோத்திரஞ்செய்து பூசிப்பதுகாண்க,

தரு-இ-ம-கேதாரகௌளம் - ஆதிதாளம்,

## கண்ணிகள்.

ஆதியந்தமாகிநின்றவா திருக்கடையூரில்வாழும்
அமுர்தலிங்கமானஈசனே

பூதலமெங்குந்திரிந்துவந்துநான் சிவசாம்பசிவா
புனிதனேயுமைப்பூசைசெய்கிறேன்

மல்லிகைமுல்லைசெண்பகமலரால் சிவசாம்பசிவா
மலர்ப்பதந்தனைப்பூசைசெய்கிறேன்

சொல்லுமநந்தியாவர்த்தமலர்கொண்டு சிவசாம்பசிவா
சோதியுனைப்பூசைசெய்கிறேன்

| | |
|---|---|
| ஆலமருந்தியமுர்தமளித்தவா | திருக்கடையூர்வாழும் |
| அபிராமிபிரமூர்த்தலிங்கமே | |
| காலன்வந்தென்னைக்கட்டிடாமலே | சிவசாம்பசிவா |
| கந்தமலர்கொண்டுபூசைசெய்கிறேன் | |
| கொன்றைதும்பைபச்சில்வதளங்களோ | சிவசாம்பசிவா |
| கொண்டுவந்துனைப்பூசைசெய்கிறேன் | |
| என்றைக்குமென்முனேமன்வராமலே | சிவசாபசிவா |
| இணையடிகள்தந்தாளுமையனே | |

---

தோத்திர அகவல்,

சிவசிவசம்போ திரியம்பகாபோற்றி
பவமறுத்தாண்ட பரமமேபோற்றி
மரகதவடிவாம் வனிதையோர்பாகா
அரவாபரண ஐந்திறட்பொருளே
திங்களுங்கங்கையுந் சிறந்தவேணியனே
எங்கனுந்தானு யிருக்கிடும்பொருளே
பஞ்சாட்சரத்துட் பதிவிருந்தவனே
கஞ்சன்சிரசைக் கபாலமாய்க்கொண்டு
நஞ்சையுண்டு நாகவில்கொண்டு
தஞ்சமென்றடியார் தமக்கருள்புரிவோய்
முப்புரமெரித்த முக்கண்ணாபோற்றி
தற்பராஅனங்கன் றன்னையுமெரித்து
மெய்யென்றிருந்த மீனவன்மனைக்காய்
வைகையடைக்க மண்ணைச்சுமந்து
அடிபட்டுபட்டே யடியவர்தமக்காய்
வடிவதுகாட்டி வாழும்வித்தகனே
கருக்குழிதோறுங் காயமெடாமல்
திருக்கடையூரா திருவருள்புரிவாய்

—*—

தேவாரம்.

திங்கள்நீர்சடையாய்போற்றி திரிபுரமெரித்தாய்போற்றி
அங்கைமான்மழுவுமேந்தும் அண்ணலேஅரனேபோற்றி
பொங்கரவணிந்தாய்போற்றி புகல்கட்கிறைவாபோற்றி
சங்கராகடவூர்வாழும் சதாசிவப்பொருளேபோற்றி



தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| அன்னைபிதாகுருதெய்வமுநீகடை | பூரிணதா-உன்றன் |
| அண்டினேனடைக்கலங்காத்தருள்வாய்கடை | பூரிணதா |
| பின்னையொருவர்துணையில்லைதிருக்கடை | பூரிணதா-எமன் |
| பிடியாமலென்தனையாதரிப்பாய்கடை | பூரிணதா |
| கொன்றைமலர்கொண்டுபூசைசெய்வேன்கடை | பூரிணதா-என்முன் |
| கூத்தன்வந்தணுகாமல்காத்தருள்வாய்கடை | பூரிணதா |
| என்றைக்குமுந்தனடிமைகொள்வாய்கடை | பூரிணதா-நான் |
| ஏற்றியடியிணைபோற்றிசெய்வேன்கடை | பூரிணதா |
| நல்லவில்வங்கொண்டுபூசைசெய்வேன்கடை | பூரிணதா-பாவி |
| நாசகாலன்வாராதருள்புரிவாய்கடை | பூரிணதா |
| முல்லைமலர்கொண்டுபூசைசெய்வேன்கடை | பூரிணதா-என்முன் |
| மிருத்யுவந்தணுகாமல்காத்தருள்வாய்கடை | பூரிணதா |
| நந்தியாவிருத்தமலரால்இக்கடை | பூரிணதா-உந்தன் |
| நளினமலர்பாதம்பூசைசெய்வேன்கடை | பூரிணதா |
| அந்திசந்திவெள்ளருக்கமலர்கடை | பூரிணதா-நிதமும் |
| ஆராய்ந்தெடுத்துனைப்பூசிப்பேன்திருக்கடை | பூரிணதா |
| செண்பகமொடுபாரிசாதமலர்கடை | பூரிணதா-வெகு |
| சீராயெடுத்துச்சேவடிபூசிப்பேன்கடை | பூரிணதா |
| பண்பானபாதிரிமலரொடுத்தூர்கடை | பூரிணதா-உந்தன் |
| பாதத்திற்பூசித்துப்பணிவேனுன்திருக்கடை | பூரிணதா |
| பொங்கரவணிந்திடும்சங்கரனேகடை | பூரிலதா-உந்தன் |
| பொற்பாதமேகதியாகத்திருக்கடை | பூரிணதா |
| செங்கமலர்கொய்துவந்துகடை | பூரிணதா-உந்தன் |
| சிந்தைமகிழ்ந்திடப்பூசிப்பேன்திருக்கடை | பூரிணதா |
| எத்தத்தலமுந்திரிந்துவந்தேன்கடை | பூரிணதா-உன்னை |
| எமனுக்குவைரியென்றெண்ணினேன்திருக்கடை | பூரிணதா |
| இந்தவிதமாய்நானென்னும்மொன்றுங்கடை | பூரிணதா-உந்தன் |
| இணையடிபோற்றிக்கொண்டிருப்பேன்திருக்கடை | பூரிணதா |
| எமன்வந்தென்னையிழுத்திடையில்கடை | பூரிணதா-வய |
| தென்னும்பதினாறென்றியம்புவாய்திருக்கடை | பூரிணதா |
| * நாமத்தையென்றுமிங்காட்டிலுள்ளோர்கடை | பூரிணதா-நாவால் |
| நவின்றிடுவாரொமன்நாடையிற்றிருக்கடை | பூரிணதா |

* இவ்விடத்தில் உந்தன்நாமத்தையென்று வருத்துப்பாடவும்.

கட்டியக்காரன்சொல்- விருத்தம்,

பூசைகட்கிசைந்தபத்ர புட்பங்கள்தேடிவந்து
ஆசையாய்க்கடையூர்வாழு மமுர்தலிங்கேசர்பாதம்
நேசமாயபூசைசெய்து நென்சிடைவணங்கவமன்
பாசமதகற்றியாளப் பரமனும்ப்ரசன்னமானார்.

வசனம்.

அகோகேளும் அதிபத்திவான்களான புண்ணியபுருஷர்களே இந்தப்பிரகாரம் பூஜார்க்கமாயிருக்கிற ஒவ்வொருபுட்பங்களையும் தேடிப்பரித்துவந்து வேதவிதிப்படி தெறிதப்பாமல் பூசித்துப்போற்றி அனுப்பிரமாணமும் சித்தம்பேதியாமல் ஈசரகிருபையினா லல்லது அந்த எமதருமமகாராசனை ஜெயிக்கமுடியாது சிவனது நாமமாகியபஞ்சாட்சரமே செயிக்கும் பிரமமென்று இடைவிடாமல் பஞ்சாட்சரத்தை சேர்ப்பித்துக்கொண்டு மனதுரிகிய மார்க்கண்டேயருடைய அதியூகமான பக்திக்குமெய்த்து அநுக்கிரகிக்கவேணுமென்று பக்தபராதீனரான அமுதலிங்கேசுவரர் ப்ரசன்மாவதுகாண்க-

மிருத்தியஞ்செயர் அவதாரம்.

---

தரு-இ-ம-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

அருந்தவமார்க்கண்டர்க் கருளுமிர்த்யஞ்செய
மவதரித்திருந்தாரே

அநுபல்லவி.

பெருந்தவமியற்றிய பிரமனுபதேசத்தால்
பெருவோமெண்ணுமீரெட்டு வயதுமிகநேசத்தால்
பொருந்தவந்திணையடி போற்றிப்பூசிக்கும்போது
புனிதன்முன்னேதவ மறையோனுய்ப்புவிமீகு(அரு)

சரணங்கள்.

நந்தியிசுராதி போறறித்துதித்திட
நாரணனருகினில் நலம்பெறவீற்றிட
தந்திமுகத்துமகன் தாளிணைபூசிக்கத்
தவமிகுமறுமுதர் நாமமறவாசிக்கத்
தகதிமிதிமிகடதிமிதரிகிடதிமி
திரிகிடதரிகிடத்திங்கணத்தோமென (அருந்தவ)



அன்புடனாதர் வீணையின்சபாட
அம்பையூர்வசியிரு வருந்திருநடமாட
இன்புறத்தும்புரு கின்னரர்குழலூத
இசைந்தகிம்புருடர்க ளிணைந்தபாடல்களோத
தென்புறப்போற்றிசெய் திமிமருந்தவத்தோர்முன
திரிகுசெந்தரிதக திமிகிடதோமமன- அருந்தவ
அடியவரைதற்காத் தருளுங்கொடிபடைத்து
அண்டமாயிரத்தெட்டுக் கதிபனெனப்புகடைத்து
கொடியபாதகங்க ளனேகஞ்செமதலமேனும்
கொண்டாடுவோருக்கருள் கொடுக்குமவனேபானும்
படியதில்மார்க்கண்டா பயமொழிப்பாயின்று
பயப்பாய்வருங்காலனைப் பாரில்வீழ்த்துவேனென்று- அருந்த

அமுர்தலிங்கர்சொல்-விருத்தம்.

பாலனேபயப்படாதே பகர்ந்தகல்வயதீரெட்டும்
ஞாலத்தோராரியத்தந்தேன் நாளெண்ணும்பதினாருகக்
காலனுக்கஞ்சவேண்டாம் காருத்தாயன்கொண்டாட
சீலமாயிலிங்கந்தோம் திருப்பதம்பூசிப்பாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய்மார்க்கண்டா நீ ஒன்றுக்கும்பயப்படவேண்டாம் உனக்குமுன்கொடுத்த பதினாறுவயதை இன்றுமுதல் என்னாளும் பதினாறாக வரந்தந்தோம் எமன்வந்தாலும் பயப்படாமலிருப்பாயாக மகாவிஷ்ணும் பிரமதேவனும் கொண்டாடியபடியாய் என்றுமழியாதபதவியாகிய கைலாயத்தில் எம்முடனென்றுங் கூடிவாழ்வாய் நீ இனிமேல் யாதொன்றுக்கும்பயப்படவேண்டாம் அருந்தவமுனியாகிய மார்க்கண்டா.

கட்டியக்காரன்-விருத்தம்.

தீர்க்கமாயிந்தவாறு திருவருட்படைத்தவேதி
மார்க்கண்டரமுர்தலிங்கர் மலரடிபோற்றுநாளில்
மூர்க்கமாய்தருமராசன் மூவுலகோர்களைக்கும்
பார்க்கவேசேனையோடு பண்புளதொலுவில்வந்தான்.

வசனம்.

அகோகேளுங்கள் பக்தசிரோமணிகளே இந்தப்பிரகாரமாக மிருத்யஞ்செயரான அமுர்தலிங்கேசுவரராலே எமபயநிவர்த்தரான மார்க்கண்டேயமகாமுனியானவர் ஈசுவரருடைய திருவடித்தாமரைகளைப் பூசித்துக்கொண்டிருக்கும் நாளில் ஒருநாள் எமதருமராசாவானவர் தற்செய

லாய்ப் பூமியந்தர சொர்க்கமென்கிற இம்மூன்றுலோகத்திலும் உள்ளசி ருஷ்டி திதி சம்மாரம் இதுகளினுடைய [illegible] குறைக்குறைகளைப் பார்க்கவே ண்டுமென்று தன்னுடைய சேனையின் [illegible] சூழ்ந்துவர அடப்பாத் துடனே எமதருமராசன் கொலுச்சபைக்கு வருகிற விதங்காணீர்,

தரு-இம்-சவுராஷ்டிரராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்

குடிபருகுந்துமேவுந்தன் — சொல்லரியசேனைகுழ
நாரியர்நடனஞ்செய்ய — நன்மையாய்க்கொலுவில்வந்தான்
முத்தணிந்தமாலைமார்பன் — முத்திரைகாரவண்ணமெய்யன்
குற்றமில்லாதர்மராசன் — கொலுச்சபைதனக்குவந்தான்
இனமணிந்தவத்துமிக்க — சேனைமந்திரிமார்தன்
கனமுடன்கொடிவிலேறி — கருணைசேர்கொலுவில்வந்தான்
கைதனிற்பாசசூலமும் — [illegible]புலக்கையுடன்
வெய்யவன்குமாரனை — [illegible]கொலுவில்வந்தான்

எமதர்மராசன்சொல்-விருத்தம்.

நல்லதர்மங்களாகிய [illegible]வாசநீ பார்க்க
வல்லகட்டியனேகேளாய் வாகுளந்துசெங்கோல்
செல்லவேசெய்யுந்தூதர் சித்திரபுத்திரனையெல்லாம்
தொல்லையிலழைத்துவந்தென் உடையில்[illegible]செய்வாயே.

வசனம்,

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா தேவரீவருவாமல் இராச் சியபரிபாலனஞ்செய்துவருகிற செங்கோன்முறை தவறாமல் நடத்திக் கொண்டுவருகிற [illegible] நாற்பத்தெட் டுதூதுவரையும் அழைத்துவர சித்திரபுத்திரரையும் அழைத்துவா பிள்ளாய் கட்டியக்காரா,

கட்டியக்காரன் வசனம்.

அப்படியேயாகட்டும் ஸ்வாமி.

கட்டியக்காரன்-விருத்தம்.

எண்டிசைதனிலுள்ள [illegible]
கண்டித்து[illegible]



தெண்டிப்போதனைகொண்டித்தூத் திருவருட்படைத்தோர்தம்மை யண்டியாந்தூதர்ராமுமந்தசன்கொலுவில்வந்தார்

தரு-இம்-புன்னாகவராளி-அடதாளசாப்பு

பல்லவி,

தூதர்வந்தாரே-எம-தூதர்வந்தாரே

அநுபல்லவி,

பாதகஞ்செய்வோரையென்றும் — பாழ்நரகிலேயிருத்தி
ரோதனஞ்செய்திட்டவர்க்குத்துன்புன்னவிளைப்பேமென்று — தூத

சரணங்கள்

கண்ணிவலைகையில்கொண்டு — தூதகர்தம்மேல்விண்சிறி
எண்ணிறந்தகாலமவர்க் — கெல்லையில்லாத்தொல்லைசெய்யுந் — தூத
விருப்புடன்தர்மங்கள்செய்து — வெண்ணிடாதஅத்தக்கரை
இருப்புலக்கையாலடித்து — இழிநரகிற்றள்ளுவோமென்று — தூதர்
காலபாசந்தன்னையேவி — காற்சிதறவடித்து
குலபாதகிநால்குத்தித் — தூக்கிவந்தடிப்போமென்று — தூதர்

தூதுவர்-வசனம்

அகோசரணஞ் சரணமயாசுவாமி தூதுவர்கள் வந்தோம் எங்களை அழைத்திராயழைப்பித்தகாரியம் திருவுளமருளவேணுமையா தர்மரா சனே,

தருமராஜன்விருத்தம்.

வலதுக்கினியதூதர் இட்சணந்தன்னிலேகிப்
[illegible]புண்ணியமிரண்டும் பார்க்குடனேகூறிப்போதும்
[illegible]சேர்சித்திரபுத்திரனையழைத்துக்கொண்டு
தேவர்களபுகழுமெந்தன் திருச்சபைதனக்குவாரீர்

வசனம்,

அகோவாரும்பிள்ளாய் தூதர்களே நம்முடைய அரசாட்சிக்குள் ளாகிய பூமியந்திரபாதாள [illegible]லோகத்திலுள்ள சகலஜீவாத்மக் களுடைய கணக்குகளைப்பார்க்கவேண்டியிருப்பதால் நம்முடைய [illegible] சித்திரபுத்திரனாகிய [illegible] யழைத்துவாரும் கள் தூதர்களே,

தூதுவர்-வசனம்.

அப்படியே அழைப்பித்து வருகிறோமையா தருமராசனே

தூதுவர்விருத்தம்.

ஐயனேயுயிர்கட்கெல்லாம் ஆயுள்களமைத்தநோதும்
செய்யகற்கணக்கரான சித்ரபுத்திரரேகேளீர்
வையிலேவருலமேந்தும் காலனுரும்மையிப்போ
ஐயரச்சபைக்கழைக்கத் தூதினிலாக்ஞையிட்டார்.

வசனம்,

அகோவாருமையா சித்திரபுத்திரரே பூமியந்திர பாதாளம் இந்த மூன்றுலோகத்திலுள்ள ஜீவராசிகளின் ஆயுள்பிரமாணக் கணக்குகளுடைய தர்ம்மராசாவானவர் கொலுச்சபைக்கு அழைத்துக்கொண்டு வரச்சொன்னாரையா சுவாமி,

சித்திரபுத்திரர்வசனம்.

அப்படியேவருகிறேம்பிள்ளாய்,

சித்ரபுத்ரன்வரும்-தரு: இ-ம்-பைரவி-ஆதிதாளம்,

கண்ணிகள்

கட்டியசுருளோலையும் நல்லகணக்குடனெழுத்தாணி கைப்பிடிக்கு
திட்டவட்டங்கள்சொல்லும் கணக்கும் சித்திரனும்தோணினனே
உச்சிக்கொண்டைமுடித்து மெத்த உரசெறியே நடைநடந்து
எச்சரிக்கைசொல்லும் கணக்கனும் இமயசபையில்வந்து தோணினனே
காட்டுக்கணக்குகொண்டு நல்ல- எமனுடகணக்குங்கூடக் கொண்டு
ஓட்டுக்கணக்குக்கொண்டு விளங்கிய சித்திர புத்திரனுந் தோணினனே
பூமியிலுள்ளவுயிர்கட்-கெல்லாம் பொருந்திய கணக்கும் தானெழுதுநே
மகமாகவேதான் சித்திரபுத்திரன சபைதனில் வந்துதோணினனகம சுந்திரமாமுனிவனல்ல மார்க்கண்டேயனுக்குவந்தசொல் லத்திரமாகவேதான் கணக்கினில்- சுருக்கான சித்திர புத்திரன் தோணினனே,

சித்திரபுத்திரன்-வசனம்,

அகோசரணஞ்சரணமையா சுவாமி தருமராசனே சித்திரபுத்திரன் வந்தானையா சுவாமி,



தருமராசன்சொல்விருத்தம்.

மித்திரபேதமாற்றி மேவுமெவ்வுலகிலுள்ள
வெத்திறவுயிர்களுக்கும் விதிகளாலந்துரைக்குநல்ல
சித்திரபுத்திராகேளாய் ஜீவராசிகள்கணக்கை
பத்திரமாயாராய்ந்து பரிவுடனுரைசெய்வாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் சித்திரபுத்திரா ஒவ்வொரு ஜீவராசிகளும் ஒன்றோடொன்று அன்னியோன்யமாய் விவகரிக்கப் படுகின்ற எந்தெந்த லோகத்திலுமுள்ள எவ்வெவ்வுயிர்களினுடைய ஆயுள்பிரமாணங்களின்கணக்குவழக்குகளை ஆராய்ந்தெடுத்து கணக்குமுறை வழுவாமல் ஒரு க்ஷணமாத்திரமும் முன்பின்னில்லாமல் அனுபவிரமாணமாவது சுவர்க்க நரகங்குறையாமல் எடுத்தெழுதிச்சொல்லி வாரும்பிள்ளாய் சித்திரபுத்திரா.

சித்திரபுத்திரன்சொல்-விருத்தம்.

வானவருலகிலுள்ள வண்மையோர்கணக்குப்பார்த்தேன்
கோனவாருறியொன்றில்லை குலவியவந்தரத்தோர்க்
கானகற்கணக்குப்பார்க்கக் கணக்குவித்யாசமில்லை
மானவர்கணக்கைக்கேட்டால் மகிழ்ச்சியாயுரைசெய்வேனே.

வசனம்.

அகோகேளும் தர்மராசனே தேவலோகத்தார் கணக்கும் அந்தர பாதாளத்தார்கணக்கும் யாதொரு கலமிசமில்லை பூலோகத்தார் கணக்குக்கேட்டால் பெருமையுடன் சொல்லிவருகிறேனையா சுவாமி.

தருமராசன்-விருத்தம்.

தெத்தவுதுன்னமான திருகணக்காய்ந்துரைக்கும்
சித்திரபுத்திராகேளாய் சிரித்துமுப்புரமெரித்தோனை
பத்தனாமிருகண்டேயன் பரிவுள்ளதவத்துதித்த
புத்திரமார்க்கண்டன்றன் புதுக்கணக்கெடுத்துரைப்பாய்.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அதினுடைய கணக்குகளியல்பை யாய்ந்தெடுத்துரைக்கும் சித்திரபுத்திரனே முன்னொருவில் முப்புரமெரித்த சிவனுடைய திருவருள்பெற்ற மிருகண்டமகாமுனிவருக்கு தவத்தில்வந்த மார்க்கண்டனுடைய ஆயுசுவிபரக் கணக்குகளை யெடுத்துச்சொல்லும்பிள்ளாய்,

சித்திராபுத்திரன்சொல்-விருத்தம்.

காலனேயுயிர்கட்கெல்லாம் கர்த்தனே சொல்லக்கேளீர்
ஆலமுண்டோன்தந்த அழகன்மார்க்கண்டனுக்கு
சீலமாய்ப்பதினெட்டுஞ் சென்றதின்றுடனேயாதல்
கோலமாய்த்தூதர்காக்க நீ குறிப்புவிட்டிடுவீரே.

வசனம்.

அகோ வாரும் தருமராசனே ஸ்ரீபரமசிவனுடைய பக்தியிலே சிறந்தவனான மார்க்கண்டமகா முனிவனுடைய வயதுபதினாறும் இன்றுடனே கணக்கு முடிந்துவிட்டதாகையால் அதிசீக்கிரமாய் தூதுவர்க்காக்கியாபித்து அனுப்பி யாதொருபாயமுமில்லாதவனைப்பிடிப்பீரானால் மகாசந்தோஷமாயழைத்துக்கொண்டு வரச்சொல்லுமையா தருமராசனே.

எமன்சொல் - விருத்தம்.

எந்தனற்றூதர்காள் நீரின்றைக்கிடுக்கொருவிக்கேனோ
செந்தலைப்பூதாவாடா செங்கண்ணா நீலாவாடா
இந்தப்பாசந்தனைக்கொண்டோடியே மார்க்கண்டன்றன்
சுந்தரவுயிர்கவர்ந்து தருக்கினிலாகுவீரே.

வசனம்.

அகோ வாரும் தூதுவர்களிலே சிறந்த செந்தலைப்பூதா செங்கண்ணா நீலா நீங்கள்போய் இந்த என்னுடைய அதிவிசித்திரமான பாசத்தினாலே மார்க்கண்டனுயிரை வாங்கிக்கொண்டு வாருங்கள் தூதுவர்களே.

தூதுவர்வசனம்- அப்படியே மகாராசகிருபையையாசுவாமி.

கட்டியக்காரன்சொல் - விருத்தம்.

அந்தகனுரைக்குக்கொண்டு அவன்விடுங்காலதூதர்
சிந்தைகோபமோகத்தைவிட்டெழுந்தலையுற்று
சுந்தரமார்சடையோனைப்போற்றழலெழுமுனிமார்க்கண்டன்
சந்தப்பூசைசெய்திருக்க யமசெயாச்சனைக்குவந்தார்.

வசனம்.

இப்பிரகாரமாக நாயகஞ்சொன்னவுடனே தருமராசனது தூதுவர்கள் யமலோகத்தைவிட்டெழுந்து மகாசந்தோஷத்தோடு வாசனைபொருந்திய மலர்களணிந்த சடாபாரத்தையுடைய பரமசிவத்தை பூசித்துக்கொண்டிருக்கிற இருக்கண்டுபூவென்று அழைக்கும் மிருத்யுஞ்செயபூதத்தை காட்டிவருகிறவிதமாவது.



தரு- இராகம் - சங்கராபரணம்.

கண்ணிகள்

பாசக்கயிறுகொண்டு-செங்கையில் பாங்குளவன்தடிதான்பிடித்து
ரோஷத்துக்கஞ்சாத-கால தூதர்கள்வந்துதோணினாரே
வெட்டிப்பறித்திடுவோம்-காட்டில் வேடனாட்போலேசான்றிரிவோம்
கட்டிக்கொண்டேகுவோ-மென்றே காலதூதுவர்தோணினாரே
சிங்கப்பற்கள்கக்குத்து-மீசையைத் திருகிமுறுக்கியோசனையெடுத்து
பொங்கவெனச்சீறி- தூதர்கள் புனிதன்முன்வந்துதோணினாரே
எப்படிப்பிடிப்போமென்று- கோலொட்டிடியினைப்போலேசூழ்ந்துகொண்டு
கைப்பிடியாய்ப்பிடிக்க-வந்த காலதூதருமங்குதோணினாரே

கட்டியக்காரன்-விருத்தம்.

தூதர்கள்வருகும்போது ஐயனைக்கண்டுபூவாரும்
மாதவனைவேதமார்க்கண்டன்பக்தியோடு
தீதகல்நதிகளாடிச் சிறந்தபூங்காவிற்புக்கு
நாதனைப்பூசைசெய்ய நன்மலர்கொய்திட்டாரே.

தரு-இ. முகாரி | ஆதிதாளம்.

கண்ணிகள்

கொன்றைபறுகுநொச்சி கொய்வேனே - அரகரசம்போ
கொன்றைசூடியோனைப்பூசைசெய்வேன்
செண்பகமல்லிகைவில்வங்கள் கொய்வேனே - அரகரசம்போ
சிறந்தமிருத்யுஞ்செயனைப்பூசைசெய்வேன்
புன்னைவிருட்சிபாரிசாதம் கொய்வேனே - அரகரசம்போ
பிஞ்ஞகனையர்ச்சனைசெய்வேன்
வன்னியறுகுதுளசி கொய்வேனே - அரகரசம்போ
வாமதேவனையர்ச்சனைசெய்வேன்
நந்திவிருட்சமலர்களைக் கொய்வேனே - அரகரசம்போ
நாரிபாகனையர்ச்சனைசெய்வேன்
வில்லையறுகிகஸ்தூரி கொய்வேனே - அரகரசம்போ
மிருத்யுஞ்செயனையர்ச்சனைசெய்வேன்
மல்லிகைசெண்பகமலர் கொய்வேனே - அரகரசம்போ
வல்வினைதீர்த்தானைப்பூசைசெய்வேன்

அல்லிமலர்செங்கழுநீர் கொய்வேனே - அரகரசம்போ
அந்திவண்ணனிறைவனைப்பூசைசெய்வேன்
நல்லதவனமருவும் கொய்வேனே - அரகரசம்போ
நம்சிவாகனைப்பூசைசெய்வேன்
முல்லைமந்தாமலர்கள் கொய்வேனே - அரகரசம்போ
முக்கண்ணனைப்பூசைசெய்வேன்
செல்லிமனோரஞ்சிதங்கள் கொய்வேனே - அரகரசம்போ
சிராயுதன்பாதத்திற்பூசைசெய்வேன்.

கட்டியக்காரன்சொல் - விருத்தம்.

இன்னெறியுடன் பூசித்தங்கிருக்கின்றமார்க்கண்டேயர்
தன்னைநிதனையறிக்க சகுமனுர்தூதர்தாமும்
நன்னெறியுள்மார்க்கண்டா நமனுனையழைத்தாரென்று
சொன்னெறிதனைபயிந்து சேருவார்கூறுவாரே.

வசனம்.

இந்தப்பிரகாரமாய் பூசித்துக்கொண்டு இருக்கிற மார்க்கண்டேயருடைய நிலமையறிந்து உன்னை இயமன் அழைத்தார் வாருமென்று காலதூதுவரைக்கண்டு மிகவு பயந்து அருட்டிக்கொண்டு நடுநடுங்கி இடுக்கித்து தம்மிலேதாமே தேறிக்கொண்டு தேகாபிமானமென்கிற பாசனத்திலுலே கட்டுண்டு சொல்லுவதுகாண்க.

மார்க்கண்டேயர்சொல் - விருத்தம்.

அந்தகன்றூதாவாடா அரனவனுலகங்கிங்குண்டு
மந்தரகிரிமல்மொய்த்த மேருமென்றசைக்கலரமோ
உந்தனுக்குஞ்சேனுந்த னுயிர்தனையிழக்கப்போருய்
வந்தெனைக்கிட்டவேண்டாம் வனமியேமோடேகுவாயே.

வசனம்.

அடாவடா காலதூதர்களே மிருத்யுஞ்சயரான சுவாமியுடைய கடலிலேகொன்ற இருப்பதுப்பாத்திரவானுயிருக்கிற என்னை அண்டிடுதற்கு உங்களால் முடியாது முன்னுளிலே அந்நாரணத்திரூல் முப்பத்துமுக்கோடி தேவதைகளும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கூடிக்கொண்டு ஆலகாலவிஷத்தை புண்ணியர் பெருமான் அதை விழுங்கி உற்



61

ஆனையானது அண்டகடாகமெல்லாம் சுவலிக்கத்தொடங்கியதுண்டு ஸ்ரீ பரமேஸ்வரனுனவர் விருட்டேசுவரவதாரம் பண்ணி அந்தயானையின்தோலுரித்துப்போர்த்துக் கொள்ளவில்லையா அப்பேர்ப்பட்ட மகாதேவருடைய இருடையிருக்கும்போது எனக்குயாதொரு குறைவுமில்லை மந்திரகிரிமலையின்பேரிலே மொய்த்தகொசுக்களானது அந்தமலையை வேருடனே யசைத்துப் பிடுங்கக்கூடுமா அதுபோல உங்களாலே என்னைப்பிடித்துக்கொண்டுபோகக்கூடுமா ஆயிரஞ்சொன்னாலும் உங்களுக்கஞ்சமாட்டேன் அதிதுரிதமாய் எமலோகத்துக்குப்போய்விடுங்கள் தூதர்களே.

தூதர்கள்சொல் - விருத்தம்.

வலியதுபேசவேண்டாம் மார்க்கண்ட முனியேகேளாய்
புலியதுபெரிதேவேடன் பொருதுவிற்பெரிதோபாராய்
எலியருள்திர்த்தர்ப்பூனை எக்குமென்றெண்ணவேண்டாம்
நலியதுயிரைக்கொண்டோடி நமன்முன்னேவிடுகுவோமே.

(வசனம்) அடாவடா மார்க்கண்டா புலியானதுபெரிதா வேடன்கைவில்பெரிதா எலி எதிர்த்ததால் பூனை எக்கமடையுமா உன்னுடைய சொர்ப்பனத்திலும் அந்தசிவனுக்கு பயப்படுவோமென்று நினைக்காதே உன்னுடைய உயிரை நசுக்கிப்பிடுங்கி நக்குருங்காடி தாளிசெய்து எங்களுடைய பாயிறுக்குள்ளே இடுக்கிக்கொண்டு போகும்படியானபலமும் எங்களுக்குண்டடா மார்க்கண்டா.

கட்டியக்காரன்சொல் - விருத்தம்

இத்திறமியம்பத்தூதர் ஏங்கியே முனிமார்க்கண்டன்
உத்திரமுரைத்திடாமல் உள்ளத்திலயர்ச்சிகொண்டு
மித்திரபேதமாறலும் மிருத்யுஞ்சேயயிந்த
சித்திரமேதோவென்று சிறப்புடனுருகுவானே

தரு - இ - ம - எதுகுலகாம்போதி - அடதாளம்.

பல்லவி.

தேவாதிதேவனே யென்னசெய்வேன் - இந்த
இவிலோகமென்னமா உய்வேன்

அநுபல்லவி.

தேவாதிதேவனேநான் செய்யும்பூசையைநீற்று
சீவாவென்றழைப்போர்தன் தெரிசனக்குப்படுவேனே (தேவா)

சரணங்கள்.

பார்க்கப்பயங்கர — மாகுதே-மிகப்பொல்லாய்
பாவிகட்கஞ்சிமனம் — வேகுதே
மூர்க்கர்களுக்கிறல் — தாவுதே-பிருதயஞ்செயா
முனைகளுலேபூதகணங் — கூவுதே
கர்ப்பாயுனக்கபயம் — ஏர்ப்பாய்கடைபூரானே
கங்காதரனேயினக் — கிங்கருந்துணைநீயே (தேவா)

கோடைவிடிபோற்சத்தம் — போடுறார்-எட்டுத்திக்கும்
கூட்டிபாசத்தாற்கட்ட — நாடுறார்
வாடைப்பொடிகளென்மேல் — வீசுறார்-வினைகொண்ணு
வல்வடிவ்பூக்குகள் — பேசுறார்
பிணைபிடித்தாற்போலே — பிதற்றிப்பிதற்றியோசி
பிடிக்கவரும்தூதரை — யடித்தபாதகொணுதோ (தேவா)

அன்னைபிதாகுருவும் — நீயே-உயிர்துணை
வாய்பாதரிப்போனும் — நீயே
பின்னைத்துணையேதுமில்லை — ஐயா-காலதூதர்கள்
பேய்போலத்தாவிவாரா — ரையா
என்னையமையக்காப்பு — நிசாவுனதுபாரம்
இணையடிபூசித்தேன் — எனக்குன்பக்கமேயருள் (தேவா)

எமதூதர்சொல்-விருத்தம்.

பிட்டுக்குமண்சுமந்து பிரம்பினாலடியுங்கொண்டு
பட்டதோர்வழகுகொண்டு பாணனுக்காகவிற்று
இட்டமாய்வயிர்வளர்த்த திரியம்பகன்றனைச்சேவித்தால்
கட்டளைத்தப்புமென்றுன் கனவிலும்நினைத்திடாயே

(வசனம்) அடாவடாமார்க்கண்டா மதுரைப்பட்டணத்திலே செம்மனசெல்வி யென்கிற ஒருகிட்டுவாணிசெசிக்காத மண்ணைச் சுமக்கிறேனென்று மதுயாமிசெய்து தத்துப்பித்தாய் திரிந்ததைக்கண்ட அரிமர்த்தனபாண்டியமகாராசனாலே பிரம்படிபட்டும் ஒருவித்வானுக்காக காண்தோறும் விறகுசுமந்து வயிர்வளர்த்த அந்தசிவனைசேவித்துக்கொண்டு நீயிதிலே எங்கள் தருமராசனுடைய ஆக்ஞைதப்பிப்போமென்றும் பதினாறுவயதிற்குமேல் பூமியிலிருக்கலாமென்றும் உன்னுடைய சொற்பனத்திற்கூட நினைத்துக்கொள்ளவேண்டாமடா மார்க்கண்டா.



மார்க்கண்டன்சொல்-விருத்தம்.

ஊர்தனுக்காதேபோங்கள் மறலியென்றொருவனுண்டோ
அந்தகன்தூதனென்று வரனடியாளைத்தீண்டார்
நிந்தைச்சொல்லோர்க்குவேண்டாம் நெருப்பினிலிவெய்க்காது
பந்தயங்கூறவேண்டாம் பரிவுடனடக்கிடவே

(வசனம்) அடாவடா தூதர்களே எமனென்பவனும்ஒருவனுண்டோ அப்படியுண்டானாலும் அவனிடத்திலுசுவானுடைய அடியார்களுக்குப்பயமேது சிவனடியாரிடத்திலே அந்தகனுடையாச்சியபாரம் நடக்கமாட்டாது வீணா அவதூறுக்குஉள்ளாகவேண்டாம் எங்கேயாவது நெருப்பிலிடமாய்க்குமா பந்தயங்கூறவேண்டாம் மரியாதையோடு இவ்விடத்தைவிட்டுவிடவும்பின்னாய் எமதூதர்களே.

எமதூதர்சொல்-விருத்தம்.

இட்டதோராக்ஞையைக்கொண் டெமதூதர்களனைவரும்
விட்டகன்றிடுவதுண்டோ வெறிகொண்டுபிதற்றுகிறாய்
அட்டனைக்குண்டுகட்டாய் தூரினிற்கட்டிக்கொண்டு
பொட்டெனப்போனோய்மாரீர் பொறபுள தூதரோகே

(வசனம்) அடாவடா தூதர்களே நம்முடைய எமதர்மராசனுடைய ஆக்ஞாபனத்தினாலேயாப் பூலோகத்துக்குவந்து ஒருவனுடையபோகிறு க்கிற இவனைவிட்டுவிட்டுப்போகத்தகுமோ மகோபோகேயிருக்கிற ஒவ்வொரு உயிரையுங்கவர்ந்துகொண்டுபோன காலனோ இவனுடைய தகுடியசிலனைப்பிடிவனும்பயப்போய்விடுத்து பிதற்றுகிறான் இந்தவஸ்டனை ஒரேகுண்டுகட்டாய் அதிசீக்கிரத்திலேகட்டிக்கொண்டு அதிதுரிதமாய் ஓடிப்போவோம் வாருங்கள் தூதர்களே நானுமடிமுன் முழுந்துக்கொள்ளுங்க ளென்னபார்களே.

மார்க்கண்டன்சொல்-தரு-இ-ம்-ராகம். நீலாம்பரி
பல்லவி.

அமூர்தலிங்கேசா — அருணேசா
அடியேனைக்காத்தருளென்னை — சேகரா

அநுபல்லவி.

எமவாதைக்கேயக் தேம்பியென்னுள்ளம்நொந்தேன்
எந்தனைக்காட்டிக்கொடா அந்தனைப்பணிந்தேன் (அபி)

சரணங்கள்.

ஆலகாலம்போலே அந்தகன் வருவானென்
றம்புஜமலர்கொண்டுன் னடிபோற்றிப்பூசித்தேன்
கோலாகலமாகச சூலபாசங்கொண்டு
குத்திவெட்டுவே னென்றுயர்வதைக்கண்டு (அபி)

அண்டருக்கிடர்தரும் ஆலகாலமுண்டாயென்
றிறைவனேயுனக்கடி யவனுய்வந்தண்டினேன்
தொண்டருக்கருள்தரும் அய்யனடையூரானே
தோகஞ்செய்யுமெம தூதர்களையோட்டுவாய் (அபி)

அடியவர்க்கருளுவோ னமிர்தமிர்தேசனென்
றண்டபிண்டங்களும் அறைந்ததறிந்துநான்
நெடியவுதாரம்நீக்கி நீயேகதியென்றெந்தன்
னெஞ்சமலர்கொண்டு நித்தமும்பூசித்தேன் (அபி)

தூதர்சொல்-வஞ்சிவிருத்தம்.

கொடிகொடித்திடுமுன்-பொடிப்பொடியாக
இடியிடித்திடுவோம்-துடிதுடிப்பானே.

(வசனம்) - அகோவாருங்கள் அண்ணமார்களே. கொடிகொடிக்குமுன்னே நாம் இடிக்கிறஇடியினாலே பொடிபொடித்துவிடுவோம் அவனும்துடிதுடித்துவிடுவான் நாலுபுறமுஞ்சூழ்ந்துவாருங்களண்ணமார்களே.....

தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

பல்லவி.

சுத்திவாருங்களண்ண மார்களே இவனையிப்போ
சாதித்துப்பிடிப்போம் தம்பிமார்களே



அநுபல்லவி.

குத்திக்குடலைப்பிடுங்கி கொத்திபொருகையிலேந்தி
நத்தியெமலோகம்போவோம்நாடு மனோவேகமாக (சுத்தி)

சரணங்கள்.

நீளமாங்கயிறெடுத்து நெற்றிக்குநேராயடித்து
வாளையுருவியெறிந்து வலமிடமாகப்பிரிந்து (சுத்தி)

நாலுமுகமும்வளைந்து கட்டாடுவேயுனைந்து
வேலும்சூலும்விட்டெறிந்து வேகமுடனேபுரிந்து (சுத்தி)

என்னசெய்தாலுமில்லை இவன்தனைவிட்டால்கல்லை
சின்னவன்மேற்குற்றமில்லை செப்பினாலும்பெருந்தொல்லை (சுத்தி)

தூதர்சொல்-விருத்தம்.

எப்படியண்ணமாரே இவனைநம்மாற்பிடிக்க
இப்படிதனிலேயாது இவன்செயும்பூசையாலே
கற்பனைதனைக்கடந்தான் காலனும்வெல்லானையோ
சொற்படிகேட்பீர்மெத்தச் சுருக்கினில்நடப்போம்வாரீர்

(வசனம்) அகோவாரும் அண்ணமார்களே எந்தவிதத்திலேயும்இந்தபூமண்டலத்திலே இவன்செய்திருக்கிற சிவபூசைமகிமையான உருத்திராக்கினியென்னும் அந்தசுவாலையுடைய நெற்றிக்கண்ணெருப்பின்சுவாலையானது நம்மைத்தகிக்கின்றது ஆனபடியினாலே அந்தமிருகண்டேயமுனிவர்செய்த தவத்துக்காகக்கொடுத்த பதினாறுவயதுநிறைந்தபோதிலும் இந்தப்பூமியினிடத்திலே இப்போ மார்க்கண்டனென்கிறவன் செய்தபூசைக்காகவேண்டியவரமும் என்றும்பதினாறாகக் கொடுத்திருக்கவேண்டும் ஆகையால் இவனைவெல்வது மகாஅரிதுநாம்எமலோகத்திற்குப்போவோம் வாருங்கள் அண்ணமார்களே.

எமதருமராசனுக்குத்தூதர்சொல்-விருத்தம்.

எங்களால்முடியாதையா எமதர்மராசாகேளீர்
திங்கள்வெண்சடையோன்பாதந் தினமும்பூசைசெய்வான்
பங்கமாய்ப்பிடித்துக்கொள்ளப் பாசத்தையெறிந்தோம்நாங்கள்
சங்கரன்றனைத்தழுவிச் சகிக்கொணாவினைசெய்தானே

(வசனம்) அகோ சரணஞ்சரணமைய்யா சுவாமி எமதர்மராசனே அந்த மார்க்கண்டனைப்பிடித்து வருகிறதற்கு எங்களால்முடியாது அவன்செய்கிற நித்தியநேமநிஷ்டைக்குப் பூசாவிதிகளுக்கும் மெய்த்து சந்திரசேகரானவர் எங்களைத் தடிக்கத்தொடங்கினர் ஆனபடியினாலே நீர்போய் அழைத்தாலும் அவன்வரமாட்டான் நீரும் உம்முடைய தேகத்தோடிருக்கும் பிணருவதுமகா அரிதாகும் எமதர்மராசனே

எமதர்மராசனுக்கும் தூதர்களுக்கும்-தர்க்கம்.

தரு-இ-ம்-சாம்பேரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| பிழைப்பதருமையென்றபுகலவந்தீர்களோ | தூதர்களே-தேவர் |
| யழித்துப்பகடிசெய்துபங்கங்கொள்வாரோநம்மைத் | தூதர்களே |
| யாரிலுள்ளோர்நம்மைப்பழிப்பதேதுசொல்வீர் | தர்மதேவா-அவனை |
| சேரப்போவோமென்றால் செந்தணல்வீசுதே | தர்மதேவா |
| செந்தணலுக்கருண்டுதேறிப்பட்டுவந்தீர்கள் | தூதர்களே-இனி |
| எந்தவிதமெந்தனைவல்செய்யப்போறீர் | தூதர்களே |
| யாவலொன்றதன்எதிரிற்போனாலோ | தர்மதேவா-இப்போ |
| காவதுநிச்சயம்தப்பாதவன்சாபம் | தர்மதேவா |
| தப்பாதென்றோதன்முன்தயவாய்சொல்லவந்தீர்கள் | தூதர்களே - அந்த |
| அப்பணிச்சடையோனைப்பூசித்தால்மகனென்ன | தூதர்களே |
| எமக்கென்னவென்றுவிலவேண்டாமென்றும் | தர்மதேவா-சிவன் |
| நமக்குமவரடியர்தாமேபெரியோராம் | தர்மதேவா |
| இவன்செபித்தமந்திரம்செய்வதென்னநமைத் | தூதர்களே- அந்த |
| தனையவனைப்பிடிக்கவலுவில்லையோவெனக்குத் | தூதர்களே |
| பிடித்துவாரேனென்றபெருமலையநீக்கிவிடும் | தர்மதேவா-நெஞ்சின் |
| இடித்தாலும்நெஞ்சண்டயிசன்னவிடான்கண்டீர் | தர்மதேவா |
| காட்டிக்கொடாவிட்டால்கட்டனைதவறுமோ | தூதர்களே-அட்டா |
| மேட்டியாகியும்நீதேபிடித்துவாரேனென்றும் | தூதர்களே |



எமதர்ம்மராஜன் தூதர்களுக்குச்சொல்-விருத்தம்.

பங்கயமங்கமாயன் படிகனையாக்கயிசன்
அங்கவன்றவத்துக்கியந்த வாயிசும்பதினாறுசகு
அங்கிசித்துவெதந்தன் சக்கியைக்கரங்கியீன்று
சங்கரனடியான்முன்னே சலுதியிற்செல்வோம்வாரீர்

(வசனம்) அகோவாருங்கள் தூதர்களே பிர்மதேவர் படைப்பிக்க கர்த்தா ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் அவைகளைக்காக்ககர்த்தா பரமசிவனானவர் எவர்களுக்கு வரங்கொடுக்ககர்த்தா நான் சகலத்தையும் அந்தந்த கருமமுடிந்தவரும் காலத்தில் அந்தந்தகாலமறிந்து அழிக்கக்கர்த்தா நானல்லாமல் இந்த பூமி அந்திரசுவர்க்க மத்தியபாதாள லோகங்களிலும்வேறேயொருவனும் கிடைக்காது அந்த சிவனேநினைத்தபேருக்கெல்லாம் வரங்கொடுக்கப்பட்டவன் அற்பசந்தோஷி சோத்திரப்பிரியன் ஆனபடியினாலே தன்னைத்தோத்திரம்பண்ணப்பட்டவர்களுக்கெல்லாம் சிவபதவியளித்துக்கொண்டிருந்தால் நம்முடையலோகம் பாழாய்ப்போய்விடுமே இப்போநான்போய் அந்தமார்க்கண்டனைவளைத்துப் பிடித்துக்கொண்டுவந்துசேருகிறேன் என்னுடைய சாமர்த்தியத்தைப்பாருங்கள்தூதர்களே.

கட்டியக்காரன்சொல் விருத்தம்.

இடியதுயிடித்தாற்போலே எருமையின்கடாவிலேறி
கொடியதோர்பாசசூலங் கோலமாயக்கையிலேந்தி
வடிவுகொணடேவருமஞ்ச மார்க்கண்டன்றன்னைக்கிட்ட
கடியதோர்வெருட்கியோங்கக் காலனுந்தோணினானே

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| அட்டதிக்கதிரவேகொக்கரித்திட்டகாலி அத்தகன்றனை | மூடனே |
| கட்டியேபோவேனென்றுமார்க்கண்டன் காலனுந்தோணி | முன்னே-பொல்லானே |
| வீரகண்டாமணி மேதினியோரெவருமஞ்சி | குமுறிடவே-சத்தம் யோடவே |
| பாரிற்றண்டாயுத பரிவுடனேவந்து | சூலமோ-டேமனும் தோணினானே |

ஆதர்கள் புடைசூழக் கோபத்துடனெழுந்து
  துள்ளுங்கிடாவிலேறி
நாதனைப் பூசைசெய்யும் மார்க்கண்டனைப்பிடிக்க
  நமனுருந்தோணினனே
அண்டரண்டாதிகளுங் கண்டொடுங்கிடக்கோ
  பாக்கினிக்கணைஞ்சிதறத்
தண்டரிகமாகவிர்த் தாளிசெய்வேனென்றிதோ
  சண்டனுந்தோணினனே

---

கட்டியக்காரன்சொல் - விருத்தம்.

அண்டபிண்டங்களும் அக்கினிப்பொறிபறக்க
மண்டியகோபக்கண்ணில் வடவைத்தீயெனச்சொலிக்கக்
கண்டிடின்விடுவதில்லைக் கைப்பிடியாய்ப்பிடித்துக்
கொண்டிடாதேகேனென்று கூத்தனும்வருகின்றனே

(வசனம்) இந்தப்பிரகாரமாய்வந்த எமதருமராசனானவன் அண்டபிண்டங்களிலும் அக்கினிப்பொறிபறக்கக், கோபங்கொண்டு இரண்டுகண்களிலும் வடவாக்கினிப்போல அக்கினிச்சுவாலைபுண்டாகி சொலிக்க ஆவேசத்துடனேவந்து அந்தமார்க்கண்டனை விடுவதில்லை கைப்பிடியாகப்பிடித்துக்கொண்டு போகாமல் எமலோகத்துக்குப்போகேனென்று சொல்லிக்கொண்டுவருகிற ஆர்ப்பாட்டத்தைக்கண்ட மார்க்கண்டன் சொல்லுகிற விதங்காண்க.

கட்டியக்காரன்சொல் விருத்தம்.

அந்தகன்வரவைக்கண்ட அானடிதொழுமார்க்கண்டன்
சிந்தனைநருகிமெத்த சிவசிவாவென்றுரைத்து
நந்திவாகனத்திலேறும் நாதனடியில்விழுந்து
எந்தனைக்காருமென்று யீசனைத்துதிக்கலுற்றான்

(வசனம்) இந்தப்பிரகாரமாய் வருகிற எமதருமராசனைக்கண்ட யீஸ்வரனைப்பூசிக்கப்பட்ட மார்க்கண்டமகாமுனியானவர் மனோவேதனைகொண்டு சிவசிவா சிவசிவாவென்று அடிக்கடி சொல்லிக்கொண்டு நந்தியேறிவருகிற அந்த அமுதலிங்கேசருடைய பாதத்திலேவிழுந்து எந்தனைக்காருமென்று இரண்டுகைகளையுங்கூப்பி சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்யத்தொடங்குகிற விதங்காண்க.



இ-ம்-முகாரி-ஜம்பை தாளம்.

கண்ணிகள்,

ஐயகோ விமலனோ அந்தகன்கிடாவிலேறிக்
  கைதனிலே பாசசூலங் கட்டிக்கொண்டுவாரானையோ
மெய்யெல்லாநடுங்குதிப்போ
  மெத்தநான்பயந்தேனையோ
ஐயதிருக்கடவூரானே
  தொண்டனெனைக்காப்பீரையா
ஆருந்துணைகாணேனையா
  அரியதிருக்கடவூர்நாதா
காருலாவுங்கடவூரானே
  கழலிணை பூசிப்பேனையா
கண்களிரண்டுஞ்செந்தணல்போல்
  கண்டுகொண்டு பயந்தேனையா
மண்ணும்விண்ணு மதிரப்போ
  மறலிவருமலைகண்டேனே
அங்கமெல்லாம் நடுக்குதையா
  அந்தகனைக்கண்டபோதே
சங்கராசச்சிதானந்தா
  சரணமென்னைக்காருமையா
மங்கையே யென்தாயேயுந்தன்
  மலரடிசரணமம்மா
பங்கயப்பதத்தினாளே
  பாலகனைக்காத்தருள்வாய்
எருமைக்கிடாதன்னிலேறி
  என்முன் வந்தகாலனோ
வருமைசெய்தனுப்புமம்மா
  வையகத்தில்வாராமலே
திருக்கடவூரில்வாழ்வே
  தேவனேசரணமையா
உருக்கமாயெந்தனைக்காத்து
  உள்ளத்தில்மகிழ்வீரையா

மன

அமுர்தலிங்கர்சொல்-விருத்தம்.

எமந்தனைபயப்படாதே மறலிதான்வந்தாலென்ன
சந்தமுனைக்கேளாய் தந்திமாமுகவன்சாட்சி
உந்தனைக்காலன்கையில் ஒப்பியேகொடுக்கமாட்டேன்
பந்தமாயவனைக்கிட்டி பரிவுடன்போர்செய்வாயே

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மார்க்கண்டா அந்தகமன் உன்னைப்பிடிக்கவந்தாலென்ன என்னுடையமுத்துக்குமாரனை மகாகணபதி சாட்சியாக நான் உன்னைக்கைவிடுகிறதில்லை நீயொன்றுக்கும் பயப்படவேண்டாம்ஆனபடியால் நீ உன்னுடைய மனோதைரியம்விடாமல் அவனுடனே எதிர்த்துவார்த்தைசொல்லி வோட்டிவிடும்பிள்ளாய் மார்க்கண்டா.

எமதர்ம்மராஜன் மார்க்கண்டனுக்குச்சொல்-விருத்தம்.

ஏதுமார்க்கண்டா நீதான் என்னிடதூதர்வந்தால்
வாதுசெய்தாவதேது வயதுமேமுழுதுமாச்சு
சாதுபோல்நீயுமந்தச் சதாசிவனருள்பெற்றாலும்
தீதுறமுன்னைக்கொண்டு திட்முடனேகுவேனே

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மார்க்கண்டா என்னுடைய தூதர்வந்தால் அவர்களைவாதுசெய்து வெரட்டியடித்தாய் அதினாலேயுனக்குப்பிரமென்ன உனக்குக்கொடுத்தபதினாறுவயதுமுடிந்துபோய்விட்டது அருந்தவனைப்போல அந்தமுக்கண்ணருடைய கிருபைபடைத்தாலும் உன்னைவிட்டுப்போவதில்லை எப்படிப்பட்டபொல்லாங்குவிளைந்தாலும் உன்னைக்கொண்டுபோகாமல் விடுவதில்லையடா மார்க்கண்டா.

மார்க்கண்டன்-தரு-இ-ம-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

இதோவாரானேகாலனும்-இதுக்குநானென்னசெயவேன்
இதோவாரானேகாலனும்.

அநுபல்லவி.

மந்தரகிரிபோலே கதையைவீசி மடேமிபிரங்கிஓடி நெருங்கி (இதோ)



சரணங்கள்

அக்கினிப்பொறிசிதறக்கண்ணைமிரட்டிச்சுழட்டி யெந்தன்
ஆவியைக்கொல்லநாடிநது அதட்டி
திக்கெல்லாங்கடுங்கடுங்கச் சீறிச்
சிறுவன்மேற்கோபங்கொண்டு மீறி(இதோ)

மேகமண்டலத்திடிகள்போலவேசத்தம்போட்டுநெருங்கி
மின்னல்போலவேகுலந்துன்னவே
நாகலோகத்துச்சேடனொடுங்க
நகைத்தும்பகைத்தானும் கடுங்க(இதோ)

தூதர்கள்புடைசூழமுன்னையேபொல்லாதகால
துஷ்டரோடிப்பிக்கயென்னையே
ஆதரிக்கவேறில்லை அபயமீந்தெனைக் காரும்
ஐயாஇடரவிறங்கி அமுர்தலிங் கேசரே(இதோ)

எமதருமராஜன்சொல்-விருத்தம்.

பூசைதான்செய்தாலென்ன போதகஞ்செய்தாலென்ன
தேசமேதிரிந்தாலென்ன சிவனடிதொழுதாலென்ன
ஈசனாருனக்களித்த ஈரெட்டுவயதுமாச்சு
பாசத்தால்வீசியகங்கம் பதறிட்டுக்கட்டுவேனே

வசனம்.

அடாவாடா மார்க்கண்டா நீ அனேகவிதமாய்பூசித்தாலென்ன உபதேசங்கொண்டதினாலென்ன தேசதேசங்களாய் ஓடி திரிந்தாலென்னவிபூதிருத்ராட்ச மாலைகளை சுமந்தாலென்ன சிவனுடையபாதத்திலே தெண்டனிட்டுப் பணிந்ததினாலே ஆவதென்ன அன்றுனக்குத்தந்தவயது பதினாறும் முடிந்துபோய்விட்டது ஆனபடியினாலே உன்னைஇந்தபாசத்தினாலேகட்டிசூலத்தினாலேகுத்தி கதையினாலடித்துஇழுத்துக்கொண்டுபோகாமற்போனால் எமதர்ம்மராசன் என்கிறபெயரைஇழந்துபோய்விடுவேன் என்னுடைய பலபராக்கிரமத்தைப் பாரடாமார்க்கண்டா.

மார்க்கண்டன்சொல்-விருத்தம்.

வரிசையாயருதும்பை மதியொடுபுனலுஞ்சூடும்
அரியயன்தேடிகாணா அண்ணலினடியார்தம்மைப்
பரிசுடனழைக்கவந்தாய் பயப்படேனினிப்போபோ
துரிசிலிற்போகாவிட்டால் துன்பமுனக்குண்டாமே

(வ-ம்) அகோவாராய் எமனே அறுகையும் தும்பைமலரையும் சந்திரனையும் கங்கையையும் சடாபாரத்திலே தரித்திருக்கப் பட்டவனும் மூன்றெருநாலத்திலே பிர்ம்மாவிஷ்ணுவேயும் தேடுதற்கரிய அடிமுடியுள்ள ஈசுவரனுடைய அடியார்களை அழைக்கவந்தாய் சீ-சீ-பயப்படமாட்டேன் போபோபோ அதிசீக்கிரத்தில் இங்கிருந்தோடிப் போகாவிட்டால் உனக்குமகத்தாகிய உபத்திரவம் சேரும் மரியாதையோடு போய்விடடா எமனே.

மார்க்கண்டனுக்கும் எமனுக்கும் தர்க்கம்.

தரு-இ-ம்-ஆரபி-ஆதிதாளம்

கண்ணிகள்.

ஆரடாவுனக்கிந்த ஆண்மைதந்ததுபயலே
பாரடாவுன்சவுரியம் பதைபதைக்கக்கட்டுறேன். (ஆரடா)
தாண்டிப்பேசாதேமா சௌரியம்விணாய்ப்போமடா
தீண்டிப்பார்த்தாலென் சேதிதெரியுமடாவுனக்கு (தாண்டி)
பின்னைத்தெரியுமென்று பிதற்றுகிறாய்ப்பயலே
உன்னைக்கண்ணத்திலடிக்க அவைத்த திமுக்கிறேன்பாராய் (ஆரடா)
இழுத்துப்பார்ப்பாயோயேமா ஈசனுந்தனைக்கண்டால்
அழுத்தமாயுதைத்திந்த அவனியிதில்வீழ்ந்துவார் (தாண்டி)
விழுந்துவாரென்றுமெத்தப் பிதற்றுகிறாய்பயலே
இழுத்துக்கோடாலிகொண்டு சுழற்றிமாளாய்ப்பேன் (ஆரடா)
மாளாய்ப்பேனென்று வலுவாய்ப்பேசாதேயேமா
தூரத்திலோடிப்போடா துஷ்டாயென்முனனிற்காதே (தாண்டி)
அந்தவிடமத்தை துடுக்காகச்செய்கிறேன்பார்
கட்டிபெருமைக்கிடா காலுக்கிரையிடுவேன் (ஆரடா)
எருமைக்கிடாவும்நீயும் எரியும்ஆயுதமும்போய்
அருமைகுலைவாயிந்த அவனியிலினிசொன்னேன (தாண்டி)

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

எமனுக்கிதுரைத்த ஈசனார்தாமைநோக்கி
காமனையெரித்தகண்ணே காலனையுதைத்தாயென்றும்
நாமத்தைத்தவிக்க நின்னையாயெனையாட்கொண்டாய்
தாமதமினிசெய்யாதே தற்பரர்யுக்கதிதாய்



மார்க்கண்டன்சொல்-தரு-இ-ப-புன்னாகவராளி

பல்லவி.

என்னசெய்வேனசிவனே-எமவாதைக்கு-என்னசெய்வேனசிவனே

அநுபல்லவி

சொன்னலாறுமோயெந்தன் றுயரந்தனையிப்போ
உன்னிப்பார்ப்பிர்கடை பூரமிர்தலிங்கா (என்ன)

சரணங்கள்.

கொல்லுவேனென்றெனைக் கிட்டியே-காலபாசத்தால்
கொக்கரித்து வெருட்டியே
இல்லடாவென்று அதட்டியே-இகதையுங்கொண்டு
இறைந்தவிழி மிரட்டியே
கல்லதிருக்காட்டுமென்று நாற்றிசைநடுங்கநின்று
பல்லையுங்கடித்துக்கொண்டு பாவிவரக்கண்டு இன்று (என்ன)

படபடென்றுபிசை அடிக்க-கொச்சித்து-அண்ட
பகிரண்டங்களும் வெடிக்க
கடகடென்றுபல்லைக் கடிக்க-சராசரங்கள்
கலங்கிமனங்கிலி பிடிக்க
கடுகவென்றுயிர்தின்று முடி-வேமுடிப்பேனென்று
இடியெனக்கதையுங்கொண்டுபடையுடன்வாரானின்று (என்ன)

அந்திபிறைகுடுந் சடையா-பூதங்களொன்றும்
அந்தமுள்ளபெரும் படையா
தந்தியுரிப்போர்வை யுடையா-மங்கிருதங்கள்
தங்குமின்றவெள்ளை விடையா
விந்தையாயபன்னாகிடே விளங்கும்பாதவிநோதா
இந்தயிலினோந்தபோதா திருக்கடவூர்நாதா (என்ன)

எமதருமராசன்-விருத்தம்

எந்தனையிகழ்ந்துபேசி ஈசன்றன்றனைப்பூசித்து
வந்துகொறுவங்கொண்டு வாய்மதம்பேசலுற்றாய்
உந்தனல்லுயிரைக்கைக்கொண் டேமகிழ்ந்தேகாவிட்டால்
அந்தகனென்றபேரை யகற்றுவேன் அகற்றுவேனே

வசனம்.

அடாவடா மார்க்கண்டா மிகுந்த ஆணவங்கொண்டு என்னை இலேசாகவெண்ணி நீழ்ப்பாய்பேசி சிக்குப்பாலகனாகிய எங்கிளி லொருவனாகிய அந்த ஈசனைப்பூசித்து எந்தன்முன்னே மகாகெம்பீரித்து வாயில்வந்ததெல்லாம் சொல்லிவந்தாய் உன்னுடைய வெல்லம்பேச ..........................கொண்டு மகாசந்தோஷத்தோடே என்னுடைய ..................................................................................................................தல் இழந்துபோகிறேன் பாரும்பிள்ளாய் மார்க்கண்டா

தரு-இ-ம்-செஞ்சுருட்டி-அடதாளம்

கண்ணிகள்

சம்போசிவசங்கரா தயைசெய்கிருபாகரா
அம்புவியோர்களும் அகிலமுண்டிங்குமே (அர)
அருளானந்தபோதமே அருமாமறைவேதமே
பெருவாருடைநாதமே பிறவாதவிநோதமே (அர)
திரிபுரதகனனே தேவாதிதேவனே
பரிபூரணானந்தனே பராபரிபங்கரனே (அர)
வருகிறானேயமன் வாதைகள்செய்திட
கருமலைபோல்பூத கணங்களுடனேஐயோ-சம்போ (அர)
என்றுமுனைக்கும்பிடியே இங்குவந்தேனடியே
பொங்கியேமன்கூடியே புலியோல்வாரான்ஓடியே (அர)
மங்கையிடபாகமாகியபொருளே
அங்கம்பதறுது அருள்தருவாய்சிவ-சம்போ (அர)

எமதருமராசன்சொல்-விருத்தம்.

என்னிடமிரந்தன்னை கேடாதிகழ்ந்தாயுசன்
தன்னிடவலுமை சுத்தேபேசநின்றாய்
தன்னிகரில்லாவெள்ளித் தடவரையதனைச்சேர்ந்து
உன்னுடன்கட்டுவேனென் னுரமுதுகண்டிடாயே

வசனம்.

அடாவடா மார்க்கண்டா அதிகபலபராக்கிரமசாலியாகிறோமுன்னிக்கொண்டுவந்தேன் அப்படியிருக்க கொஞ்சமாவது பயம் அச்சமில்லாமல் என்னை உதாசனித்துப்பேசிநாய் இதுவுன்னுடைய ஆ............ஆருடையவலுமையோசவுரியம்பேசுகிறாய் உன்னுடைய பில்லாத அந்தவெள்ளிமலைவாசகனாகிய பரமசிவனிருக்கப்பட்ட அ



ந்தகைலாயகிரியைக்கூட உன்னுடன்சேர்த்துகுண்டுக்கட்டாய்கட்டிக்கொண்டு போகிறேன்பாரடாமார்க்கண்டா.

மார்க்கண்டனுக்கும்எமதருமராஜனுக்கும்-தர்க்கம்

தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்

கண்ணிகள்.

எமதருமராஜன்சொல்-தரு.

அஷ்டப்பயலேமார்க்கண்டா உன்னைத் — அரத்திப்பிடித்திழுத்து
தொட்டுமகத்தில் — கட்டிஅடிப்பேனடா

மார்க்கண்டன்சொல்-தரு

கட்டியடிக்கக்கூடுமோ — இங்கேநில்லாதேபோசும்மா
கண்டாலெரிப்பானீசன் — சம்மதமா

எமதருமராஜன்சொல்-தரு.

ஈசனெரிப்பானென்ற — வாயதனைக்கிழித்து
தாகிவிழித்தேகுவே — னெந்தனுலகுக்கிப்போ

மார்க்கண்டன்சொல்-தரு.

பார்ப்பதென்னனக்குப் — பரமேசனாணையுண்டு
பல்லைக்கடித்துமிரட்டாதே — போயினமு

எமதருமராஜன்சொல்-தரு.

நின்றநிலையில்சூலத்தால்குத்தி — எந்தன்கையிற்பற்றி
விஷத்தலிலேகுவேன — ல்லாதேபுத்தி

மார்க்கண்டன்சொல்-தரு.

புத்தியல்லடாபோயா — போடாஅடடாமூடா
பூதநாதன்றன்பல — மெனக்குண்டுபாரடா.

மார்க்கண்டன்சொல்-வசனம்.

அடாவடா யெமா அகண்டபரிபூரண சச்சிதானந்தராயும் சர்வலோகராயும் சாலோக சாமீப சாருபசாயுச்யமென்கிற நாலுபதவிக்கும் மேலாகிய பதவியைத்தந்தருளப்பட்டஈசனுடையதொண்டனானஎன்னைப்பிடிக்கிறேனென்றும் அடிக்கிறேனென்றும் கட்டுகிறேனென்றும் வெட்டுகிறேனென்றும் குத்துகிறேனென்றும் கூட்டைவிட்டு உயிரைக்கொண்டுபோகிறேனென்றும் பேய்பிடித்தலைகின்ற பெண்களைப்போலேஅலைகின்றாய் அந்நாளிலேதிரிபுராதிகளை நகைத்தெரித்த ஈசனையறியாதவனோ மன்மதனை நெற்றிக்கண்ணெருப்பினாலே தகித்ததையறியாயோ இன்னொருதரம் நெற்றிக்கண்ணைத்திறந்து உன்னைக்காணுகிறதற்குமுன்னே தப்

பின்புமுத்து சிங்கத்தைக்கண்ட மதயானையைப்போல உன்னுடைய எமபட்டணத்திற் கோடிப்போடா எமா

எமதர்மராசன்சொல்-விருத்தம்.

மங்கையைப்பாகம்வைத்து மதிபுனல்சடையில்வைத்து
செங்கையில்மழுமானேந்தும் சிவனடிதொழுதாலென்ன
அங்கவருனக்களித்த வயதுமேமூழுமாச்சு
பங்கந்துக்கேர்ப்படாதே பாசகுடன்கட்டுவேனே

வசனம்.

அடாவாடா மார்க்கண்டா அந்தபரமசிவன்கொடுத்தவயது பதினறுமாச்சுது இனிமேல் நீ பூமியில் இருப்பது தேவர்களுக்குச் சகிக்காது பங்கப்படப்போகிறாய் நானும் உன்னை என்னுடையபாசத்தினலே கட்டிக்கொண்டுபோகிறேன்பாரடா மார்க்கண்டா.

மார்க்கண்டன்சொல்-தரு-இ-ம-குறிஞ்சி-ஆதிதாளம்.

கண்ணிகள்

அருளாகதபுரமேவுல கனைத்துமளிக்கத்தரமாய்
சருவாபரிபூரணனே சம்போசதாசிவனே
பார்க்கப்பயங்கரமாகுதே மூர்க்கயெமன்கெனதயாலென்னை
ஆக்கிரமிக்கவடிக்கவாரான் அமுராதலிங்கேசுவரனே
பஞ்சாயுயிர்கடுக்குதையா வஞ்சனமனதனைக்காணலே
சஞ்சலத்துக்கிடமாகுதே சண்டனைமுனிந்திடுமே
ஆதாரமில்லாதபரமன் நீதாகெதியென்றடைந்தேன்
மாதாபிதாகுருதெய்வமே மறவேனைத்தாதிடுமே
தெய்வமேநானென்னசெய்வேன் கைகால்மெய்நடுங்குதப்போ
ஐயாதிருக்கடவூரானே அருள்குறிஞ்சிபாடினேன்

ஆரியா:

எரிகனல்மெழுகாயுருகியேவாடி இருக்குதேநெஞ்சம்
திரிபுரமெரித்ததிருக்கடவூரான் திருவடியேதஞ்சம்
சஞ்சமல்லவோகொடுங்காலபறக்குது என்செய்வேன்ஐயா
நெஞ்சம்வீசுதேயமையிலமதிசடாமை விமலனேசெய்வீர்கிருபை

தரு-இராகம்-பைரவி-அடதாளம்.

கண்ணிகள்.

பாவிதானென்னுயிரைக்கொண்டுபோகவென்கிறானே
சிவனேபரம சிவனே.



பார்படுத்துவாறே பாசத்தினால்வீசுவாறே
சிவனே பரமசிவனே
வார்த்தையோயெந்தன்மனம் வல்வினைதீர்ப்பாய்பமா
சிவனே பரமசிவனே
நாடுமேமன்தன்னைக்கண்டு நடுங்குதையோயெந்தன்தேகம்
சிவனே பரமசிவனே
உன்னடியென்றவர்க்கு உபத்திரவமுண்டோசாம்ப
சிவனே பரமசிவனே
என்னடியைப்பார்த்துப்பார்த்து எமன்சுற்றிவருகிறானே
சிவனே பரமசிவனே
பாம்பணியுமார்பாயெந்தன் பரிதாபம்பார்க்கொண்ணாதோ
சிவனே பரமசிவனே
தீம்பர்களுடனேயெமன் சேர்ப்பனென்றுசீறுறானே
சிவனே பரமசிவனே
பூசைக்குப்பத்திரமெடுக்கப் போகவொட்டேனென்கிறானே
சிவனே பரமசிவனே
தேசமானோருன்னையல்லால் நீணிலத்திலாருளைப்பாய்
சிவனே பரமசிவனே
நெஞ்சுதடுமாறுதையோ நீதியோவுந்தனுக்கிது
சிவனே பரமசிவனே
அஞ்சுதேயென்பஞ்சபூதம் அரியயனுங்காணவொண்ணு
சிவனே பரமசிவனே
செப்புமுப்புரதிபனை சிரித்தெரித்ததேவதேவா
சிவனே பரமசிவனே
இப்புவியில்வேளைநெற்றி யெரியினலெரித்தசாம்ப
சிவனே பரமசிவனே
துண்டரீகஞ்செய்யுமிந்தத் துட்டனைத்தொலைத்திடாயோ
சிவனே பரமசிவனே
தொண்டனென்னையாண்டருளில்தொல்லுலகில்புகழுறாதோ
சிவனே பரமசிவனே
கோபமுடன்பாசசூலம் கொண்டெடுறிவருகிறானே
சிவனே பரமசிவனே
கோபாக்கினியால்தகித்தும் பாசத்தினால்வீசுறானே
சிவனே பரமசிவனே

மார்க்கண்டன் சொல் - விருத்தம்

ஊழிகாலத்தின் பஞ்சம் ஓட்டித்திருப்பதுண்டோ
ஆழிதானுடைத்தாலென்ன அற்பமாமணலோதாக்கும்
பாழிலே திரியவேண்டாம் பரமனார் கோபங்கொள்வார்
வழியின்றடைந்தோமென்றன் வாழ்நகர் போவாயேமா

(வசனம்) அடாவாடா எமா பிரசண்டமான வாயுவாக்கினி வீசுங்காலத்திலே கேவலமாயிருக்கிற பஞ்சு பறக்காமலிருக்குமா சமுத்திரங்களாபுரண்டால் நுட்பமாயிருக்கிற மணலாலே அணைபோடுவாருண்டா அதுபோல முப்புரங்களை நகைத்தெரித்தும் மன்மதனை நெற்றிக்கண்ணினால் தகித்தும் தேவர்களைக் காத்த அந்த நிராயுதனுடைய இருபையைப்படைத்த என்னை உன்னாலே அணுப்பிரமாணமாவது அசைக்கக்கூடுமா வீணிலே திரியவேண்டாம் ருத்திராக்கினி ரௌத்ராகாரமாய் நினைப்பிவிட்டால் அவனுடைய பக்ஷைச்சிப்பொறுக்கிறதற்கு உன்னாலுமாகாது உன்னைப்போலைம்பதினாயிரம்பேர் வந்தாலும் ஆகாது ஆனபடியினாலே இப்போதே க்ஷேமமடைந்தோமென்று நீ இருக்கப்பட்ட எமப்பட்டணத்துக்கு ஓடிப்போய் பிள்ளாய் எமா வெட்கங்கெட்டுப்போய்விடாதே நடநட நடவடா அந்தகா.

மார்க்கண்டனுக்கும் - எமனுக்கும் தர்க்கம்

தரு - இ - ம் - மோகனம் - அடதாளம்.

கண்ணிகள்.

எம, வெற்றிக்கங்கெடுவாயென்று விருதுகள் பேசலாமோ
இக்கணமுனைக்கொண்டு யேகுவேன் பாராய்
மார், பாராயெனக்குநாரி பாகர் துணையுமுண்டு
வீராப்புப்பேசாதே வேகமாய்ப்போடா
எம, போடாவாடாவென்று புத்திநீசொல்லாதே
மூடாதேவருமஞ்சி முடிபிடுக்கிடுவார்
மார், இடுக்கிடுவார் சிவபூசை செய்யாதவர்
துடுக்காயின்னொருதரம் சொல்லாதேயெமா
எம, எமாயெமாவென்று எதிர்த்துப்பேசுகிறாய் நீ
சமத்தாய்ப்பல விருத்தாலும்பயமோ சொல்
மார், சொல்லுவதே துயிர்த் துணையான சிவனுண்டு
வெல்லமாட்டாய்போடா வெறிகொண்டகாலா



எம, காலத்திற்பத்மாசுரன் கேட்டையிற்சிவன்
சூலத்திலில்லாமல் நடக்க நீ பார்த்தாயோ
மார், பார்த்தமாரன்றன்னைப்பாலுதற்கண்ணாலே
வத்தநீராகவேயெரிக்கக்காணலையோ
எம, எதிர்ப்பட்டுக்காலாலுதைத்திட்ட வேடன்
குறியாயெச்சிலிலின்றமிகாண் முடியெயிசோ
மார், எதிரானமுப்புரத்தோரையெரித்தசிவன்
சதுரில்லாதனுவுமசையாதுபோடா
எம, அசையாமாப்பாவைபோலகிலத்தையாட்டும்
அதிசயமறியாயோ அதுவுந்தெரியாயோ
மார், தெரியுது பார்தலைதெரிக்கவிழுவேபோராய்
திருக்கடையூரீசன் திருவடியுதைபட்டு
எம, உதைப்பட்டுப்போவேனென்றுநமக்குப்பேசுறாய்
இதைக்குமெஞ்செகதையினால் சிதறவடிப்பேன்பார்
மார், அடிக்கிறேன் பாரென்று அதட்டிமிரட்டுகிறாய்
தொடிக்குறன் றலைவிழும் நேராமலோடடா
எம, ஓடிவராவிட்டாலுன்னையுஞ்சிவனையும்
நாடிப்பாசத்தினால் நான்கட்டுவேனே

மார்க்கண்டன்சொ - விருத்தம்,

ஐயனேயென்னசெய்வேன் அரகராவென்னசெய்வேன்
வையமெல்லாம்யமன் வாதையால் நடுங்குதிப்போ
உய்யவோர்வழியுங்காணேன் உமையவள்பாகனே
மெய்யவா யமன்செய்யும் தீவினைக்கென்னசெய்வேன்

வசனம், ஐயனே ஈச்வரா ஜெகதீசா ஆனந்தநடனா என்னையனே நானென்னசெய்வேன் இந்தபூமியெங்கும் நடுநடுங்கிக்கிடுகிடுக்கின்றதே இதைவிலக்குகிறதற்கு வேறொருவழியுங்காணேனே உமாதேவிபாகத்தமர்ந்த தேவனே இந்தயமன்செய்யப்பட்ட இம்மையத்தவிழ்க்க வழியில்லையே என்னசெய்வேன் சுவாமி.

மார்க்கண்டன் - தரு - இ - ம் - சங்கராபரணம் - ரூபகதாளம்

கண்ணிகள்.

என்னசெய்வேன் கடவூ — ரீசனே இதுக்
கேதுசெய்வேன் கடவூ — ரீசனே
இன்னஞ்சிறுபாலன் — ரீசனே - சேவ
செய்யவந்தேன் கடவூ — ரீசனே

காலபாசங்கொண்டு விசாரனே-என்னை
காக்கொணுதோகடையூ நீசனுரோ
இலனேயானிருக்கென்ன செய்வேன்-பெருஞ்
செல்வனுனகடையூ நீசனுரோ
சுதிவந்துமுன முனுக்குரானே-ஜெக
ஜோதியானகடையூ நீசனுரோ
சத்திக்கொண்டுசையால் விசாரனே-என்னை
காலயிதேர்கடையூ. நீசனுரோ
கரியைக்கண்டசிங்கங்கெத்சித்தாற் போல்-காலன்
கெர்சிக்கிருன்கடை நீசனுரோ
அரியயனுக்காணு ஆதிமுடியே-எந்தன்
ஐயாதிருக்கடையூ நீசனுரோ

அமுர்தலிங்கர்சொல்-விருத்தம்

சிந்தைதனந் அருசிரோருஞ் செல்வனேயஞ்சவேண்டாம்
அந்தகன்றன்னையின்னை மனோரொடிக்குள்ளேவிழ்த்தி
சிந்தனையாற்றிமெத்த சிருடனமைப்பேநீயும்
அந்தநாட்செய்தபாவ வனுபவமிதுவேகண்டாய்

(வசனம்) அகோவாரும் பக்தசிரோமணியான மார்க்கண்டாநீயா தொன்றுக்கும் பயப்படவேண்டாம் அந்தயமனை இன்னந்தரைநொடிப்போதிலே பூமியிலே அகன்விழ விழும்படியாகச்செய்துடன் இடையமனுக்கதிவாரணம்பண்ணி எந்னுடைய லோகத்துக் கழைத்துக்கொண்டுபோகிறேன் நீமுர்பவத்திலே செய்தபாபகர்ம சேஷங்கள் ஒழியும்வரைவயிலும் பொறுத்திரும்பிள்ளாய்மார்க்கண்டா

தரு இராகம்-பூபாளம்-ஜம்பைதாளம்

கண்ணிகள்.

அண்ணலே அப்பயமைய ஆதியே அப்பயமையா
என்னருப்பவமொழிப்பாம் ஈசனே அப்பயமையா
கண்ணினுல்லமனைக்கண்டேன் காயமுறநடுக்குறுதையா
பண்ணியபாவங்கள்போக்கும் பரமனே அப்பயமையா
மன்னன்மன்னர்போற்றுமுந்தன் மலரடிக்கப்பயமையா
என்னுந்தவ்வுமேமத்திருவைச் செய்வேனப்பயமையா
பெண்ணுமன்பாகர் மீசனே அப்பயமையா
அண்டிவந்தடிபூசித்தேன் அண்ணலே அப்பயமையா



உன்னையல்லால்வேறுதுணையார் ஒருவனே அப்பயமையா
என்னைச்சிவந்தன்னிற்சேர்ப்பாய் ஈசனே அப்பயமையா
சங்கராசதாசிவனே சர்வேசா அப்பயமையா
பொன்கரவணிந்தயீசா புலியூரா அப்பயமையா
பாதிமதிநதியணிந்த பரமனே அப்பயமையா
சோதிசுடராய்விளங்கும் சூலி அப்பயமையா
காலனைத்துரத்தியுந்தன் கழல்தா அப்பயமையா

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

முடுகியகடாவிலேறி முன்னவரொருங்கூடி
இடுகிடத்திடவேசீறி இட்டியேகொக்கரித்துப்
கடுமையாய்ப்பேசியேசி கடவுளின்மேலும்பாசம்
விடுவதேதருமமென்று வேந்தனும்வீசினனே

(வசனம்) அகோசேனரும் எமபானையற்ற மகத்துக்களே அதிவேகமாய்நடக்கப்பட்ட எருமைக்கிடாவிலேறிய அந்தகனனவன் முப்பத்துமுக்கோடி தேவர்களுமகண்டு நடுநடுங்கயிரோமம் சிலிர்த்து லோகமுங்கிடுகிடுத்திட ஆயிரத்தெட்டு சிரத்தையுடைய ஆதிசேஷன் சிரிவருவதுபோலே இட்டிவந்து கொக்கரித்து விசேஷமானவார்த்தைகளைப்பேசி இனி நாம்சும்மாயிருக்கப்படாது அந்த யீசுவரன்பேரிலேயும் பாசத்தைவெரிவதுதருமமென்று கையிலேயிருந்த பாசத்தினாலே யீசுவரனையும் மார்க்கண்டனையும் சேர்த்து எறிந்தவனானான்

எமதருமராசன்-தரு-இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

வீசினேன்பராய்-எனபாசத்தால்-வீசனேன்பாராய்

அநுபல்லவி

வீசினுய்நீமெத்த நேசனுமமுர்தலிங் | குரோதமதாயுந்தன் கேசனைகூடநான் (வீசினே

சரணங்கள்.

சிங்கந்தனைக்கண்ட தங்கமதகரிபோல்
மங்கப்படக்கட்டி செங்கையின்பாசத்தால் (வீசினே
அடித்துக்கெதையினு வெடித்திருப்பலக்கையால்
குடித்துந்தனுயிர்தனை இடித்தெந்தன்பாசத்தால் (வீசினே

தொண்டனென் றந்தனைக் கண்டபின்னொத்தனை
கொண்டருக்கண்ணனும் அண்டவராமலே(விதியே

அமூர்த்திலிங்கர்சொல்-விருத்தம்.

அடந்தவந்தென்னைப்பூசிக்குந் தொண்டனையஞ்சச்செய்து
உடைந்தையாய்ப்பாகங்கொண்ட உமையவளும்நடுங்கப்
படந்தனின்பதவேழத்தின் பதம்பட்டபாம்பாய்ச்சிறி
கடந்தென்மேல்பாசங்கொண்டாய் கலனேஒழிந்திடாயே

(வசனம்) அடாவடாயேமா அதிக கொடியபொல்லாங்கான தீவினே பொழிந்துளன்னைத்தேடிவந்து பூசிக்கப்பட்ட என துதொண்டனுகிய மார்க்கண்டனுள்ளமனைபயவும் எனதுஇடப்பாகத்தில் இடைவிடாலமர்ந்திருக்கிற உமையவளுடைய அங்கமபத்ரமவும் மதங்கொண்டயானையின்காலிலேமிதிப்பட்ட சர்ப்பம்போலே சீறிவந்து என்னுடைய ருத்தாம்சத்தையும் மனதிலேஎண்ணுமல் பாசத்தினுலெறிந்தாய் நீ இனிமேல்எங்காளும் தொண்டர்களை யழித்துக்கொண்டு இருப்பாயானுல் உன்னுடையபயமே உன்வராஜன்மைட்டுன மெத்த தொல்லையாயிருக்கும் உன்னை இனிமேல் உயிருடனேவைக்கவொண்ணுது இதோ என்னுடைய திருவடியினுலே உன்னையுதைத்துஇன்றுமுதல் காலகாலன அந்தகாந்தகன் யமாரியென்றபெயராவதித்தேன் நீ இத்துடனழிந்துபோடா எமா.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

சீறியதருமன்றன்னைச் சிதறிட்செய்வேனென்று
கூறியமூர்த்திலிங்கர் குமறியகோலத்தோடு
மீறியகாலனறன்னை மேதினிமீதில்வீழ்த்தி
தேறியமார்க்கண்டர்க்குத் திருவருள்புரிந்திட்டாரே.

(வசனம்) அகோகேளும் புண்ணியலோகவாசிகளே இந்தப்பிரகாரமாய் கோபாக்கினிபோலே பாசத்தையெறிந்தஎமதருமராசனை சிதர்வடிப்பேனென்று முன்னாளிலேதிரிபுரத்தினையும் மன்மதனையும் எரிந்தஅக்கினியோடு வடவாக்கினியும் எழுந்ததுபோல அந்த அமூர்த்திலிங்கத்துக்குள்ளேயிருந்து அண்டகடாகங்களும் வெடித்ததுபோல் வெடிபடச்செய்து எழுந்தருளிய பரமசிவனைவர்சிவலிங்கத்தையிடிகரித்தஎமதருமராஜனை தனது கையிலிருந்த சூலாயிதத்தினுலே குத்திதள்ளி பருத்தசிரோமணியாகிய மார்க்கண்டனுடைய அபயங்களை ஒழித்ததுமன்றி



கட்டியக்காரன்-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அட்தாளம்

பல்லவி.

எமனைப்பூமியில்வீழ்த்தினுனே-பொல்லா
எமனைப்பூமியில்வீழ்த்தினுனே

அநுபல்லவி

எமனைப்பூமியில்வீழ்த்தி ஏழுமையைவாழ்த்தி
ஈசன்கோபங்கொண்டு ரேஷமதாயுதைத்து(எமனை

சரணங்கள்

மார்க்கண்டனுக்கருள் கொடுத்து-இந்த
மண்ணிலெமவாதைதன்னை விடுத்து
கார்க்கவேகடையூரி லடுத்து-தன்னை
கருதுவோன்களித்திட கல்தனையெடுத்து(எமனை

அண்டபகிரண்டமும் நடுங்க-பெரும்
ஆதிசேடன்முடி அருண்டெழுந் தொடுங்க
தொண்ணகோலங்களு மடங்க-தேவர்
குறியறியாசிணக்குமியான நடங்க(எமனை)

பூவுலகோரெல ரோனும்-சில
பூசைசெய்வோர்க்கருள்புகலுவே காணும்
யாவுமென்னடைக்கலந் தானும்-எனக்
கானாவாரொன்றுகடையூர்வாழ் கோனும்(எமனை)

அந்தகனண்டபிண்ட மதிர்ந்திடவீழ்ந்தபோது
சொந்தருண்டவனிமாதம் சொடிதனிலெழுந்தவர்து
கந்தனையீன்றமுக்கட் கடவுளே கருணைவாழ்வே
எந்தனைக்கார்ப்பாயென்று இயல்புடவருகின்றுளே.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்

(வசனம்) இந்தப்பிரகாரமாய் உதைப்பட்ட எமனுனவன் அண்டாண்டங்களும் அதிர வீழ்ந்தபோது எமலோகம் பாழாகப்போய்விட்டபடியினுல் உலகத்திலே விருத்தியடைந்த சென்துக்களுக்கும் நாசகாலமில்லாததினுலே பாரம்சுமக்க மாட்டாமல் பூமாதவியானவள் ஈசுவரனைதியானித்து புலம்பிவருவதாகாண்க.



௬௬-இராகம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

பூமிதேவிவந்தனளே-பூதநாதன்முன்
பூமிதேவிவந்தனளே

அநுபல்லவி

சேமிகாதாவுந்தன் செறியவந்தகன்
சேமபொறுப்பாய்பூமி பாரம்பொறுக்கேனென்று (பூமிதே)

சரணங்கள்,

ஐயாவென்றுபோற்றி-அந்திவண்ணனன்றன்
அடிமலர்தொழுதேத்தி
வையகந்திலினிமேல் வாழுமார்க்கண்டேச
ஐயவதைசெய்தாலென்று துதித்துப்புகழ்ந்துபேச (பூமிதே)



அங்கர்புட்டிப்பாம்பா பொறுக்கி-அவனிமா
ஆசமிகடு நடுங்கி
செகசமலத்தவனும் செய்யதான்முகனுமின்று
எங்கமார்க்கிட்டீர்பாரம் ஏழைபொறுக்கேனென்ற (பூமி)
எமலோகம்பாழாய் போச்சே சதாசிவனே
எடுக்கொண்ணுச்சுமை யாச்சே
சமனில்லாநொடிப்போதில் சதுர்யுகமாச்சதென்று
அமலனேசரணின்று அஞ்சிக்கைதீர்ப்பாயென்று (பூமி)

பூமிதேவி-சிவனைநோக்கிச்சொல்-விருத்தம்.

அரகராசிவனேமிக்க வடியார்கள்கருணைவாழ்வே
புரசரசாலன்றனீனைப் பூமியிலுதைத்துவீழ்த்தி
வாழிகவளித்தாய்வேத மார்க்கண்டனுக்காயிப்போ
நிரர்தாமிந்தபாரம் நேரிழைகமக்கிலேனே.

பூமிதேவிபுலம்பல்-தரு-௬௭- நீலாம்புரி-அடதாளம்.

பல்லவி.

பாரஞ்சுமக்கலாசமோ-பொல்லாப்-பாவியாலவதுசமோ

அநுபல்லவி.

நோமென் செந்தேனேசிவனே-உந்தன்
நேரிழையிடபாகத் தவனே
மாரன்றனையெரித்துமாறவனைக் காத்தாப்போல்
மடந்தையெனைக்காக்க மறந்ததேனெழுப்பாய் (பாரஞ்)

சரணங்கள்.

தீவினையென்னசெய் தேனோ-உந்தன்
திருவடிதொழாமலாய் தேனோ
பாவியெவர்கள்பிறந் தாரோ-இந்தப்
பாரத்தையெனக்குத்தந் தாரோ
கூவியருள்தந்து கூத்தனையெழுப்புவாய்
கொன்றையணிந்தசடைமேலனைக்குறைகள்தீர்த்தனுப்புவாய் - பாரஞ்

சிவகோடிகளழிக மாச்சே-ஜெனித்திட்ட
ஜெந்துகளழியாமற் போச்சே
பாவிகளேயாரிக வாச்சே உந்தன்
பார்வையுமேபாழாக மாச்சே
காவலடியெனைக்காக்க வந்தகனையெழுப்பாய்
ஆரணேசுங்காதரனே ஆங்காரந்தொழிப்பாய் - பாரஞ்

கமை அதிகரிக்குதே ஐயோ-இந்த
தொல் லுலகோர்வாழ்வு மெய்யோ
அமைப்பெனக்கிது வானால் அவனிமாதாப்பிறக்கேன்
அந்தகனை யெழுப்பாயல்லாதுனைத் துறக்கேன்-பாரம்

பூமிதேவிதேவர்களை நினைந்துபுலம்பல்-விருத்தம்.

அண்ணலே அப்பனேமாலே ஆயிரங்கண்ணனே
எண்ணவுமுடியவொண்ணா இடுக்கம்தேவர்கள்வைத்தீர்
நண்ணவுமுடியாதயோ நக்கனார்வெகுண்டுதைக்க
மண்ணைதன்னில்விழுந்த மறலியையெழுப்புவீரே.

வசனம்—சிவசிவா பிரம்மதேவா-ஆதிநாராயணா தேவதேவோத்த
மாதி தேவர்களே, என்னை அளவில்லாத துயரத்துக்குப் பாத்திரவதியா
க்கிவைத்தீர்கள் ஜெனனமே ஒழிய மரணமில்லாமலிருக்கிற இந்த
பூமிபாரத்தைகேவலமானபெண்ணாலே பொறுக்கமுடியுமோதாங்
கமாட்டேன் பரமசிவன் கோபத்தினாலே உதைத்துவிழுவித்ததை அ
ந்த யமதர்மராசனை எழுப்பித்தரவேண்டும் தேவர்களே.

தரு-இராகம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

கண்ணிகள்.

தேவர்களேபொல்லாத்தீவினைக்குடன்பட்டேன்
மூவர்களேபூமிபாரம்முழுதும்நான் சுமைப்பேனோ.

இறப்பில்லாச்செந்துக்களோவெண்ணிறந்ததுவாச்சு
பிறப்பதுமிகவாச்சுபேதைநான் பொறுப்பேனோ

எந்தவிச்சமதனை இறைவரெவர்சுமப்பார்
சிந்தைகரைந்துருகுதேசிவசிவாவென்ன செய்வேன்

காலன்றரையில்விழுந்தகாலமுதலாயிந்த
ஞாலத்துள்ளசுமையைநானெடுக்க வசமே

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

அண்டர்கள்முனிவரிந்திரன் அயன்முதல்வானோர்போற்றப்
புண்டரீகப்பெண்மாது புவியளந்திடுதாளென்றே



எண்டிசைதாங்குஞ்சேட னிலங்கியகுடைநிழற்றத்
தொண்டர்கள்போற்றுமாயன் தூரிசினில்வருகின்றாரே

(வசனம்) அசோகேளும் சபையோர்களே இந்தப்பிரகாரமாய் பு
லம்புகிற பூமிதேவியின் பரிதாபத்தின்சத்தமானது தேவலோகத்தி
ல்கேட்டு முப்பத்துமுக்கோடிதேவர்களுடன் எழுந்து மகாவிஷ்ணு
வானவர்வருவதுகாண்க:

தரு இ-ம்-எதுகுலகாம்போதி அடதாளம்.

பல்லவி.

ஆதிகேசவரும்வந்தார்-செருடனேறி-ஆதிகேசவரும்வந்தார்

அநுபல்லவி.

ஆதிகேசவரும்வந்தார் சோதனையாகவேயிந்த
சேதிகளறிந்துமுந்த நாதியாமெனவ்மந்த (ஆதி)

சரணங்கள்.

சந்திரசூரியருடன் இந்திரருடையனும்
நந்திவானவருடன் வந்துகுழுமுனிவோரும் (ஆதி)
வேலைநடுவினின்று ஆலிலையிற்றுயின்று
மாலைபிட்டானைக்காக்க மாயாவதாரனான (ஆதி)
வாரிதியைமுகர்ந்து வல்லரக்கன்றனைவென்று
நாரணனுனவனின்று நமனுக்கருளவென்று (ஆதி)

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

அரன் றுசபையைநோக்கி அரியயன்முதலோர்வந்த
பரிவினையறிந்துநின்ற பாரிளமாதுமெத்த
உருகியேமனதுவேறாய் ஓலமிட்டேகிவந்து
பெருகியகண்ணீர்சிந்தப் பேதையும்புலம்புவாளே

தரு-இராகம்-பூபாளம்-ஜம்பைதாளம்.

கண்ணிகள்.

ஐயனே அபயமையா ஆதியே அபயமையா
வையகமளந்தமாலே மாயவா அபயமையா
நீலவண்ணமேனியனே நெடியோனே அபயமையா
கோலமணவாளனே கொழுநனே அபயமையா
அடியாளிச்சுமைபொறுக்கேன் ஆதியே அபயமையா
நொடிதனில்மறலிதன்னை நோக்கவெழுப்புமையா
எந்தனால்முடியாதையா எனவேசரணமையா
அந்தகன்றனையெழுப்பி அடியாள்தனைக்காருமையா

மகாவிஷ்ணுசொல்-விருத்தம்.

பூதலமாதேகேளாய் புண்படமேனிநைந்து
ஏதுநீதவசிக்திங்கே இத்தனை துயரத்தோடே
மாதுநல்லாளேயுந்தன் மனதுள குறைகள்சொல்லி
நீதுயர்வகையேதந்தத் திறமையையுரைசெய்வாயே

(வசனம்) அகோவாருபெண்ணே பூமாதேவி உன்னுடைய தேக மெல்லாம் நலிந்துபோய் மகாதுக்கத்தோடு இங்கே என்னிடமாய்வந்தாய் அந்தவகையைச்சொல்லி உன்னுடைய குறைகளை யாவையுமாற்றிநீயுன்னிருப்பிடம்போய்ச்சேரும்பெண்ணே பூமிதேவி.

பூமிதேவிசொல்-விருத்தம்.

மாயவாநுளசித்தாமா மாதவாசேளீர்நீதான்
ஆயதோர்பூபாரத்தை யடியனுங்கமக்கொணாது
தேயமாயானவேண்டி திருபனும்தருமசுந்தினை
சாயத்தோடெழுப்பிவிட்டுக் கருணைகூர்ந்தனுப்புவீரே

மகாவிஷ்ணுசொல்-விருத்தம்.

கன்னிநீசொல்லக்கேளாய் கன்றுதலோருன்சென்று
மன்னியவுத்தனுக்காய் மலரடிதொழுதுபோற்றி
பின்னியமுறைப்படிக்குப் பணிவிடையவுஞ்செய்து
தன்னியகாலற்காவி தசமையாய்த்தருவோம்வாராய்

(வசனம்) அகோவாராய் பூமிதேவி உனக்காக நாமும் முப்பத்து முக்கோடிதேவதைகளும்வந்து அந்த அந்தகனை யெழுப்பித்தருகிறோம் நீவேதனைப்படவேண்டாம் வாருங்கொண்ணே பூமாதே

(பூமிதேவி-வசனம்) ஆனவப்படியேவருகிறேனையாசுவாமி

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

இந்திரனயன்மால்தேவ ரெவர்களுங்கூடிக்கொண்டு
சந்தரப்பூமிதேவி சுமக்கொணுப்பாரந்தாங்க
அந்தியர்க்காலன்றன்னைச் சீக்கிரமெழுப்பவேண்டும்
தந்திரஞ்செய்யவேதான் சதாசிவன்சபைக்குவந்தார்

(வசனம்) அகோகேளும் சபாரஞ்சனசிரோமணிகளே இச்சப்பிரகாரமாய்வந்த முப்பத்துமுக்கோடிதேவர்களும் பூமிதேவியையழைத்துக்கொண்டு திரிநேத்திரானயிருக்குஞ்சபாதனைதரோத்திரஞ்செய்வதுகாண்க.



தேவர்கள்சரணஞ்செய்தல்.

தரு இம்-அடாணு-அடதாளசாப்பு.

பல்லவி.

சரணஞ்சரணமையா-காலகாலனே சரணஞ்சரணமையா

அநுபல்லவி.

சரணஞ்சரணஞ்சாம்ப சதாசிவனேசரணமையா
சரணமுமையபாகனே சங்கரனேசரணம் (சரண)

சரணங்கள்.

ஆலமுண்டவாசரணம் அந்திவண்ணாசரணம்
கோலமாமழுவேந்தும் சொர்ண முடியேசரணம் (சரணம்)
நிராயுதனேசரணம் நீலகண்டாசரணம்
பராபரனேசரணம் பரமேசனேசரணம் சரணம்
மாரவைரிசரணம் மாதங்கனேசரணம்
நீரணிந்தோய்சரணம் நிறைந்தவனேசரணம் சரணம்

தேவர்கள்சொல்-விருத்தம்.

மதியணிசடையாசேளீர் மன்னிவில்மகிழ்ந்த
விதியினுல்சனையின்றி விளங்கிய பாரதன்னை
அதிசமாய்ச்சுமக்கொணுமல் வியப்பி கொண்டு
சதுரினிவந்தாளந்தச் சண்டனையெழுப்புவீரே

(வசனம்) சரணஞ்சரணமையா அமிர்தலிங்கேசுவரரே இப்போது உம்முடைய கோபத்தினாலே யமன் விழுந்துபோய்விட்டான் உலகத்தில்மரணமில்லாததனாலே சனம் அதிகமாய்விட்டது ஆகையினால் அவ்வளவுபாரம் பொறுக்கச் சகிக்காமல் பூமாதேவியானவள் புலம்பிநின்றதுகண்டு உம்முடைய சந்நிதிக்கு அழைத்துக்கொண்டுவந்தோமையா தேவரீர்கிருபைசெய்து அந்தயமனை எழுப்பிவிட வேணுமையாசுவாமி.

அமிர்தலிங்கேசுவரர்சொல் விருத்தம்.

அண்டரோ அயனேமாலே அன்புள்ள புனிவர்சேளீர்
தொண்டர்கள்வாழ்பிரக்தத் தொல்லுலகினிற்பிறந்தோர்
மண்டலந்தன்னில்வாழ்ந்த லமாதவ விளங்குங்கண்டீர்
சண்டனையினிமேலிந்தச் சத்தினிவிருத்தொன்றுதே

(வசனம்) அகோசேளீர் தேவர்களே நமதடியார்கள் வாழப்பட்ட இந்தபூமியிற்பிறந்தோர்கள் யாவரும் இந்த பூலகின்கண்மேவப்பட்டவர்களாகில் நமக்கு அடியார்களாயிருப்பார்கள் அருந்தவம்மி

குதியாகும் இந்தகாலனை இச்சகத்திலில்லாமல் அழித்துவிடவேணு ம் தேவர்களே

தேவர்கள்சொல் விருத்தம்.

நஞ்சணிகண்டத்தானே நற்றவர்றனக்கன் றீய்ந்த
கொஞ்சமாம்வயதிலொட்டி கொடுத்தனுதீயோயாரும்
நெஞ்சகந்துணிந்தகாலன் றோமதறிந்துவந்தால்
அஞ்சலேவுதைத்துமிர்த அவனியிற்றள்ளலாமோ,

(வசனம்) அயோவாரும் அமுர்தலிங்கேசுவாரே உமது தொண்ட ஞன மார்க்கண்டேயருக்கு நீர்கொடுத்தவயது பதினாறும் ஆச்சுதெ ன்று அந்த எமதர்மராசன் தன்னுடைய எமலோகத்துக்கு அழைக்கவ ந்தால் அவனை அறைிவிழும்படி உதைத்துப் பூமியிலே தள்ளிவிடுவ து உமக்குதர்மந்தானோ யீஸ்வரா.

அமுர்தலிங்கேசுவார்சொல் விருத்தம்.

அன்றுமார்க்கண்டேயர்க்கா யளித்தநோர்வயதிலொட்டும்
சென்றுதென்றன்னைத்தேடிச் சேவடியோற்றம்பேசு
என்றுமேபதினாறாக வென்னுளமகிழ்ந்தின் றீர்ந்த
கொன்றுமிக்காலன்காணு துள்தெனினுதைத்திடவோ

(வசனம்) அகோவாரும் தேவர்களே அந்தாளிலே மிருகண் டேயமகாமுனிவனுடைய தவத்துக்குமெச்சி இந்தமார்க்கண்டே யனுக்குப் பதினறுவயது கொடுத்தேன் அந்தநாளானுபிலபுரானுள் ள சிவஸ்தலங்கள்தோறும்போய் அங்கங்குள்ள நந்தவனங்களிலெ ன்று பூசார்க்கமாயிருக்கிற புட்பங்களைக்கொண்டுவந்துபூசைசெய்து சிவபூசாதுரந்தரனைதறிந்து அவனுக்கு என்னாப்பதினாறாய் வாழ் ந்திருப்பாயென்று நான்வரங்கொடுத்ததை இந்தகாலனறிந்திடானோ நீங்கள்நிந்துசொல்லுங்கள்தேவர்களே.

தேவர்கள்சொல் விருத்தம்.

என்றுமைசதன்விலவாழும் எப்பெருமிறையுன்நிற்கை
கண்டிடவரிதாமிந்தக் காலத்தெப்பிழையுமெசெய்து
உண்டிடைதமனம்பொறுத்து உமைபொருபாகோதிப்போ
தீண்டியாதெதுப்பித்தர்த ல்கலத்திலிற்போற்றுவோமே

(வசனம்) இந்தவிட்டீக்கிறிலும் சிவிக்கப்பட்ட சர்வேஸ்வரனு க்கும் அண்டபிண்டசராசரங்களுக்கும் அதிபதியாயிருக்கிற நம் முடையமதூலிஷ்டலிங்கர்வரவேறியக்கூடுமெஇந்த எமனை இப்போ



செய்ததப்பிதத்தை மனம்பொருத்து அவனையாதொரு இம்சையுஞ் செய்யாமல் எழுப்பிவிட்டால் இந்தமுப்பத்துமுக்கோடி தேவர்களு ம் நாற்பத்தெண்ணாயிரம்முனிவர்களும் மற்றுமுண்டான சிவனடியா ர்களும் விஷ்ணுபத்தாளும் உம்மைமான்றென்றும் பூசித்துப்போற்று வோம் அமுர்தலிங்கேசுவாரனே.

அமுர்தலிங்கேசுவார்சொல் விருத்தம்.

பத்திபிலாவமயோரைப் பருக்கன்னைப்படைக்கின்றோனை
இத்திரவடியார்தம்மை எப்பதும்போற்றுவோனை
நத்தியேவருவானுல் நானதைபொறுக்கேன்கண்டீர்
சத்தியமாகச்சொன்னேன் சகலருமறியத்தானே

வசனம்—அகோகேளும் தேவர்களே அதிகபக்தியாய் சிவபூசை செய்யப்பட்டபேரையும் எனதுபக்தர்களென்று வரப்பட்டவர்களு க்கு அந்நம் படைக்கின்றவர்களையும் இதோஇந்த மார்க்கண்டனைப் போல உன்னைக்குறித்து ஒரு வில்வதளமாவது பூசிக்கப்பட்டவர்க ளையும் எந்நாளும் என்னுடைய நாமதேயமான சிவபஜனைபண்ணப்ப ட்டவர்களையும் என்னுடைய சரித்திரங்களை எழுதுவோர்களையும்வாசி ப்போர்களையும் அதிகபக்திபூர்வகமாய் கேட்போர்களையுப் இப்படிப் பட்டவர்களை அண்டிவருவோனையும் இந்தஎமன்போலிம்சிப்பா னையாகுல் ஒருமாத்திரைப்போதும் மனம்பொறுக்கேன் தேவர்க ளே நீங்கள் இத்தனைபேருமறியச்சொல்லுகிறேன்.

தேவர்கள்சொல் விருத்தம்.

அப்பணிசடையினுரே அண்ணலே அமரர்வாழ்வே
செப்பமாப்பெரியோரோனும் சிவனடியார்களேனும்
தப்பிதமாகத்தீண்டில் தண்டனைசெய்வாயா
ஒப்பியேயமன்றன்னை உயிருடனெழுப்புவீரே

வசனம்—அகோவாரும் கங்காதரனே தேவர்களுடைய வாழ்வே நல்லதவத்திலிறையாகிலும் உமதடியார்களையாகிலும் கைப்பிழையா ய் தீண்டிவிட்டபோதிலும் தெண்டித்துவிடுவீர் இப்போது எங்க ளுடைய போற்றுதலுக்காக யமகிங்கரனை உயிர்கொடுத்து எழு ப்பிவிடவேண்டும் திரிநேத்திரனே.

அமுர்தலிங்கேசுவார்சொல் விருத்தம்.

மருவிலாத்தொண்டனான மார்க்கண்டன்றனையெதிர்த்துப் [ன்
பெருவினைவிளைத்தாயுந்தன் பிழையெலாம்பொறுத்துக்கொண்டே
இருவினையகற்றிநேர்பால் யென்றுமேனுமிடாதே
திருவுளமகிழ்ந்தேன்காலா நீமுடனெழுந்திராயே.

வசனம்—அகோவாருமேமா குற்றமற்றதொண்டனான மார்க்கண்டனுடன் யுத்தஞ்செய்யத் துணிந்து பொல்லாங்கான செய்கைக்குட்பட்ட உன்னுடைய பிழைகளைப்பொறுத்துக்கொண்டேன் இனிமேல் ஜனனமரணங்கடந்த அமூர்த்தலிங்கர்முன் சொல்லாதே சந்தோஷமடைந்தெழுந்திரும்பிள்ளாய் எமதர்மராசனே.

கட்டியக்காரன் சொல்விருத்தம்.

அண்டர்களெவரும்போற்ற அயன் திருமாலும்போற்றக்
கண்டதோரமூர்த்தலிங்கர் கங்கையும் வாருந்தூவி
விண்டலம்புகழுமேமா விமானமேலெழுந்ததென்னத்
தொண்டனென்றெழுந்துவந்துதொழுதுநற்றுதிசெய்வானே

வசனம்—அகோகேளும் புண்ணியபுருஷர்களே இந்தப்பிரகாரமாய் தேவர்கள் துதிக்க பிரமதேவன் வணங்க திருமால்போற்ற முனிவர்கள் பூசிக்க சந்தோஷத்தையடைந்து ஸ்ரீமிருத்யுஞ்செயரானவர் அன்புகூர்ந்து தன்னுடைய சடாபாரத்திலிருக்கிற கங்கையையிறைத்து புட்பங்களைத்தூவி பிரபலப்படுத்து எமதர்மராசனெழுந்திருந்து முன்னே தேவாதிகளெல்லாம் வந்து ஸஞ்சலிக்கத் தூங்கியெழுந்த அரசனைப் போலெழுந்து தொண்டனைப்போல் பூசிக்கத் தொடங்கியது காண்க.

எமதருமன்போற்றிசெய்யும்-தரு இ-ம்-காபி-ஆதிதாளம்.

பல்லவி.

அரகர அரகர-சிவசிவாபோற்றி.

அனுபல்லவி.

அமூர்த்தலிங்கேசாவுன்னடியிணைபோற்றி (அரகர)

சரணங்கள்

அண்டர்கொண்டாடிய வருளேபோற்றி
தொண்டர்தமக்குயர் துணைவனேபோற்றி - அரகர
கிரிபதிதனைப்போர்த்த கடவுளேபோற்றி
சரதமும்வைத்திட்ட பாதனேபோற்றி - அரகர
பூசிக்கவருந்தாமம் புராதனேபோற்றி
வெருப்புக்கிலியாய் பரிதனேபோற்றி - அரகர

தேவாரம்.

அத்தனேபோற்றிபோற்றி ஆதியாதனேபோற்றி
நித்தனேபோற்றிபோற்றி நிமலனே தேவாபோற்றி
முத்தனேபோற்றிபோற்றி மூவர்க்கு முதல்வாபோற்றி
சித்தனேபோற்றிபோற்றி சோதியிலிங்காபோற்றி



எமதர்மராசன்-ஈசனுக்குச்சொல்-விருத்தம்

கங்கையுமதியுங்கொன்றை கடுக்கையுஞ்சடையிற்சூடி
அங்கையில்மழுமானேந்தும் அண்ணலேபரனேபோற்றி
மங்கையோர்பாகம்வைத்த வள்ளலேஅடியார்வாழ்வே
பங்கயப்பதமென்றும் பாங்குடன்போற்றிபோற்றி

அமூர்தலிங்கேசுவரர்சொல்-விருத்தம்.

துதித்தடிதொழுதுநிற்கும் தொண்டனேயெமாகேளாய்
விதித்தவனுலுமென்னை வெல்வதுங்கரிதுகண்டாய்
உதித்ததோர்தேவர்க்காக உனக்குயிர்தந்தேனுதம்
கதித்தவன்தொண்டர்க்குந்தன் கண்டனையகற்றுவாயே

(வசனம்) அகோவாரும்பிள்ளாய் எமதர்மனே பூலோகத்திலே அரசாட்சிசெய்யுமன்னவர்களைப்போலே தேவலோகத்திலேயும் அரசசெலுத்திவரும்படியாய் ஒவ்வொரு பிரகிருதிரூபங்களை ஆக்கல் அளித்தல் அழித்தலென்னும் தொழிலாளிகளை ஏற்படுத்தினதுபோலே பூலோகத்தாரும் அவ்விதமாய் நடந்துகொண்டு பாபகர்மங்களில் அதிகமாய்வியாபிக்காமலிருக்கும்பொருட்டு காலதண்டம் என்பதாய் உன்னையேற்படுத்தி அந்த தண்டனைசெய்யும்படியான வல்லமைக்காரனாயமைத்தோம் நீ அதையறியாமல் என்னடிதேடிப்பூசிக்கும்படியான சிவபக்தர்களை தொடர்ந்து வந்ததினாலே கோபங்கொண்டு உன்னைவீழ்த்தினோம் இனிமேல் இப்படிப்பட்ட தொண்டரிடத்தில் உன்னுடைய அஷ்டகஷ்டத்தைச்செய்யாமல் பயபக்தியுடனே எமபுரத்தையாண்டுகொண்டு க்ஷேமமாயிரும்பிள்ளாய் உன்னுடைய எமபுரத்துக்கு நடவும் எமா

கட்டியக்காரன்சொல்-விருத்தம்

எமனும்எழுந்திருந்து ஏகவேவிடைகொடுத்து
நாகத்தைவில்லாயேந்தி நகைத்துமுப்புரமெரித்து
ஏகனுமகனைப்போற்றி யெமனுந்தூதர்சூழ
வேகமாய்த்திக்குநோக்கி விமானமேல்நடந்திட்டானே

(வசனம்) அகோகேளும் சபையோர்களே இந்தப்பிரகாரமாய் அமூர்த்தலிங்கரான மிருத்யுஞ்செயருடைய அருள்பெற்றுபலவாறு போற்றிசெய்ய புத்திமதிசொல்லி அனுப்பிவைத்த எமதர்மராசாவானவன் தன்னைச்சூழ்ந்துவந்த தூதர்களோடு அதிதுரிதமாய் எமபுரம்வந்து நடப்பிக்கிறவிதங்காண்க.

இதுவுமது-விருத்தம்

மறையவனுமெய்த்த மாதவமுனிவர்கூடக்
குறைவிலாயமனை கூடிதென்புரத்திற்சென்று
நிறைந்தனன்மகுடஞ்சூடி நெடியதரசாள்வாயென்ன
பறையதுமுழங்கயேமன் பண்புடனரசாண்டானே

(வசனம்) இந்தப்பிரகாரமாய் பிர்மதேவர் தேவேந்திரர் மகாவிஷ்ணு முனிவர்கள் முதலான சகலமானபேரும் அந்தயேமனுடனே கூடப்போய் எமபுரப்பட்டாபிஷேகஞ் செய்வித்து அழியாத அரசாள்வாயென்று ஆசீர்வதித்துப்போயினர் அன்றுமுதல் காலனாகிய எமன் அரசாட்சி செய்துவருவதுகாண்க.

இதுவுமது-விருத்தம்

யேமனும்வீற்றிருந்து இனியது அவனைப்பார்த்து
க்ஷேமமேகிடைத்ததென்று சிறுவரேகேளீர்ப்போ
நேமமாய்சிவனுமத்தை நெஞ்சிடையினைப்போர்தம்பால்
நாமனுமெண்ணுறதென்று நவின்றுகட்டளையிட்டானே

(வசனம்) இந்தப்பிரகாரமாய் அரசுபெற்ற எமனானவன் தன்னுடைய தூதர்களைப்பார்த்து நமக்கு நன்மைகிடைத்தது இன்றுமுதல் சிவனையாவது விஷ்ணுவையாவது நினைத்துபக்திசெய்பவர்களிடத்திலே நம்முடைய விசாரணையில்லை அரசுசெலுத்தவாருங்களென்று கட்டளையிட்ட பிற்பாடு நடக்கிறவிதங்காண்க

இதுவுமது-விருத்தம்

தூதருங்கேட்டுநின்று துயரங்களைத்துறந்து
காதகஞ்செய்வோர்பக்கம் கடுகியேசொல்வோமென்றும்
நீதமாய்த்தேவர்சொன்ன நிறைதனைமறவோமென்றும்
வேதமார்க்கண்டன்முன்னே விளங்கியேவீற்றிருந்தார்

(வசனம்) இந்தப்பிரகாரமாகச்சொன்ன எமதர்மராசனுடைய ஆக்ஞையைக்கொண்டு தூதர்கள்இனிமேல் சிவபக்தர் விஷ்ணுபக்தர்இருக்குமிடத்திற்கு செல்வதில்லையென்றும் தேவர்களுடைய திருவாக்கின் அருள் தப்புவதில்லையென்றுஞ்சொல்லி வேதங்கள் ஓதப்பட்டஎமதர்மராசன்பக்கத்திலேதானே இருந்தார்கள்.

மார்க்கண்டன்சொல்-விருத்தம்

அன்பருக்கன்பராகி அடியவருக்கெளியராகி
செம்பொனின்பதங்காட்டி தீவினைதன்னையோட்டி



நம்பினயெந்தனுக்காய் நமன்றனையுதைத்தேவர்க்கும்
இன்பமாயருளைத்தந்தீர் யீசனேபோற்றிபோற்றி

(வசனம்) அகோசரணஞ்சரணமையா சுவாமி அன்பருக்கன்பராயும் அடியார்க்கடியாராயுமிருந்து பொற்பதந்தந்து முற்பவந்தனையோட்டிநம்பிவந்த எந்தனைக்காத்து நமனையுதைத்து தேவர்களுக்குஞ்சந்தோஷமுண்டாக்கியருளிய மிருத்யுஞ்செய மூர்த்தியேசரணஞ்சரணமையாசுவாமி

அமுர்தலிங்கேசுவரர்சொல்-விருத்தம்.

மெத்தவேதவங்கள்செய்ய மேவுமார்க்கண்டாகேளாய்
உத்தமாவுந்தனாலே உம்பர்களெவருமுய்ந்தார்
மெத்தவேசந்தோஷித்தேன் விளங்கவேவலபாகத்தில்
சுத்தனேயென்னைப்போற்றிச் சுகத்துடனிருந்திடாயே

(வசனம்) அகோவாரும்பிள்ளாய்மார்க்கண்டா உன்றனாலேதேவர்களுக்கும் அருந்தவத்தோர்களுக்குஞ்சிவபூசாதுரந்தரர்களுக்கும் அரியஉபக்தருத்திராக்ஷமணிகளுக்கும் எமபாதைநீக்கியிருக்க அனுக்கிரகித்தோம் சகலரும் சந்தோஷித்து மனங்களிக்க எனது சிவகணங்களுடனே கூடியிருவாரும்பிள்ளாய்மார்க்கண்டா

மார்க்கண்டன்சொல்-விருத்தம்

இருந்திடவருளிச்செய்தீர் எந்தன்மேல்கிருபைவைத்து
அருந்தவமிகுத்தவெந்த னன்னைபிதாக்களுக்கும்
பொருந்தியதவத்திலெங்கு புனிதர்களாகச்செய்து
இருந்திபகாட்சிநல்கத் திருவுளமகிழ்ந்திடீரே

(வசனம்) அகோசரணஞ்சரணமையா சுவாமியென்னைச் சிவகணங்களுடனே சேர்ந்திருக்கக்கிருபைசெய்தீர் அருந்தவத்தினால்மிகுந்தோராகிய என்தாய்தந்தையர் இருவருக்குந்திருக்காட்சிகொடுத்தருளவேணுமையாசுவாமி.

அமுர்தலிங்கேசுவரர்-விருத்தம்

அடியவர்தமக்குநாமும் அடக்கமாங்கேளாயிந்தப்
படிதனிற்பிறந்தபேர்கள் பத்தியாயெனைப்பூசித்தால்
குடியதாயவரிடத்தில் கூடியுமிருப்போமுண்டாய்
படியிலுன்தந்தைதாய்க்கும் பதவிதந்தருளுவோமே

(வசனம்) அகோவாரும்பிள்ளாய்மார்க்கண்டா என்னைப்போற்றிப் பூசிக்கப்பட்டவர்களுக்குள்ளே நான் அடக்கமானவனாகவாயிருந்து பூசிப்பவர்களிடத்தில் எக்காலமும் வாழ்ந்திருப்போம் என்னைப்பூசிப்பவர்களிடத்தில் வாழ்ந்திருப்போம்

ருப்பேன் எனக்குத்தொண்டுசெய்யும் உன்றாய் தந்தையருக்குங்காட்சியருளிச்செய்திடுவோம் மார்க்கண்டா

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

திருந்தவே அமுர்தலிங்கர் செல்வனுக்கிஃதுரைக்க
பெருந்தவத்தோர்கள்போற்றப் பிரிந்திடாதேவர்வாழ்த்த
பொருந்தியசிவனுமந்திரப்பொ இந்தமந்திரஞ்செபித்து
அருந்தவமிருகண்டேயர் ஆன்மிருச்சபைக்குவந்தார்

(வசனம்) இந்தப்பிரகாரமாய் தேவேந்திரமான அமுர்தலிங்கேசுவரர் அருளிச்செய்ய முப்பத்துமுக்கோடி தேவர்களும் புகழப்பட்ட மிருகண்டேயர் சபைக்குவருவதுகாண்க.

தரு இ-ம்-ஆகிரி-அடதாளம்.

பல்லவி.

முனிவர்வந்தாரே-மிருகண்டமுனிவர்வந்தாரே

அநுபல்லவி

பணிமலர்கொண்டு பத்திபோற்றிப்பூசிக்கும்
பாவைமருத்வதி தேவியுடன்கூடி (முனிவ)

சரணங்கள்.

பண்ணியதவத்தினால் புண்ணியந்தெரியுமென்று
பகர்ந்திடுபுலவோர் பழமொழிபொய்யாமல்
தண்ணியகைலாய நாதாருட்பெற
நற்றவமொருக்கொண் டாடியன்புகூற (முனிவ)
மக்கள்முகம்பார்த்தோர் துக்கமடையாரென்று
மாதவன்தன்னருள் கொண்டுவரந்தான்கொண்டு
அக்கரைபரசுதனும் தவத்தால்வந்த
அருந்தவமைந்தன்மார் கண்டனுடன்கூடி முனிவ
அஞ்சாமலிருப்போ மினிப்பிறவாமலே
அமரர்தமலரை யடைந்தோமென்றும்
பஞ்சாட்சரந் திருக்கண்செபித்துப்
பாங்காகைவேசன் பூசம்நினைத்து முனிவ

கட்டியக்காரன்சொல்விருத்தம்

வந்தமாமுனிவர்தாமும் மருத்வதிமாதுங்கூடி
பந்தமகன்மேருமிர்ந்தப் பார்க்கினிப்பிறவாவன்னம்



செந்தவஞ்செய்ததாலே சிருளமகவைமீன்று
அந்தமாகைலைவாழ்வை யடைந்தனமெனப்பணிந்தார்

(வசனம்) இந்தப்பிரகாரமாய்வந்த மாதவத்தில்மிகுந்த மிருகண்டேயரும் மருத்வதியம்மாளும் ஏகாக்ரசித்தராய் பக்திவிமோசனமடைந்தோம் இந்தபூமியில் இனிப்பிறந்து துன்பமடையாமல் அரியதவமியற்றினோம் ஆனதால்நல்ல சுகுணசீலனான குழந்தையைப்பெற்று அழகினையுடையகைலாயபதவியை அடைந்தோமென்று ஈஸ்வரனைத்தோத்திரஞ்செய்கிற விதங்காண்க.

மிருகண்டேயர் தரு இ-ம்-பிலகிரி-ஆதிதாளம்

பல்லவி.

கண்டோமெங்களித்தோம்-நித்தியானந்த
கடலிலென்றுங்குளித்தோம்

அநுபல்லவி.

அண்டர்தொழத்திருக் கடையூர்தனிலமர்ந்த
அமுர்தலிங்கேசனை அபிராமிநேசனை (கண்டு)

சரணங்கள்.

முத்திக்குவித்தாய் முளைத்தெழுஞ்சுடரை
முப்பத்துமூக்கோடி தேவர்களின்றுடரை
பத்தியாய்த்தொழுதுமுற் பவவினைகளைப்போக்கி
பசுபதியைக்கைலைக் பதிபதியைநோக்கி (கண்டு)
வேதாகமங்கள் புகழும்பிரக்கியாதனை
வினைதீர்க்கருள்தர விற்றபொற்பாதனை
தோதகவந்தெனமத் துடர்ந்தபெருமையைத்
துன்பமகற்றிப்பாலன் றந்தவுரிமையைக் (கண்டு)
திக்கனைத்தும்புகழ் கொண்டமாதேவனை
திருநம்பிரவிக் கடற்குருநாதனை
எக்கலையுமொழித் தருள்தந்தசீலனை
ஏமனையுதைத்தெழுப்பிய வனுகூலனை (கண்டு)

———*✿*———

மிருகண்டேயர்சொல்- விருத்தம்.

அடியவர்க்கெளியாய்போற்றி ஆதியேபரனேபோற்றி
படிதனிலேமன்வீழப் பதைத்திடவுதைத்தாய்போற்றி
கடிதினில்பாரன்றன்னைக் கண்ணிறைசாய்ந்தாய்போற்றி
வடிவுள்ளமதனைக்காய்ந்த வள்ளலேபோற்றிபோற்றி

(வசனம்) அரகரா சிவசிவா அடியவர்கெளியா அகோரதிரிபுராந்தகா ஆதிமத்தியாந்தரகித மார்க்கண்டனை அந்த கர்த்தா உனது அடியனை எனது தவக்கொழுந்தைக்காத்த சாம்பசிவனே அமுர்தலிங்கேசுவரா போற்றி போற்றி

அமுர்தலிங்கேசுவரர்சொல்-விருத்தம்.

அருந்தவமுனிவோர்களும் அடவியிற்றவமதிசெய்து
இருந்திடும்வேளைதன்னிற் பிடமதேறிவந்து
பொருந்திவேயுமக்குபால்யப் புத்திரனளித்தேன்கண்டாய்
திருந்தவுன்னடியாளோடுன் றிருப்பதஞ்சேருவாயே

(வசனம்) அகோவாரும் மிருகண்டமகாமுனியே நீங்கள் தம்பதிகளாயே தமாவெகுகாலமிருந்து செய்த தவத்துக்குமெச்சி புத்திரனை யருளினோம் அந்தவுனதுபுத்திரனென்றும் எனது பக்தசிரோமணியான மார்க்கண்டேயன் செய்யத்தொடங்கிய சிவபூசாமகிமையினாலே என்றும் பதினாறாகக்கொடுத்தோம் நீங்கள் அவனுடைய பிரீதியானவர்களானபடியால் உங்களுக்கும் கைலாய பதவியருளிச்செய்தோம் இன்றுமுதல் உங்களுக்குப் பாவபந்தவிமோசனமாய்விட்டது என்னுடைய சிவகணங்களுடனேகூடி வாழ்ந்திரும் மிருகண்டேயமகாமுனியே

மிருகண்டேயர்சொல்-விருத்தம்.

என்னிலாத்தவத்தினாலே யிகத்தினிலெவமிர்த
புண்ணியத்தலத்திற்சொர்க்கம் பொருந்தினோரொவருமில்லை
மன்னிலையுண்டமாயன் மறையவர்முதலோர்தம்மை
கண்ணினுற்காணப்பெற்றேன் கண்கண்டசாட்சிதானே

அரகரா ஆனந்தாடனானை என்னைப்போலெண்ணிறந்த தவமகிமையினாலே இகத்திலே எவர்களும் இந்தபுண்ணியதலத்திலே எங்களைத்தவிர சொர்க்கலோகமடைந்தோரொவருமில்லை இந்தப்பூமியிலே பிரமதேவர் மகாவிஷ்ணுமுதலான முப்பத்துமுக்கோடி தேவர்களையும் நாற்பத்தெண்ணாயிர ரிஷிகளையுங்கண்டுகளித்து சிவபதவியடைந்தோம் என்னையுடையான் அரகர அரகர.

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

சொர்க்கத்துக்கதிபனாகுஞ் சோதியோர்முதலானோரும்
முக்கண்ணனருளினாலே முனிமிருகண்டர்தம்மை



ஒக்கவேகூட்டிக்கொண்டு வுயர்ந்தநற்பதவிசேர
மிக்கநற்றவமார்க்கண்டன் மெய்ப்படிவணங்கிச்சொல்வான்

(வசனம்) அகோகேளும் சபையோர்களே முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் யட்சகின்னரகிம்புருடர்ஆதாதிசகலமானவர்களுடனே மிருகண்டமகாமுனியும் மருத்வதிதேவியும் சுவர்க்கலோகமடைந்தபின்பு மார்க்கண்டேயமகாமுனிவரானவர் லோகானுக்கிரகமாய் அடிவணங்கி அமுர்தலிங்கேஸ்வரரை வரங்கேட்ட தருகரண்க

தரு-இராகம்-பூபாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

மார்க்கண்டன்சொல்

அத்தா திருச்சடையு அமுர்தலிங்கேசா
அரியவரங்கொடுத் தன்னை தந்தையைக்காத்திர்
பத்தாவதென்றும் பதினாறெனக்கீந்தீர்
பாரிலெமன்வராப் பரிவெனக்கருள்வீர்

அமுர்தலிங்கேசர்சொல்

உத்தமமார்க்கண்டா உனதுதாய்தந்தையும்
உம்பர்களுடன்கூடி உலையச்சித்தமகிழ்ந்தேன்
இத்தலந்தனிலென்றும் எமன்வாராவரம்
இன்றுதந்தேனினி என்னமார்க்கண்டா

மார்க்கண்டன்சொல்

இந்தமகிமையை யெழுதிப்படிப்போர்க்கும்
இச்சையுடன்வந்து கேட்டுமகிழ்வோர்க்கும்
பந்தபாசமகற்றிப் பதவிதந்திடும்வரம்
பரிவாகத்தந்தருளும் பசுபதிநாதா

அமுர்தலிங்கேசர்

அவனியிற்றினமிதை யெழுதிப்படிப்போர்க்கும்
அன்புடனேவந்து தொழுதடிபணிவோர்க்கும்
தவணிலதன்னில் தவமதிருப்போர்க்கும்
தவவுடனேமோட்சம் தந்தேன்மார்க்கண்டா

கட்டியக்காரன்சொல்-விருத்தம்

பவக்கடல்கடந்துமுக்கட் பசுபதிவிடையிலேறி
அவனியிலமரர்தேவ ரனைவருமிழ்ச்சிகூற
தவமிருகண்டேயர்க்குத் தனயனையருளிச்செய்து
சிவபதமவர்க்கீய்ந்து சிருடன்கயிலைசென்றார்

(வசனம்) அகோகேளும் சிவன்முத்தர்களே பிறவியென்னும் சமுத்திரத்தினின்றுங்கடத்தி யருள்கொடுக்கப்பட்ட பரமசிவனுடையதிருக்கைலையைவிட்டு ரிஷியவதாரனாகப் பூலோகத்துக்குவந்து மாதவ மிருகண்டுமிருகண்டேயருக்கு நல்லதவத்தையுடைய சிவகணத்திலொருவனைக்குழந்தையாக திருவருள்புரிந்து அக்குழந்தைகாலம்பதினாறெனவயதுகொடுத்துவைம்மை தன்னுடைய பக்தர்பாலனுகாக்கல் ஆகவாபனஞ்செய்து அந்தாயத்தினை குழந்தையவனையும் தன்னுடைய திருக்கைலைக்கழைத்துக்கொண்டு செய்தருளினார் என்பதால் ஸ்ரீஸ்காந்த மகாபுராணத்திலே சொல்லியிருக்கிறபடி சகலபுண்ணிய புருஷர்க்கும் உபயோகப்படும்பொருட்டு தமிழிலே நாடகமாயியற்றப்பட்டது.

விருத்தம்.

திக்கெலாங்கங்கை தங்கிய திவ்வியகருணைகொண்டு
பங்கயமலருஞ்சூழும் பார்வதிபாகனுக்கும்
எங்கணுநிறைந்தவாமே தேவர்க்குநற்றவத்தோருக்கும்
மார்க்கண்டனுக்கும் நாயமங்களஞ்சொல்வேனே.

மங்களம்-தரு-இம்-பந்துவராளி. ஆதிதாளம்

பல்லவி.

மங்களமார்க்கண்டனுக்கும் — மங்களம்
மாதவமார்க்கண்டனுக்கும் — மங்களம்

அநுபல்லவி.

திங்களணிவேணியர்க்கும் — திருக்கடையூரீசனுக்கும்
மங்கைபரிபாலியற்கும் — மாதவத்தோர்களுக்கும் (மங்கள)

சரணங்கள்.

ஐங்கரன்முருகனுக்கும் — அம்மைவள்ளிதெய்வானைக்கும்
சங்குசக்கரத்தோனுக்கும் — சதுமுகபிரமனுக்கும் (மங்கள)
சகலினயுமைத்திருக் — கடையூரிநாதனுக்கும்
கெவிருகண்டனுக்கும் — தேவிமருத்வதியர்க்கும் (மங்கள)
மாதவத்தோர்களுக்கும் — மன்னுமன்னரவர்கட்கும்
சூதபுராணியர்முதல் — சீதிவியாபகர்க்கும் (மங்கள)

மார்க்கண்டேயர் நாடகம்.

முற்றிற்று.